
கல்கி



KALKI
24-3-1968
40
காசு







அவர்கள் தோற்றத்திலே
ஒற்றுமையில்லை, ஆனால்
அவர்கள் அனைவரும்
உபயோகிப்பது
பரிபூரண ஒப்பனைச்
சாதனமான

க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன்


இழைவான மென்மை வாய்ந்த
க்ருக்ஸ் லாக்டோ-காலமைன் எத்தகைய
குறைபாட்டையும் ஒளித்துவிடும்
பரிபூரணஒப்பனைச் சாதனம்.
காலதோறும் சருமத்தின்மீது தடவுங்கள்
லாக்டோ-காலமைன். இதமான
ஆற்றும் குணமுள்ள காலமைன்,
செறிவூட்டும் செயல் திறனுள்ள
விட்ச் ஹேஸல் இரண்டும் இணைந்து
உங்கள் சருமத்திற்கு எழிலூட்டும்.

க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன்

மாசில்லா அழகுக்கு!

மேலும் உங்களுக்கு உரிய அழகு
சாதனங்கள் லாக்டோ-காலமைன்
டால்கம் பவுடர் மற்றும் க்ரீம்.

கலவிட்டுமுடியாத க்ருக்ஸ் லீலும்,
க்ருக்ஸ் சின்னமும் இருக்கிறதா
என்று கவனித்து வாங்குங்கள்.
க்ருக்ஸ் இன்டர்ஃப்ரான் லிமிடெட், பம்பாய்-25.




கல்கி
பொருளடக்கம்

பிலவங்க பங்குனி 11 - மார்ச் 24

போதனை மொழி ... - 3
ராஜாஜியின் கருத்துக்கள் - 6
தலைநகரில் ஒரு கலை விழா - 10
ஷேக்ஸ்பியர் சுந்தரம் - 15
மகாபாரதம் - 18
வில்லின் வண்ணங்கள் .... - 22
பகலுணவுத் திட்டம் - 25
படகில் பாவையர் - 29
எழுத்தை ஆள்வோர் - 30
நன்றியுள்ள நாயா ? .... - 35
பொன்னிவனத்துப் பூங்குயில் - 37
ஆறறிவின் திகைப்பு - 50
அழகின் அடிமை - 62
ஒருமைப்பாடு வீடு - 72
தோல்வி - 77

கல்கியில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பட விளக்கம் 16-ம் பக்கம் பார்க்க


தீப்தி

இல்லந்தோறும்
பிரபலமாகிவிட்ட
பெயர்

வியாபாரச் சின்னமாகிய "தீப்தி" என்பது உயர்தரத்தின் சின்னமாக விளங்குகிறது. தீப்தி லாந்தர்கள் இந்தியா முழுவதிலும் இல்லங்களுக்கு இன்றியமையாத சாதனங்கள் என்று பிரக்யாதி பெற்றுவிட்டன. காஸ் ஜனதா ஸ்டவ்களின் குக்கர்களும் இந்தியாவின் அத்தியாவசியமான பொருளென்று பெயர் பெற்றுவிட்டன. இயக்க எளிதாயும், உறுதியான அமைப்புடையதாயும் சிறப்பாகச் சேவை புரிவதுமான இந்த ஸ்டவ்களின் திரியகைக் குக்கர் அடுப்புகள் நேரத்தையும் எரிபொருள் செலவையும் மிச்சமாக்கும்.

தீப்தி எனாமல் சாமான்கள் மற்ற தீப்தி தயாரிப்புகளுக்கு இணையான மதிப்பும் பெருமையும் உடையவை.

தி ஓரியண்டல் மெட்டல்
இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்,
67, 77, பிபின் பிஹாரி கங்குலி தெரு,
கல்கத்தா - 12.



தீப்தி லாந்தர்கள்





காஸ் ஜனதா



எனமல் சாமான்கள்

Kalpana


அந்த இடம் போதாதா அண்ணே?
அண்ணா


நான் காங்கிரஸ்
நான் மைசூர்
நிஜலிங்கப்பா



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ★ இதழ் 34

போதனைமொழி—தெளிவு வேண்டும்

இந்திய யூனியன் ஆட்சியில் ஆங்கிலத்தின் இடம் என்ன என்பது தெளிவாக வேண்டியது எவ்வளவு அவசியமோ, அந்த அளவுக்குத் தமிழகத்தின் கல்வித் திட்டத்தில் ஆங்கிலத்தின் இடம் என்ன என்பதும் திட்டவட்டமாக உறுதிசெய்யப்படுவதும் அவசியம்.

ஆங்கிலமே இந்திய யூனியனின் ஆட்சி மொழியாகவும், ராஜ்யங்களுக்கிடையேயான தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும் என்று தமிழக அரசு இடையறாமல் எடுத்தியம்பி வருவது பாராட்டுக்குரியது. பாரதத்திலேயே தமிழக அரசாங்கம்தான் இப்போராட்டத்தில் முன்னணி வகிக்கிறது. நாடு முழுவதிலுமுள்ள மக்களில் எந்த சாராருக்கும் அநுகூலமோ பிரதிகூலமோ இல்லாமல் அனைவருக்கும் சமமாக இருக்கக்கூடியதும் நிர்வாகத் துறையில் சிறப்பாக இயங்கக் கூடியதும் ஆங்கிலமே ஆதலால் குறுகியகதேசிய உணர்ச்சியால் அம்மொழியை அகற்றலாகாது என்பது ராஜாஜியின் கருத்து. இந்தக் கருத்தை அனுசரித்துத்தான் தி.மு.க.வினரும் ஆங்கிலத்தின் ஆட்சிமொழி அந்தஸ்து மாறலாகாது என்கின்றனர். எனவே, தமிழர்களாகிய நாமும் நம்முடைய குறுகிய மொழிப் பற்றினால் ஆங்கிலப் பயிற்சிக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். அகில பாரதத்தில் ஆங்கிலத்தின் இடத்தைக் குறித்து ஒரு முடிவுக்கு வந்துள்ள தி.மு.க.வினர் தமிழ் நாட்டில் அம்மொழி பெற வேண்டிய அந்தஸ்து குறித்தும் ஒரு தெளிவான கொள்கையைக்-கடைப்பிடிக்க வேண்டும். யூனியன் சர்க்காரில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று போராடும்போது நம் தமிழக மாணவர்களுக்குப் போதிய ஆங்கிலப் பயிற்சி அடைவதற்கு வழிகள் அளிக்காமல் இருந்தால் போராட்டத்துக்குப் பொருளே இல்லாமல் போய்விடும்.

தமிழைப் போதனை மொழியாக்கிவிட்டு ஆங்கிலத்தையும் தனிப் பாடமாக வைத்து அதில் திறமையான பயிற்சி தர வேண்டும் என்பதே தமிழக அரசாங்கத்தின் கொள்கையாகத் தெரிகிறது. ஆனால் ராஜாஜி பல முறை எடுத்துக்காட்டியதுபோல் ஓர் அந்நிய மொழியைத் தனிப்பாடமாகப் பயில்வது பயன் தராது. நடைமுறைத் தொடர்புள்ள விஷயங்களில் — பாட திட்டங்களில் — அம்மொழியைக் கையாள்வதாலேயே சரியான தேர்ச்சி பெற முடியும். வீட்டில் அன்றாடம் பேசிப் பழகும் தாய்மொழி இதற்கு விலக்காகும். இயற்கையாக நமக்கு வாய்த்துள்ள தாய்மொழி அறிவை இலக்கியத்தின் மூலம் விருத்தி செய்து கொள்ளமுடியும். எனவே, 'தமிழ் போதனை மொழி; ஆங்கிலத்தில் தனிப் பாடம்' என்பதைவிட 'ஆங்கிலம் போதனை மொழி; தமிழில் இலக்கியப் பயிற்சி' என்பதே மாணவர் நலனுக்குகந்த கல்வித் திட்டமாக இருக்கும்.

மற்றொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். தமிழில் சிறப்பு இலக்கியம் ஏற்கனவே உள்ளது; அது வளர்ந்தும் வருகிறது. ஆனால் பௌதிகப் பாடத் திட்டத்திலுள்ள விஷயங்கள் இனித்தான் தமிழில் உருவாக வேண்டும்.

பௌதிகப் பயிற்சிக்கு அகில உலகச் செலாவணியாகிய ஆங்கிலச் சொற்களையே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை ஆசிரியர்கள் அனைவருமே ஆதரிக்கின்றனர். இதுவே டி. கே. சி. அவர்களுடைய முடிவான கருத்தும் ஆகும். ஆனபடியால் ராஜாஜி கூறிவருவது போல் பௌதிகப் பயிற்சிக்குத் தரமான ஆங்கிலப் பாட புத்தகங்களையே மூலமாகக் கொண்டு ஆசிரியர்கள் அவற்றை விளக்கும்போது தமிழையும் பயன்படுத்திக் கொள்வது உகந்த திட்டமாயிருக்கும்.

அடுத்த ஆண்டிலிருந்து அரசாங்கக் கல்லூரிகளில் ஆங்கிலத்தின் இடம் என்ன என்பதை இப்போது நிச்சயம் செய்துவிட வேண்டும். ''தமிழில்தான் போதனை; ஆங்கிலமும் ஒரு பாடமாக

இருக்கும்'' என்ற ஏற்பாடு இப்போது ஆங்கிலம் பெற்றுள்ள அந்தஸ்தைக் குறைப்பதேயாகும். பள்ளிகளில் ஆங்கிலத்தைப் போதனை மொழியாகக் கொண்டவர்களும் நம் ராஜ்யத்திலுள்ள சிறுபான்மை மொழியினரும் மட்டுமே ஆங்கிலத்தைக் கல்லூரிகளில் போதனை மொழியாகக் கொள்ளலாம்; மற்றவர்கள் தமிழில்தான் படித்தாக வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யப்படுமாயின் அது மாணவர்களுக்குள்ள சுதந்திரத்தையும் முன்னேற்ற வாய்ப்புக்களையும் பறிப்பதேயாகும். மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் எதிர்காலத்தை நினைந்தே செயலாற்றுகிறார்கள். அகில இந்தியாவிலும் வெளிநாடுகளிலும்கூட பணி செய்யும் வாய்ப்புக்களைத் தரும் ஆங்கிலத்தைத் தான் பெரும்பான்மையான மாணவர்கள் தேர்வு செய்வார்கள். இவர்கள் அரசாங்கக் கல்லூரிகளை நாடாமல் தனியார் கல்லூரிகளையே நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இப்படி நடக்காமல் தவிர்க்க வேண்டும்.

என்ன சேதி?

வேலை வாய்ப்புக்கள்

சேலம்கோட்டையிலிருந்து ஒரு செய்தி வருகிறது. ஐம்பது பஸ் கண்டக்டர் உத்தியோகம் காலியிருந்ததாம். அதற்கு வந்த விண்ணப்பங்கள் எத்தனை தெரியுமா? 10,000. தேசத்தில் இருபதாண்டுகளாக காங்கிரஸ் நடத்திய ஆட்சியில் தொழில் வளர்ச்சியும், வேலை வாய்ப்புக்களும் எவ்வளவு பெருகியிருக்கின்றன என்பதை இந்த ஒரு சம்பவம் போதும் எடுத்து கூற! ஒரு பானை சோற்றின் பதம் பார்க்க ஒரு சோறு போகாதா?

இறைவனுக்கு நன்றி

தில்லி உயர்நீதி மன்றத்தில் பட்டப் பகலில் நீதிபதி க்ரோவர் தாக்கப்பட்டார் என்ற செய்தி கேட்டுத் தேசமே அலறி விட்டது. தேசத்தின் தலைநகரில், அதிலும் உயர்நீதி மன்றத்தில் இப்படி நடந்திருக்கிறது என்பதைப் பார்க்க, பாதுகாப்புத் துறை யிருக்கிறதா என்றுகூட நாட்டில் எண்ணத் தொடங்கிவிட்டனர். உடன் இருந்த பிரதம நீதிபதி இதயதுல்லாவும், மற்ற நீதிபதி ஸ்ரீ வைத்தியலிங்கமும் சமயத்தில் விரைந்து உதவி திரு க்ரோவரைக் காப்பாற்றியதோடு, அக்கிரமம் இழைக்க வந்தவனைத் தப்பிப்போக விடாமல் பற்றி நீதியின் வசம் ஒப்புவித்திருக்கின்றனர். பெரிய தீங்கு நேராமல் க்ரோவர் காப்பாற்றப்பட்டதற்கு நாட்டில் ஒவ்வொரு உள்ளமுமே இறைவனுக்கு நன்றி செலுத்துகிறது.

மூன்று ஆலைகள்

ரூர்கேலா, பிலாய், துர்க்காப்பூர் ஆகிய மூன்று உருக்காலைகளுக்கும் சேர்ந்து ஏற்பட்டுள்ள நஷ்டம் 73 கோடி ரூபாய்க்கும் மேல் என்று மந்திரி மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார். ஆனால் இது வரை இவற்றில் முடக்கப்பட்ட மூலதனம் எவ்வளவு தெரியுமா? 914 கோடி ரூபாய்.

இவ்வளவு மூலதனம் தனியார் கையில் கிடைத்திருந்தால் பெருவாரியான லாபம் கிடைக்க வழி கண்டிருப்பார்கள். சர்க்கார் துறையில் 'அதிக முதலீடு - விளைவு அதிக நஷ்டம்!' என்பதுதான் சித்தாந்தமாக இருந்து வருகிறது!

காமகோடியின் கருணைமொழி



பிறப்பு — இறப்பு இரண்டும் நமக்கு இருப்பது நன்றாகத் தெரிகிறது பிறப்பு — இறப்பு இந்த இரண்டுக்கும் காரணம் என்ன? பிறப்புக்குக் காரணம் காமம். இறப்புக்குக் காரணம் காலன்.

காமம் என்பது இல்லாமற் போனால் உற்பத்தி என்பதே கிடையாது. காலம் என்பது இல்லாவிட்டால் அழிவே கிடையாது. ஆகவே நாம் காமம் காலன் இரண்டையும் **வென்றாக** வேண்டும். அதற்காக நாம் போய்ச் சரணடைகிற ஈசுவரன் எப்படி இருக்கிறான்?

காமனைக் கண்ணால் எரித்தவராம்
காலனைக் காலால் உதைத்தவராம்

தன் கண்ணாலேயே காமனை எரித்தவன். காமனையே எரித்துவிட்டால் உற்பத்தி இல்லை. காலாலே காலனைச் சங்காரம் பண்ணினார். ஆகையால் பரமேசுவரனிடத்தில் போனால் நமக்குப் பிறப்பு இல்லை; இறப்பு இல்லை.


கல்கி
புத்தாண்டு மலரில்
கோமகள்
எழுதும்
இனிக்கும் நினைவுகள்
புதிய நாவல்
ஆரம்பமாகிறது



தங்கக் கட்டுப்பாடு பற்றிப் பேசப்படுகிறது. தங்கக் கட்டுப்பாட்டினுல் ரூபாயின் மதிப்பை நிலைநாட்டவோ, அந்நியச் செலாவணிப் பிரச்னையைத் தீர்க்கவோ முடியாது. இந்தத் திட்டத்தால் மிகுந்த தேர்ச்சி பெற்ற பொற்கொல்லர்களுக்கு வறுமையும் துன்பமும் ஏற்படுவதே மீதமாகும்.

சர்க்காருடைய செலவைக் கணிசமாகக் குறைக்க வேண்டிய பிரச்னை இப்போது உச்சகட்டத்தை அடைந்திருக்கிறது. இதற்குச் சர்க்கார் அமைப்பு புரட்சிகரமாக மாறியாக வேண்டும். சட்டப்படி இன்று ஆட்சி பீடத்தில் இடம் பெற்றுள்ளவர்கள், தாமாகவே தமது அதிகாரத்தை விட்டுக் கொடுத்து, திறமை வாய்ந்த பன்னிரண்டு பேர் கொண்ட ஒரு தேசியக் குழுவிடம் பொறுப்பை ஒப்புவிக்க வேண்டும். பிரதம மந்திரியும் இன்றைய மந்திரிசபையிலுள்ள ஒருசில முக்கியஸ்தர்களும் அரசாங்கத்தில் தொடர்ந்து இருந்து வரலாம். ஆனால் இதனுல் கட்சிச் சார்பற்றவர்களின் கையில் ஒப்புவிக்கப்படும் பொறுப்புக்குக் குந்தகம் ஏற்படக் கூடாது. சர்க்கார் செலவு கணிசமாகக் குறைக்கப்பட்டு நம்முடைய ரூபாய் நாணயத்துக்குப் புத்துயிர் தரப்படும் வரையில் கட்சிப் பற்றற்ற உறுதி வாய்ந்த நிர்வாகிகளிடமே இறுதிப்பொறுப்பு இருக்கவேண்டும்.

ஃஃஃ

காம இலக்கியமும் மற்ற ஆபாசங்களும் நம்மை அருவருக்கச் செய்யும் அசுத்தங்களாகும். அவை தீங்கு விளைவிப்பது வாஸ்தவம். ஆனாலும் அவ்வப்போது ஓடிக் கொண்டிருக்கும் திரைப்படங்களின் சில காட்சிகளைத் தேர்ந்தெடுத்து மக்களின் அபிமானப் பத்திரிகைகளில் வெளியிடுவதால் ஏற்படும் தீங்கு அதனினும் பெரிது. சினிமாக் காட்சிக்கு விளம்பரமாயிருப்பது மட்டுமின்றி இந்தப் படங்கள் மக்களைக் கெட்ட எண்ணத்தில் தூண்டி விடுகின்றன. 'பால் உந்தலை' இவை கிளறி விடுகின்றன. இயற்கையாகவே உள்ள இந்த உணர்ச்சிக்கு இப்படி ஓர் உதவி அளிக்க வேண்டியது அவசியமில்லை. சில செய்திப் பத்திரிகைகளில் இப்படங்கள் முழுப் பக்கமும் பிரசுரிக்கப்படுகின்றன. இது நம் இளைஞர்கள் மீது பாதகமான விளைவையே ஏற்படுத்துகிறது. அமெரிக்காவில் இவ்விஷயமாக ஏற்பட்டு வரும் தீய விளைவுகளைக் கண்டு அந்நாட்டுத் துப்பறியும் இலாகா டைரக்டர் தீவிரமாகக் கண்டித்திருக்கிறார். இந்தத் தீமைகளை நாமும் தவிர்க்க வேண்டுமாயின் பெரிய பெரிய படங்களுடன் சினிமா விமரிசனம் செய்வதையும் விளம்பரம் செய்வதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஃஃஃ

சமீபத்தில் கள்ளுக்கடை வியாபாரத்தில் ஏகபோக்கியத்தை உண்டாக்கி, அதனுல் வருமானத்தைப் பெருக்கிக் கொண்டுள்ள சில ராஜ்ய அரசாங்கங்கள் பெருமகிழ்ச்சிகொண்டு தம்மைத் தாமே பாராட்டிக் கொள்கின்றன. இவ்வாறு அரசியல் சாஸனம் கூறும் கொள்கைகளைப் புறக்கணித்து, மத்திய சர்க்கார் ஒப்புக் கொண்டுள்ள கொள்கையையும் புறக்கணித்து, வருமானத்தைப் பெருக்கிக் கொள்பவர்கள் அதில் மகிழ்வது சிறிதும் தகாது. ஏழையின் தர்ம உணர்வுக்கும் பண வசதிக்கும் ஊறு உண்டாக்கி வருமானம் ஈட்டுவது உண்மையில் லாபமேயில்லை. இது ஒரு தேசிய நஷ்டம். மதுவிலக்கை எப்போது அமுலுக்குக் கொண்டு வரலாம் என்று தேதி நிர்ணயிப்பதற்காக ஸ்ரீ ஸி. ஆர். நரசிம்மன் 1956ம் ஆண்டு மார்ச் 2ந் தேதி மக்கள் சபையில் ஓர் அதிகாரச் சார்பற்ற தீர்மானம் கொண்டு வந்தார். இது பற்றிப் பூரணமாக விவாதம் நடந்து 1956 மார்ச் 31ந் தேதி மக்கள் சபை கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது.

> மதுவிலக்கை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு முக்கியமான அம்சமாகக் கருத வேண்டும் என்பது இச்சபையின் கருத்து. தேசம் முழுவதும் விரைவாகவும் திறமையாகவும் மது-விலக்கை அமுல் செய்வதற்கு உரியதோர் திட்டத்தைத் திட்டக் கமிஷன் வகுக்க வேண்டும் என்று இச்சபை சிபாரிசு செய்கிறது.

இத்தீர்மானம் இந்திய சர்க்காரின் சார்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 29ம் அத்தியாயத்தில் 20வது பத்தி அமைக்கப்பட்டது. அது பின்வருமாறு கூறுகிறது. ''குறிப்பிட்ட ஒரு காலகெடுவுக்குள் மதுவிலக்கை அமுல் படுத்துவதற்கு உறுதி செய்யும் வகையில் படிப்படியாகத் திட்டங்கள் வகுக்குமாறு ராஜ்ய அரசாங்கங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.''

இவ்வாறு கூறும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும், சர்க்கார், பார்லிமெண்ட் ஆகியவற்றுல் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதாகும். அதில் ஒரு முக்கிய அங்கமே மதுவிலக்குக் கொள்கை.

இப்போது சில ராஜ்ய சர்க்கார்கள் மாயப் பிரமையான ஒரு வருமானத்துக்காகக் கள்ளுக்கடைகளைத் திறந்திருப்பது இந்திய சர்க்கார் 1956ல் எடுத்த முடிவை முற்றிலும் மீறுவதாகும். தேசம் முழுவதற்கும் குறிப்பாக ஏழைப் பெண்மணிகளுக்கு அளித்த வாக்குறுதி இப்போது தகர்க்கப்பட்டிருக்கிறது.

ஃஃஃ

சில ராஜ்யங்கள் மக்களின் சூதாட்ட உணர்ச்சிக்கு ஆழமாக வித்தூன்றுவது

கண்டு நான் முற்றிலும் வருத்தம் கொள்கிறேன். எந்த விதமான லாட்டரிச் சீட்டாயினும் ஒருவர் லாபம் பெற வேண்டுமானால் அவரைப் போலவே ஆர்வத்துடன் இருந்த பலப்பல ஏழைகள் நஷ்டப்பட்டாக வேண்டும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள மாட்டார்களா? லாட்டரிச் சீட்டில் கிடைக்கும் லாபம் ஆகாயத்திலிருந்து கிடைப்பதல்ல.

ஃஃஃ

வகுப்புவாத அரசியலையும் தனியார் சேனைகள் பீதியை உண்டாக்கி வருவதையும் கண்டித்து வெகு அழகாகப் பேசியிருக்கிறார் ஸ்ரீ சவான். ஆனால் உபதேசத்தினால் சர்க்கார் நடத்த முடியாது. சட்டப்படி உறுதியான நடவடிக்கை எடுக்காமல் உபதேசங்கள் மூலம் அரசாங்கம் நடத்த உள்துறை மந்திரி முயல்கிறாரா? இது நல்ல நோக்கமாக இருக்கலாம். ஆனால் உடனடியான நடைமுறைக்கு உதவாது. மகான்கள் வெறுமே கண்டனம் தெரிவிப்பதாலேயே லட்சியத்தை அடைய முடியும். ஆனால் உலகாயதமான அதிகாரத்தின் அடிப்படையில் மக்களைக் கவரும் ஒருவர் வெறும் கண்டனப் பேச்சால் நோக்கத்தை அடைய முடியாது.

ஃஃஃ

கம்யூனிஸ்டுகளுடன் உறவாடுவது எவ்வளவு ஆபத்தானது என்பதை மத்தியசர்க்காரோ, ராஜ்ய சர்க்கார்களோ புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. கம்யூனிஸ்டுகள் தங்கள் கொள்கைகளைப் பரப்பவும் மர்மமான முறையில் தங்கள் தலைமையை நிலைப்படுத்திக் கொள்ளவும் சுதந்திரம் தரப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் என்றோ ஒரு நாள் அரசாங்கங்கள் தம் தவற்றை உணரக் கூடும். ஆனால் குதிரை பறிபோனபின் லாயத்தைப் பூட்டிப் பயனில்லை.

தமிழக அரசாங்கத்தை நான் பாராட்டி வருகிறேன்; அதற்கு நட்புடன் உதவியும் அளித்து வருகிறேன்; எனினும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் அவர்கள் கொண்டுள்ள தொடர்பை நான் ஒப்புக் கொள்ளவில்லை. தங்களுடைய பலத்தைக் குறித்துத் தி.மு.க. இவ்வளவு கலவரப்படத் தேவையில்லை. காங்கிரஸைப் போலவே கம்யூனிஸ்டையும் அவர்கள் எதிரியாகக் கொண்டு தன்னம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். இது ஏதோ பட்சபாதத்தில் சொல்கிற பேச்சல்ல. அதிகாரபூர்வமாகக் கம்யூனிஸ்ட்களுடன் தொடர்பு கொள்ளும் ஆபத்தை உணர்ந்தே, அந்த அடிப்படையில் சொல்கிறேன். தொழில்துறையின் இணக்கத்துக்கும், முன்னேற்றத்துக்கும் கம்யூனிஸ்ட்கள் தீவிர எதிரிகள். ஒழுங்கீனமான ஒரு சூழ்நிலை தேசத்தில் உண்டாகாதா என்றே அவர்கள் வேட்கையுடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஃஃஃ

அணு ஆயுதங்களை விஸ்தரிக்கக் கூடாது என்று ஒப்பந்தம் ஏற்படுவதற்காகத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வாழ வேண்டும் என்று விரும்பும் எல்லா நாகரிக நாடுகளும் இம்முயற்சிக்கு ஆக்கரீதியில் உதவி புரிய வேண்டும். இது அமெரிக்காவுக்கோ, ரஷ்யாவுக்கோ செய்கிற உதவியல்ல; தனக்கே தான் செய்து கொள்ளும் உதவியாகும். இந்தியாவைப் பொறுத்தமட்டில் சீனமே பீதியை உண்டாக்கும் பிரச்னை. நம் தற்காப்புக்கான ஒரே வழி அமெரிக்காவுடன் ஓர் உறுதியான பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதுதான். அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் ஒப்பந்தத்தில் புது ஷரத்துக்களைச் சேர்க்கச் சொல்வதால் நம் பிரச்னை தீர்ந்துவிடாது.

ஃஃஃ

மருந்து கொடுப்பதிலும் பத்தியம் வைப்பதிலும் வைத்தியர் எவ்வளவு கவனம் காட்டுகிறாரோ அவ்வளவு கவனத்துடனேயே சர்க்கார் ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும். நிதிஉதவி பெறுவதால் ஏழை மகிழ்ந்து உதவியவருக்கு வோட்டுப் போட்டாலும்கூட, ஒரு வேலையும் தராமல் உபகாரத் தொகை தருவது ஏழைகளை நிரந்தரமாக நாசம் செய்வதேயாகும். ஏழை மக்களுக்குள்ள தடங்கல்களையும் பிரதிகூல நிலையையும் நீக்கி, அவர்கள் தமது தேவையை உழைத்துப் பெறுவதற்கே அரசாங்கம் உதவ வேண்டும். ஏழையின் கைக்கு வருகிற ஒவ்வொரு ரூபாயையும் அவன் சம்பாதிப்பதற்குச் சர்க்கார் வாய்ப்புக்களைச் செய்து தரலாம். ஆனால் அவன் தானே உழைத்துச் சம்பாதித்த பணம் என்று உணரும் சூழ்நிலை இருக்க வேண்டும். சர்க்கார் ஏழைகளுக்காக என்னவெல்லாம் செய்துவிட்டது என்பதை ஓயாமல் நினைவுபடுத்திக் கொண்டிருப்பதை விட, ஏழைகள் எப்படிக் கடுமையாக உழைத்துத் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்கிறார்கள் என்பதை அழுத்திச் சொல்வது உத்தமமாயிருக்கும். அரசியல்வாதிகளுக்கு இது ஏற்காது. ஆனால் அதிகாரப் பசி கொண்ட அரசியல்வாதிகளுக்கு எது ஏற்கும் என்பதைச் சார்ந்ததல்ல உண்மையான சமூக நலன். சத்தியத்தையும், மனித இயற்கையையும் சார்ந்ததே அது.

ஃஃஃ

சென்னை மாநகரத்தில் வாழ்க்கைச் செலவுப்புள்ளி குறைந்திருப்பதாகக் காட்டும் பட்டியலை ஆராய்ந்து பார்க்கும்போது, சர்க்காரின் கன்ட்ரோல்கள் இல்லாத பண்டங்கள் நன்கு உற்பத்தியானால் அவற்றின் விலைகள் குறைவது நிரூபணமாகிறது. சர்க்கார் கட்டுப்பாடுகள் தேவையில்லை என்பதற்கும், போட்டி போட்டுச் சுதந்திரமாக உற்பத்தி செய்யும் போது நல்ல திறமை காட்டப்படுகிறது என்பதற்கும் இது சான்று. உணவு உற்பத்தி செய்வோர் மீது சட்டப்படி விலைக் கட்டுப்பாடு விதிக்கும் அநீதத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது. நகரமக்களுக்கு விவசாயிகளைவிட நல்ல ஊதியம் கிடைக்கிறது. ஆனால் கடுமையாக

வாழ்த்துகிறோம்!

திரு ஆர். எம். மகாதேவன் அவர்கள் தமிழகத்தின் புதிய இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருப்பதை அறிந்து



திரு எஃப். வி. அருள்

மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். போலீஸ் இலாகாவில் திறம்படப் பணியாற்றுவதற்கு மற்ற தகுதிகளுடன் முக்கியமாக இரண்டு குணாதிசயங்கள் தேவை. கண்டிப்பு இருக்கவேண்டும்; அதே சமயம் கனிவும் வேண்டும். திரு ஆர். எம். மகாதேவன் அவர்களது முகத்தோற்றத்திலேயே இந்த இரண்டு குணாதிசயங்களும் பிரதிபலிப்பதை அனைவரும் காணலாம். அவருடன் நெருங்கிப் பழகியுள்ளவர்கள் இக்குணங்கள் அவரிடம் பொருந்தி இருப்பதை நன்கு உணர்ந்திருப்பார்கள். எல்லாவிதங்களிலும் இவ்வுயர் பதவியை ஏற்கத் தகுதி பெற்ற புதிய ஐ. ஜி.யின் தலைமையில் தமிழக போலீஸ் இலாக்கா தனது வழக்கமான நற்பெயரை நிலை நாட்டிக் கொள்வதுடன் புதுச் சிறப்புக்களும் பெறும் என நாம் எதிர்பார்க்கலாம்.



திரு ஆர். எம். மகாதேவன்

மிகவும் சோதனை மிக்கத் தேர்தல் காலத்திலிருந்து இதுவரை தமிழகத்தின் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பணிபுரிந்த திரு எஃப். வி. அருள் அவர்களின் சேவை மத்திய துப்பறியும் துறைக்குத் தேவைப்பட்டிருப்பது தமிழகத்துக்குப் பெருமையாகும். அவரது சேவை சிறக்க நமது நல்வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

உழைக்கும் விவசாயிகளோ, மற்றெல்லா விலைகளும் உயர்ந்த போதிலும் தமது வருமானம் உயராமல் இன்னலுறுகின்றனர். சில இடங்களில் மலிவான விலையில் தானியங்கள் வழங்க நினைத்து அதற்காக விவசாயிகளைத் துன்புறுத்தி நியாயமற்ற முறையில் விலையைக் குறைவாக நிர்ணயித்துக் கட்டாயக் கொள்முதல் செய்யும் கொள்கைக்கு ஆதரவு தரும் அரசியல்வாதிகள் சிறிது சிந்திக்க வேண்டும். பட்ஜெட் பற்றாக்குறை, அதையடுத்து காகித நோட்டுக்களை அளவுக்கு மீறி அச்சடித்து அரசினரின் செலவை ஈடுகட்டுவது இவை ஏற்படுத்தும் விளைவுகளை மேற்சொன்ன அரசியல்வாதிகள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். ஊட்டம் குறைந்த மக்களுக்கு மக்களின் வரிப்பணத்தை உபயோகித்துக் குறைந்த விலையில் உணவுதானியம் வழங்க அரசாங்கம் தீர்மானிப்பது வேறு விஷயம்.

ஃஃஃ

கஷ்டங்கள் எவ்வளவு இருப்பினும், அணு ஆயுதங்களைச் சட்ட விரோதமாக்க உலக நாடுகள் இணங்குமென நம்புகிறேன். வர்த்தகத் தடைகளையும், வரிச் சுவர்களையும், சங்கங்களையும் விட்டு விட்டு, உலகம் முழுவதையும் ஒரு சர்வதேசத் தொழிற்களமாக்கி, தேசியப் போட்டிகளைப் பகுத்தறிவு மூலம் வென்றி கொள்ள எல்லா நாடுகளும் சம்மதிக்கும் என்று நம்புகிறேன். இப்போது இவை பகற்கனவாகத் தோன்றலாம். ஆனால் இவ்விரண்டு உபாயங்களின்றி சர்வநாசத்தை வேறெவ்விதத்திலும் சமாளிக்க முடியாது. எந்த நாட்டுக்கேனும் தொழில் துறையில் காப்பு வேண்டுமாயின், அந்நாடு அதற்கான காரணங்களை ஐக்கிய நாடு சபை திருப்திப்படுமாறு எடுத்துக்காட்டி, சுங்கம் — வர்த்தகத் தடை ஆகியவற்றுக்குச் சாதகமாக விதிவிலக்குப் பெற வேண்டும். இவ்விரு கனவுகளையும் நனவாக்க ஜனாதிபதி கென்னடியும் பிரதமர் குருஷேவும் இல்லாதது பரிதாபம். தொழில் துறையில் சுதேசியத்தை அதமபட்சமாகக் குறைத்து விட்டால் உலக சமாதானத்துக்கு வழி பிறக்கும். உலகத்தின் வளங்கள் அணு ஆயுத உற்பத்திக்கு வீணாக்கப்படுவதும் தானாகவே கட்டுப்படும். உலக வர்த்தகச் சுதந்திரத்துக்கு விதிவிலக்காகச் சில நாடுகளுக்குச் சலுகை அளிக்கும் அதிகாரம் ஐ. நா.வுக்கு அளிக்கப்படுவதன் மூலம், சிறுகச் சிறுக உலக சர்க்கார் உருவாகவும் வழி பிறக்கும்.

ஃஃஃ

கடவுள் என்பது உண்மை மட்டுமல்ல; அதுவே மனிதனின் தேவையுமாகும். கடவுளோ, அல்லது வழிபாட்டுக்குரிய வேறு ஒரு துணையோ இன்றி மனிதன் வாழ முடியாது. கடவுளைப் பற்றிச் சொல்லாத சமண, பௌத்த சமயத் தலைவர்கள் தமது குருமார்களைத் தெய்வமாக்கி வழிபட்டனர். நவீன காலத்தில் மனிதனின் சிந்தனையிலிருந்து ஆண்டவனை அகற்றிவிட்டால், அவன் தனது வழிபாட்டு வேட்கையை இரண்டாம்தரமான ஒன்றிடம் செலுத்தித் திருப்தி கொள்கிறான். தேசம், பாஷை, அல்லது ஒரு கொள்கையைத் தெய்வமாக்கிக் கொள்கிறான். வழிபாடு என்பது ஒரு வாழ்க்கைத் தேவை. கடவுளின் இடத்தில் உலகாயதச் செல்வத்தை அமர்த்துவதைத் தவிர சாதாரணமாக எந்த வழிபாடுமே தீமையற்றது.




அதிர்ஷ்டத்துக்கு
நாய் பொம்மை
வைத்திருந்தும்
தலையெழுத்து
வேறு விதமாய்
அமைந்துவிட்டதே!

வளைந்த மட்டையும் வளையாத உறுதியும்







''கம் ஆன் மலேஷியா!''

''கம் ஆன் மெட்ராஸ்!''

''இது என்ன குதிரைப் பந்தயமா? எக்குதிரை ஜயித்தது?''

''இது பெண்கள் விளையாடும் எக்ஸிபிஷன் ஹாக்கி மாட்ச். மலேஷியா சர்வ கலாசாலை ஆட்டக்காரிகளும் சென்னை ஆட்டக்காரிகளும் உக்கிரமாக ஆடுகிறார்கள்!''

ஒரு கோல் சென்னைக் குழுவின்மேல் விழுந்தது. மலேஷியா சர்வகலாசாலை ஆட்டக் குழுவைச் சேர்ந்த ஜாக்கி தன் கையில் வைத்திருந்த அலங்கரித்த நாய்ப் பொம்மையுடன் குதித்தாள். அவள் கோஷ்டியில் சேர்ந்து மைதானத்தில் போராடவில்லை! வெளியில் அமர்ந்து கத்தி அவர்களுக்காகச் சொற்போராடினாள்!

''கம் ஆன் மலேஷியா!''

''கம் ஆன் மெட்ராஸ்!''


சென்னை ஆட்டக்காரிகள் உக்ரமாக ஆடத் தொடங்கினர். சென்னை அணியைச் சேர்ந்த காப்டன் மிஸ் பெர்ன் லாகவமாக மலேஷியக் குழுவினரைக் கடந்து பந்தை எடுத்துச் சென்றது அனைவரது பாராட்டுதலையும் பெற்றது. க்ளாரா டைலர் ஒரு 'கோல்' போட்டுச் சமமாக்கினாள்.

''கம் ஆன் மலேஷியா!'' — மலேஷிய ஆட்டக்காரி ஜாக்கி சுரத்தில்லாமல் கத்தினாள்.

''சபாஷ் மெட்ராஸ்!'' என்று சென்னை ரசிகர்கள் உரக்கக் கத்தினார்கள்.

சென்னை ஆட்டக்காரிகள் உத்வேகத்துடன் ஆடத் தொடங்கிப் பந்தை 'கோல்' வரை நன்றாக எடுத்துச் சென்றனர். பலதடவை 'கோலு'க்குள் அடிக்க சான்ஸ் கிடைத்தும் சென்னைஅணியினர் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர்! ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்ததைக் கண்டு இன்னும் பத்து நிமிஷம் இரு கட்சிகளுக்கும் ஆடச் சந்தர்ப்பம் கொடுத்தனர்! இரண்டு அணிகளுமே நன்றாக ஆடிவிடவே 'டிரா'வாக முடிந்தது. வளைந்த ஹாக்கி மட்டைதான்; ஆனால் இரு கட்சியினரின் உறுதியும் லவலேசமும் வளைந்து கொடுக்கவில்லை! கடைசியில் 'வா தலையா' கண்டிப் போட்டனர். மலேஷியக் காப்டன் 'தலை!' என்றாள். அவள் தலையெழுத்து தோல்வியாக முடிந்தது. சென்னைக் கோஷ்டி அன்று ஆடிய ஆட்டத்துக்காகக் கோப்பையைப் பெற்றது. மலேஷிய சர்வகலாசாலைக் கோஷ்டியினர் 'ரன்னர்'களாயினர். காப்டன் மிஸ் பெர்னுக்கு ஆட்டத் திறனுக்காக விசேஷக் கோப்பை கிடைத்தது.

விறுவிறுப்பான ஆட்டத்தைக் கண்டு களித்த திருப்தி ஹாக்கி ரசிகர்களுக்கு ஏற்பட்டது. பஸ்ஸில் ஏறியதும் மலேஷிய சர்வகலாசாலை ஆட்டக்காரிகள் பாடிக் கைதட்டிச் சென்றனர். 'ஆடிப் பாடிப் பறந்த பறவைகள்!' என்று சொல்லத் தோன்றியது! - பி.எஸ்.எம்.





தலைநகரில் ஒரு கலைவிழா

நாற்பது நாடுகள் பங்குபற்றும் நவீன ஓவியக் கண்காட்சி இப்போது புதுதில்லியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.






புதுதில்லியில் உள்ள 'ரவீந்திர பவனம்', 'ஜெயப்பூர் ஹௌஸ்' ஆகிய இடங்களில் 'உலகக் கலைவிழா' (**First Triennale of Contemporary World Art**) நடைபெறுகிறது. இந்தியாவில் கலைக்கெனவே பணியாற்றும் 'லலித கலா அகாதமி'யாரின் ஆதரவுடன் நடைபெற்று வரும் இவ்விழா வளரும் உலக சமுதாயத்தில் இன்று உண்டாக்கியுள்ள கலை உலகப் புரட்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நவீன ஓவியங்கள், சிற்பங்கள், உலோக அச்சுகள், வார்ப்படங்கள், கண்ணாடிப் பொருள்கள் ஆகிய வெவ்வேறு வகையான கலைப் பொருட்களை இங்கு காணலாம்.

சுமார் 40 நாடுகள் பங்கு பெற்றுள்ள இந்நவீன ஓவியக் கண்காட்சி இப்பொழுது தான் முதன் முதலில் இந்தியாவில் நடைபெறுகிறது. வெனிஸ், சா பாலோ, பாரீஸ், டோக்கியோ முதலிய இடங்களில் முன்னர் நடைபெற்றுள்ள உலகக் கலைக் காட்சியே இதற்கு ஆதாரமாகும். முதன் முறையாக இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

பிப்ரவரி 10ந் தேதி இக் கலைவிழாவை நமது குடியரசுத் தலைவர் திறந்து வைத்தார். மார்ச் 31ந் தேதி வரை நடக்கும்.

ஜெர்மானியப் பகுதியில் ஓவியங்களைவிட உலோக வார்ப்புக்களே அதிகம் காணப்படுகின்றன. ஜப்பானிய ஓவியங்களில் வண்ணச் சேர்க்கைகள் நன்கு உள்ளன. பழைமையான அவர்களது கலாசாரத்தை நவீன ஓவிய முறையில் வரைந்திருக்கின்றனர்.


இந்தியப் பகுதி மிகவும் அருமையாக உள்ளது. பணிக்கர், ஜே. சுவாமிநாதன், பி. வி. ஜானகிராமன், புபேன் காகர், ஜ்யோதி, பாட், சதீஷ் குஜ்ரால், லக்ஷ்மண் பாய் ஆகி கலை வல்லுநர்களின் ஓவியங்கள், நவீனக் கலைப் பொருட்கள் இங்கு இடம் பெறுகின்றன. ஜேரம் படேல் என்பவரின்













எரியும் பல்பினும் மரத்தில் ஏற்படுத்திய நவீன சித்திரங்கள் புதுமையாக உள்ளன. பழைமையான உபநிஷதக் கருத்துக்களும் புதுமையான செயற்கை வாழ்க்கை முறைகளும், இனிய இயற்கைக்- காட்சிகளும் இவ்வோவியங்களுக்கும் கலைப் பொருட்களுக்கும் ஆதாரமாக உள்ளன.

லிதோகிராஃப், கிராபிக்ஸ் முதலிய ஓவிய முறைகளில் உண்டான ஓவியங்கள் மரச் செதுக்கங்கள், கண்ணாடிச் சித்திரங்கள், திரையில் தீட்டப்பெற்ற சித்திரங்கள், இரும்பு, செம்பு முதலிய உலோக வார்ப்படங்கள் ஆகியவையும் காட்சியில் உள்ளன.

புதுதில்லி சென்று இந்தக் கலைக் காட்சியைக் காணும் வாய்ப்பு எல்லோருக்கும் கிட்டிவிடாது என்பதால் கண்காட்சியில் இடம் பெறும் ஓவியங்கள் சிலவற்றை இந்தப் பக்கங்களில் பிரகரித்துள்ளோம். இவற்றைப் பார்த்த பிறகு 'நல்ல வேளை நாம் புது தில்லியில் வாழவில்லையே' என்று நினைத்து மகிழ உங்களுக்குச் சுதந்திரமுண்டு. 'இந்தக் கண்காட்சியைக் காணாத கண் என்ன கண்' என்று எண்ணி உடனே ரயில் டிக்கட்டு வாங்கவும் உங்களுக்கு உரிமை உண்டு! என்ன செய்வதாக உத்தேசம்?

படங்களும் கண்காட்சி பற்றிய குறிப்பும் அனுப்பியவர்: - என். ராஜாமணி.





Criterion-PS-1559 T

பெங்களூருக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ

பூர்ணிமா பெனிபிட் ஸ்கீம்

ஏற்கனவே உள்ள அங்கத்தினர்கள் 5000க்கு மேல்!

அங்கத்தினராவது எவ்வாறு?

நீங்கள் எங்கிருப்பினும் சரி. பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னையாகட்டும், மற்றெந்த பட்டணமாயினும் கிராமமாயினும் சரி, அங்கத்தினராவது சுலபம். செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே. மாதந்தொரும் பத்து தவணைகளில் தவணைக்கு ரூ. 10/- ஐ மணியார்டர் மூலம் அனுப்பினால் போதும். முதல் தவணை கட்டியதிலிருந்து நீங்கள் அங்கத்தினர் பட்டியலில் இடம் பெறுவீர்கள்.

இத்திட்டத்தின் அனுகூல அம்சம் என்ன?

நூறு அங்கத்தினர்கள் கொண்ட ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மாதம் ஒரு முறை சீட்டு குலுக்கப்படும். அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷம் இருந்தால், வெற்றி பெற்ற உங்களுக்கு ரூ 100/- மதிப்புள்ள பூர்ணிமா சில்க் புடவை கிடைக்கும். மேலும் மாதத்தவணைகள் கட்டத் தேவையில்லை. அதிர்ஷ்ட தேவதையின் கடைக்கண் அருள் கிடைக்காத மற்ற 91 அங்கத்தினர்களுக்கும், ரூ 100/- கட்டியிருப்பினும், கடைசி ஒன்பதாவது குலுக்கல் முடிந்தபிறகு, ரூ 103/- மதிப்புள்ள சில்க் புடவை கிடைக்கும்.

இத்திட்டத்தின் ஒப்பற்ற குறிக்கோள்:

நேச மனப்பான்மை, சேமிப்பின் அவசியம். மேலும் கண்கூடாகக் காணும் அனுகூலங்கள் முதலியனவற்றை சமூகத்தில் பரப்புவது. பலரினை இணைக்கும் இத்திட்டம். மகிழ்ச்சி, உற்சாகம், எண்ண நிறைவு, குதூகலம் ஆகியவற்றை பலரிடையே உண்டாக்கி வருவதுமே ஆகும்.


மணியார்டர்களை அனுப்பவேண்டிய விலாசம்:

poornima
SILK HOUSE


Uco Bank Building,
Kempegowda Road,
Bangalore-9

பெருமிதமுள்ள விவசாயி இவர்





6 HP 650 RPM



5 HP 1500 RPM

மேனன் டீசல்கள்

பருவ 'மழை' தவறினாலும் இவருடைய பயிர்கள் பாதிக்கப்படுவதில்லை. காரணம், புத்திசாலியான இவர் தனது பண்ணையில் மேனன் டீசல் அமைத்து, அதன் மூலம் சிறந்த முறையில் பாசன நீர்ப்பாய்ச்சல் இருக்கும்படி செய்திருக்கிறார். மேனன் டீசல்கள் சிக்கனமாகப் பராமரிக்கக் கூடியவை. 6 H. P. லிஸ்டர் ரக டீசல் ஒன்று 1 காலன் குருட் ஆயிலுக்கு 30,000 காலன் நீரை இறைக்கிறது. அடக்கமான அளவுடையதும், இடம் விட்டு இடம் தூக்கிச் செல்லக் கூடியதும், திண்மையும் வலுவும் வாய்ந்ததுமான 6 H. P. இன்ஜின்களை வேலையில்லாத காலங்களில் கரும்பு சாறு பிழிவதற்கும். மற்ற பண்ணைப் பணிகளுக்கும், 5 H. P. ஹைஸ்பீட் டீசல் இன்ஜின்களை தொழில்துறை வேலைகளுக்கும் பயன்படுத்தலாம்.

மிகச் சரசமான விலைகளில் இந்த இன்ஜின்கள் கிடைப்பதால் உள்ள நிச்சய ஆதாயங்களுடன் கூட, மேனன் அசல் ஸ்பேர் பார்ட்ஸ்களும் நியாய விலைகளில் தயாராகக் கிடைக்கின்றன.

தமிழக அரசினரால் அங்கீகரிக்கப்பட்டவை

''புத்திசாலித்தனமாக உங்கள் பண்ணையில் மேனன் டீசல் நிறுவுங்கள்''

மேனன் & மேனன்

இன்ஜினியர்கள்

விக்ரம்நகர், கோலாப்பூர், மகாராஷ்டிர ராஜ்யம்

தமிழ்நாடு மற்றும் கேரளாவுக்கு ஏகபோக விநியோகஸ்தர்கள் :

ஆர்வீ & கம்பெனி

52, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை - 2

போன் : 88746 தந்தி : "ARVEECO"

சீசரைக் கொன்ற புருடஸ், கோபத்தால் கொதித்தெழும் மக்களைத் தம் பக்கம் இழுக்க நயமாகப் பேசுகிறான். அடுத்து மார்க் ஆண்டனியின் வீரப் பேருரையைக் கேட்கிறோம். உடல் சிலிர்க்கிறது.

ஆங்கில மகா கவி ஷேக்ஸ்பியரின் ஒப்பற்ற காவியங்களான ''ஜூலியஸ் சீசர்'', ''ஒதெல்லோ'', ''மர்ச்செண்ட் ஆஃப் வெனிஸ்'', ''ஹாம்லெட்'' ஆகிய நாடகங்களில் வரும் எல்லாக் கதாபாத்திரங்களாகவும் மாறி விடுகிறார் 'மானோ ஆக்டர்' சுந்தரம்.

திரு சுந்தரம் 1938ல் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்து பி. ஏ. பட்டம் பெற்றுள்ளார். மகாகனம் வலங்கைமான் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாரிடம் தாம் பாடம் கேட்டதைத் தம் வாழ்விலே ஒரு பெருமையாகக் கருதுகிறார்.

இவர் எப்படி இந்தத் தொழிலுக்கு வந்தார்? எதிர்பாராமலே தம்மைக் கவர்ந்து இழுத்துக்கொண்ட தொழில் இது என்கிறார் திரு சுந்தரம்.

1938 முதல் பாங்க், ராணுவம், மற்றும் பல துறைகளில் பணி புரிந்து வந்த இவர் 1951ல் இந்த உத்தியோகங்களுக்கு முழுக்குப் போட்டுவிட்டு பம்பாய்க்குப் போனாராம். பார்ஸி — குஜராத்தி — ஆங்கிலோ இந்தியர் ஆகியோரடங்கிய ஒரு சொஸைட்டியில் ஷேக்ஸ்பியரின் ''ஜூலியஸ் சீசர்'' நாடகம் பயிற்சி நடந்து கொண்டிருந்தது. நாடகத்தின் டைரக்டர்' ஆண்டனியாகப் பேசும் காட்சியைப் பார்த்து அதிருப்தியடைந்த சுந்தரம், ''டைரக்டர் ஸார்! ஒரு சந்தேகம். நீங்கள் இப்போது பாடம் சொல்லிக் கொடுக்கிறீர்களா? அல்லது நடிப்புச் சொல்லிக் கொடுக்கிறீர்களா?'' என்று துணிந்து கேட்டார். ''ஏன் நடிப்புத்தான் சொல்லிக் கொடுக்கிறேன், தெரியவில்லையா?'' என்றார் அந்த டைரக்டர். ''நீங்கள் சொல்வது நடிப்பல்ல — பாடம்தான்'' என்று சுந்தரம் கூற, ''அப்படியானால் எங்கே நீர்தான் சொல்லும் பார்க்கலாம்'' என்று அந்த டைரக்டர் சவால் விடுத்தார். அதுவரை நடிப்பிலே எந்த ஒரு முன் அனுபவமும் இல்லாத சுந்தரம், இயற்கையாகவே ஷேக்ஸ்பியரிடம் உள்ள



ஆண் பெண் குரல்களில், ஆறு விதக் குரல்களில் பேசும் மனிதர் அதிசய மனிதராகத்தானே இருக்க வேண்டும்!

ஷேக்ஸ்பியர் சுந்தரம்

வண்ணத்துப்பூச்சி அளிக்கும் வாய்ப்பு

வானவில்லுக்கு ஏழு வர்ணங்களை அளித்த கடவுள் வண்ணத்துப்பூச்சிக்கும் அழகு மின்ன வண்ணங்களை வாரி வழங்கியிருக்கிறார். இயற்கையின் அற்புதத்தை எண்ணி மகிழ வண்ணத்துப்பூச்சி நமக்கொரு வாய்ப்பளிக்கிறது பொருளடக்கப் பகுதியில். இந்தப் புகைப்படத்தினைத் திறம்பட எடுத்து நாம் வியப்புற வழங்கியவர்:

பி. வி. சுப்பிரமணியம்
திருச்சி

ஆர்வத்தால் 'மளமள'வென்று ஆண்டனியாகப் பேசி நடித்தார். ''பிரமாதம்!'' என்று பாராட்டிய அந்த டைரக்டர் ''இனி நீங்களே டைரக்ட் செய்யுங்கள்'' என்று கூறிவிட்டார். பம்பாயில் முதன் முதலாக இவர் நடத்திய அந்த ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகம் பெரும் பாராட்டுப் பெற்றது. பின்னர் சென்னை வந்து ''ஃப்ரீ இந்தியா தியேட்டரிகல்ஸ்'' என்ற அமைப்பை ஏற்படுத்தித்தக்க நடிகர்களைத் தேர்ந்தெடுத்து எழும்பூர் மியூசியம் தியேட்டரில் நான்கு நாட்கள் நடத்தினர்.

நாடகக் குழு நடத்திய இவர், இப்படி 'மானோ ஆக்டராக' மாறியது ஏன்?

லயோலா கல்லூரியில் ஃபாதர் கார்டன் பிரின்ஸிபாலாக இருந்தபோது ஜூலியஸ் சீசர் நாடகம் ஏற்பாடு செய்திருந்தார். சக நடிகர்கள் சிலர் வராததால் ஒத்திப் போட்டு இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் நடத்த வேண்டியதாயிற்று. அன்று நாடகம் ஆரம்பிக்கப் போகும் வேளையில் ஆண்டனியாக நடிக்கும் 'ஜோ கோட்டே' என்ற இத்தாலியர் வர இயலவில்லை என போன் செய்துவிட்டார். இரண்டாம் நாள் ஒத்திப் போடப்பட்ட நாடகம் குறித்த நேரத்துக்கு மேலாகியும் ஆரம்பிக்காததால் மாணவர்கள் பலமாகக் கூச்சல் எழுப்பினார்கள். பிரின்ஸிபால், ''சுந்தரம்! போலீஸுக்கு ஃபோன் செய்கிறேன். போலீஸ் துணையுடன் போய் விடுங்கள்'' என்றார். திடீரென ஒரு முடிவுக்கு வந்த சுந்தரம் மேடையில் தோன்றி, ''கண்ணியத்துக்கும், கட்டுப்பாட்டுக்கும் பெயர் பெற்ற லயோலா கல்லூரி மாணவர்களே! நீங்கள் அமைதியாக இருந்தால் விரைவில் நாடகம் ஆரம்பமாகும்'' என்றார்.

பிறகு சுந்தரமே உரத்த குரலில் பேசி காஷியஸ் ஆகவும், மெதுவான குரலில் பேசி ஆண்டனியாகவும் நடித்தார். நாடகம் முடிந்ததும் ஏராளமான மாணவர்கள் அவரிடம் கைகுலுக்கிப் பாராட்டினார்கள்.

அன்று முதல் இந்த நடிகர் பட்டாளத்தைக் கட்டிக் கொண்டு இனி தொல்லைப் படக் கூடாது என்று தாம் ஒருவராகவே 'மானோ ஆக்ட்' செய்ய ஆரம்பித்துவிட்டார்.

ஆண் பெண் குரல்களில் — ஆறு விதக் குரல்களில் — பேசும் இந்த அதிசய மனிதர் சுந்தரம் பிரபலஸ்தர்கள் பலர் முன்னிலையிலும் நடித்துக் காட்டிப் பாராட்டுகள் பெற்றுள்ளார்.

சில்வர் டங் (Silver Tongue) சீனிவாச சாஸ்திரியாரின் பேச்சைக் கேட்டு வெள்ளைக்காரர்களே மூக்கில் விரல் வைத்து வியப்பார்களே என்று தம் குருவை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாராட்டும் சுந்தரம், படித்துக்கொண்டிருக்கும்போதே மலேயா போய் வந்த சாஸ்திரியாருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வரவேற்பின் போது சாஸ்திரியார் முன்னிலையில் அவர் போலவே உடையணிந்து அவர் போலவே பேசி மகாகனம் சாஸ்திரியாரின் பாராட்டைப் பெற்றாராம்.

ஏறக்குறையப் பதினைந்து ஆண்டுகளாகச் சுமார் இரண்டாயிரம் நிகழ்ச்சிகளை நடத்திய இவருக்கு ஒரே ஒரு குறை.

அது மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்த நேருஜி முன்பு தனது நிகழ்ச்சியை நடத்திக் காட்டி அவர் ஆசியைப் பெறாததுதான். பெங்களூரில் அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு நடைபெறும்போது இவர் ஒரு சுயேச்சை எம். எல். ஏ. வீட்டில் தங்கியிருந்தாராம். அப்போது ''உங்கள் முன்பு ஒரு சிறு கலை நிகழ்ச்சி நடத்திக் காட்ட விரும்புகிறேன். உங்களுக்குள்ள பல அலுவல்களிடையே ஓர் அரை மணி நேரம் கொடுத்தாலும் போதும்'' என்று எழுதித் தபாலில் அனுப்பினாராம். என்ன ஆச்சரியம்! தபால் போய்ச் சேர்ந்த ஒரு மணி நேரத்துக்குள் ''மிஸ்டர் சுந்தரம்! உங்கள் கலை நிகழ்ச்சியைக் காண ஆவல்தான். ஆனால் எனக்கு இப்போதுள்ள பல நெருக்கடியான அலுவல்களிடையே ஒரு நிமிடம் கூட ஓய்வு இருக்காது என்பது உங்களுக்கும் தெரியும். பின்னர் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவசியம் பார்த்து மகிழ்கிறேன்'' என்றெழுதி ஆள் மூலமே அனுப்பிவிட்டாராம், நேருஜி.

''எவ்வளவோ அலுவல்களுக்கிடையே ஒரு சர்வ சாதாரணக் கலைஞனுக்கு உடனடியாகக் கடிதம் எழுதி ஆள் மூலம் அனுப்பிய நேருஜி போன்ற தலைவரை எங்குமே 'எப்போதுமே பார்க்க முடியாதுதான்'' என்கிறார் சுந்தரம்.

கென்னடி, சாஸ்திரி, நேருஜி ஆகியோரைப் போலவே பேசும் இவரின் கடைசி நிகழ்ச்சி மிக ஆச்சரியமானது. புல்லாங்குழல் இல்லாமலே வாயினால் குழல் ஊதி நம்மை வியக்க வைக்கிறார். இவர் வாயிலிருந்து குழல் ஓசை எழுவதைக் கேட்டு நாமும் எழுகிறோம். ஆம். நம்மை எழுந்திருக்க வைக்கும் அந்தக் குழலோசை தேசிய கீதமான ''ஜன கண மன''தான்.

— குத்தாலம் வீ. சம்பந்தன்





கல்கெமிகோவின்

காந்தரிடின் ஹேர் ஆயில்

கேந்தரால் (ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்)

உங்கள் கேசத்தின் குறைவற்ற வளர்ச்சிக்கு, நேர்த்திக்கு, உறுதிக்கு கல்கெமிகோவின் நறுமணமிக்க காந்தரிடின் ஹேர் ஆயில் "கேந்தரால்" பயன்படுத்துங்கள்.

"கேந்தரால்" பொட்டு உதிர்தலைத் தடுக்கிறது. கேசத்தின் வேர்களுக்கு ஊக்கமூட்டுகிறது. அது கேசத்தின் செழுமைக் கான புஷ்டியளிக்கும் சிறந்த டானிக்—காந்தரிடின் மற்றும் ஆலிவ் எண்ணெய் உட்பட்ட வற்றாத வளர்ச்சிக்கான தாவர எண்ணெய்களை உள்ளடக்கியதாகும்.

தயாரிப்பாளர்: கல்கத்தா கெமிகல்

CCK 2997



மகாபாரதம்

ராஜாஜி

அந்தண இளைஞனாக வேஷங் கொண்ட அருச்சுனன் எழுந்ததைக் கண்டு சபையில் கலவரம் ஏற்பட்டது. பிராமணர்களோ ஒருவரோடு ஒருவர் வாதம் செய்ய ஆரம்பித்தார்கள். சிலருக்குப் பெருத்த உற்சாகம். சிலருக்கு அடங்காத ஆட்சேபனை.

கர்ணன், சல்லியன் முதலான வீரர்கள் தோல்வியடைந்த ஒரு விஷயத்தில், வெறும் சபல புத்தியால் தூண்டப்பட்டு இந்தப் பிரம்மசாரி பிரவேசிப்பது, பிராமண சமூகத்துக்கே பெருத்த அவமானம் கொண்டு வந்து விடும் என்று பலர் பெருங் கூச்சல் போட்டார்கள். ஆனால். சிலர் வேறு விதமாகச் சொன்னார்கள்: ''இவனைப் பார்த்தால் வெற்றி பெற்றாலும் பெறுவான் என்று தோன்றுகிறது. இவனுடைய உற்சாகத்தையும் தைரியத்தையும் கவனித்துப் பார்த்தால் க்ஷத்திரியர்கள் யாரும் செய்யாத காரியத்தை இவன் ஒரு வேளை செய்யச் சக்தி பெற்றிருப்பான் என்றே நினைக்க இடம் இருக்கிறது. தேக பலம் குறைவாக இருந்தாலும் பிராமணர்களுக்கு உறுதியான தவப் பெருமை இருக்கிறது. ஏன் இவன் பிரயத்தனப்படக் கூடாது?'' என்று ஒரு கட்சி பலமாகவே கிளம்பிற்று. அதன் மேல் பிராமணர்கள் ஏகோபித்து ஆசீர்வதித்தார்கள்.


அருச்சுனன் வில்லின் சமீபம் போய் நின்று, திருஷ்டத்யும்னனைப் பார்த்து, ''இந்தத் தனுசைப் பிடித்து வளைத்துப் பிராமணர்கள் நாணேற்றலாமோ?'' என்று கேட்டான். இதைக் கேட்ட திருஷ்டத்யும்னன், ''பிராம்மணோத்தமனே! பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் இவர்கள் யாராயினும் இந்த வில்லை நாணேற்றி லக்ஷியத்தை அடித்து வென்றால், அவனுக்கு என் சகோதரி உரியவளாவாள். நான் சொன்ன வாக்கு, சத்தியம். பின் வாங்க மாட்டேன்'' என்றான்.

அதன் பிறகு அருச்சுனன் நாராயணனை மனத்தில் தியானித்து வில்லை எடுத்தான். நாணையும் ஏற்றினான். சபை ஆச்சரியத்தில் மூழ்கி நிசப்தமாக இருந்தது. எய்த ஐந்து பாணங்களும் சுழலும் யந்திரத்தின் வழியாகச் சென்றன. மேலே கட்டியிருந்த லட்சியம் அறுந்து கீழே விழுந்தது. வாத்தியங்கள் முழங்கின.

அங்கே கூடியிருந்த ஆயிரக் கணக்கான பிராமணர்கள் திரௌபதியைத் தாங்கள் அனைவரும் அடைந்து விட்டதாகவே சந்தோஷப்பட்டுக் கூச்சலிட்டார்கள். மேலுத்தரீயங்களை உயர வீசினார்கள். கோலாகலத்தைச் சொல்லி முடியாது. திரௌபதி புதிய அழகுடன் விளங்கினாள். நகைக்காமலே நகைத்த தோற்றமுடன் பார்வையிலே பேசுபவள் போல் அர்ச்சுனனிடம் சென்று மாலையை எடுத்து அவனுடைய கழுத்தில் போட்டாள். யுதிஷ்டிரனும் நகுலனும் சகாதேவனும் சம்பவத்தைத் தாயாரிடம் சொல்ல வேகமாக எழுந்து குயவன் சாலைக்குச் சென்றார்கள். பீமன் மட்டும் தம்பிக்கு ஏதாவது க்ஷத்திரியக் கூட்டத்தி

னின்று ஆபத்து நேரிடுமோ என்று சபையிலேயே இருந்தான்.

பீமன் எதிர்பார்த்தபடியே கூட்டத்தில் ராஜகுமாரர்கள் கலவரம் செய்தார்கள். 'சுயம்வர முறை பிராமணர்களுக்கு இல்லை. இந்தப் பெண்ணுக்கு ஒரு ராஜகுமாரனும் வேண்டாமலிருந்தால் விவாகம் இல்லாமலே சிதை ஏற வேண்டியது. பிராமணன் இவளை எப்படி அடையலாம்? தருமத்தைக் காப்பாற்றவும், சுயம்வர முறைக்கே நேரப்போகும் விபத்தைத் தடுக்கவும், இந்த விவாகத்தை நாம் நடத்த விடாமல் தடுத்துவிட வேண்டும்' என்று ராஜகுமாரர்கள் எல்லோரும் ஆரவாரம் செய்தார்கள். பெருத்த கலகம் ஏற்படும் போலிருந்தது. பீமன் வெளியில் சென்று ஒரு மரத்தை வேரோடு பிடுங்கி இலைகளை உதறினான். உதறி அதை ஒரு சாதாரண தடியைத் தூக்கி வருவதுபோல் தூக்கிக் கொண்டு அர்ச்சுனன் பக்கத்தில் வந்து நின்றான். திரௌபதி அர்ச்சுனன் போர்த்தியிருந்த மான் தோலின் தலைப்பைப் பிடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.



கிருஷ்ணனும், பலராமனும் மற்றவர்களும் குழப்பம். இளப்பின அரசர்கள் கூட்டத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்கள். அருச்சுனன் திரௌபதியை அழைத்துக் கொண்டு குயவனுடைய சாலைக்குப் போனான்.

பீமார்ச்சுனர்கள் திரௌபதியை அழைத்துச் சென்றபோது திருஷ்டத்யும்னனும் பின் தொடர்ந்து சென்றான். சென்று அங்கு நடந்ததை மறைவாகப் பார்த்து வியப்புற்றுத் திரும்பி வந்து தந்தை துருபதனிடம், ''தந்தையே! இவர்கள் பாண்டவர்கள் என்றே நினைக்கிறேன். அச்சமின்றித் திரௌபதி அந்த வாலிபனுடைய கிருஷ்ணாஜினத்தைப் பிடித்துக் கொண்டு போனாள். நானும் போனேன். அங்கே குடிசையில் அக்கினிக் கொழுந்து போல் உட்கார்ந்திருந்தவள் குந்தி என்றே எண்ணுகிறேன்'' என்றான்.

துருபதன் சொல்லியனுப்பிக் குந்தியும் பாண்டவர்களும் அரண்மனைக்கு வந்தார்கள். துருபதன் கேட்டதற்குத் தாங்கள் பாண்டவர்கள் என்றும், திரௌபதியை ஐவரும் ஒன்றாக விவாகம் செய்து கொள்வதே தங்கள் தீர்மானம் என்றும் தர்மபுத்திரன் சொன்னான். ''துரோணருடைய பகையைப் பற்றி இனிக் கவலையில்லை. மகளுக்கு அருச்சுனன் புருஷனாக அமைந்துவிட்டான்'' என்று அவனுக்குச் சந்தோஷம் பொங்கிற்று.

ஆனால் ஐவரும் ஒருத்தியை விவாகம் செய்வோம் என்று யுதிஷ்டிரன் சொன்

னதைக் கேட்டு வியப்பும் அருவருப்பும் கொண்டான்.

''இது என்ன அக்கிரமம்! ஒரு காலத்திலும் தருமம் என்று சொல்லப்படாததும், உலக வழக்கத்துக்கு முற்றிலும் மாறுபட்டதுமான இந்த எண்ணம் ஏன் உமக்கு உண்டாயிற்று?'' என்று துருபதன் மிகவும் ஆக்ஷேபித்துப் பார்த்தான்.

யுதிஷ்டிரன் சமாதானம் சொன்னான். ''ராஜாவே! மன்னிக்க வேண்டும். கிடைத்ததையெல்லாம் நாங்கள் சேர்ந்து அனுபவிப்பதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிறோம். பெரும் ஆபத்துக்கிடையில் இவ்விதம் நாங்கள் தீர்மானித்தோம். இந்தப் பிரதிக்ஞையை நாங்கள் புறக்கணிக்க முடியாது. எங்கள் தாயாராலும் இதுவே சொல்லப்பட்டது'' என்றான் யுதிஷ்டிரன்.

தருமமே உருவெடுத்தாற் போன்ற பெரியோர்கள் குடும்பத்தைப் பாதுகாக்க உயிருடன் இருந்தும், பொறுமை என்பது எவ்வளவு பாபச் செயல்களை உண்டாக்கிற்று என்பதைக் கண்டும் அனுபவித்தும் வந்த பாண்டவர்கள், எந்தக் காலத்தில் என்ன தீய எண்ணங்கள் உண்டாகுமோ என்று பயந்து தாய் குந்தியின் சொற்படி இந்தப் பிரதிக்ஞையைத் தங்களுக்குள் செய்து கொண்டார்கள்.

''நீரும் குந்தியும் திருஷ்டத்யும்னனும், திரௌபதியும் எல்லோரும் இந்த விசித்திரமான ஏற்பாட்டுக்குச் சம்மதித்தால், அப்படியே செய்யலாம்'' என்று துருபதன் முடிவில் ஒப்புக் கொண்டான். அவ்வாறே பெரியோர்களும் சம்மதித்து முடிந்தது.

18. இந்திரப் பிரஸ்தம்

பாஞ்சாலியின் சுயம்வரத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி வதந்திகள் ஹஸ்தினாபுரத்துக்கு வந்ததும், விதுரன் மகிழ்ச்சியடைந்து வேகமாகத் திருதராஷ்டிரனிடம் சென்று, ''திருதராஷ்டிரனே, நம்முடைய குலம் பலமடைந்துவிட்டது. துருபத ராஜன் மகள் நமக்கு மருமகளாய் விட்டாள். நமக்கு நல்ல காலம்'' என்றான்.

துரியோதனனிடம் இருந்த அளவு மீறிய பட்சபாதத்தினால் அறிவை இழந்த திருதராஷ்டிரன், விதுரன் கொண்டு வந்த செய்தியைத் தவறாகப் பொருள் செய்து கொண்டான்.

துரியோதனனும் சுயம்வரத்துக்குப் போயிருந்தானல்லவா ? அவன்தான் திரௌபதியை அடைந்து விட்டான் என்று எண்ணி, ''நல்ல காலம்! நல்ல காலம்! உடனே போய் மருமகள் திரௌபதியை அழைத்து வா. பாஞ்சாலியைத் தகுந்த மரியாதையுடன் வரவேற்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் தாமதமின்றிச் செய்'' என்றான்.

இதைக் கேட்ட விதுரன் உண்மையில் நடந்ததை அவனுக்குச் சொன்னான். ''பாண்டவர்கள் உயிருடனிருக்கிறார்கள். துருபதன் மகளை அர்ச்சுனன் அடைந்தான். பாண்டவர்கள் ஐவரும் மந்திரபூர்வமாக அவளைப் பாணிக்கிரகணம் செய்து கொண்டார்கள். அவர்கள் எல்லாரும் குந்திதேவியுடன் துருபதனுடைய பாதுகாப்பில் க்ஷேமமாக இருக்கிறார்கள்'' என்று விதுரன் சொன்னதைக் கேட்ட திருதராஷ்டிரன் ஏமாற்றமடைந்தான். ஆயினும், தன்னுடைய ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல்,

''விதுரனே! நீ சொல்லியது எனக்கு மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அன்புக்குரிய பாண்டவர்கள் உயிருடன் இருக்கிறார்களா ? நெருப்பில் மாண்டார்கள் என்றல்லவோ துக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். நீ இப்போது கொண்டு வந்த செய்தி என்னுடைய உள்ளத்தைப் பூரிக்கச் செய்கிறது. துருபதன் மகள் நமக்கு மருமகளா ? நல்லது, நல்லது எல்லாம் நல்லது'' என்று சொன்னான். திருதராஷ்டிரன் உள்ளம், இரண்டு கூறுகளாக ஒன்றுக்கொன்று முரண்பட்டு நின்றது. இவ்வாறே உலகத்தில் பல ஆன்மாக்கள் துயரப்படுகிறார்கள். தருமம் அதர்மம் இரண்டும் கலந்த உள்ளங்கள்!

பாண்டவர்கள் அரக்கு மாளிகையிலிருந்து எப்படியோ தப்பிப் பிழைத்து ஒரு வருஷ காலம் மறைவாக இருந்துவிட்டு, இப்போது பாஞ்சால வல்லரசனுடைய மகளை மனைவியாகப் பெற்று, முன்னைவிட அதிகப் பலம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டு துரியோதனனுக்கு முன்னிருந்த பொறாமையும் விரோதமும் இருமடங்காயின.

''மாமா! பயமாக இருக்கிறதே. புரோசனனை நம்பிக் கெட்டோம். நம்முடைய சூழ்ச்சியெல்லாம் வீணாயிற்று. நம்முடைய பகைவர்களான இந்தப் பாண்டுப் புத்திரர்கள் நம்மைவிடச் சாமர்த்தியசாலிகள். தெய்வமும் இவர்களுக்குத் துணையாயிருக்கிறது. மரணம் இவர்களை எட்டவே எட்டாதுபோல் இருக்கிறது. திருஷ்டத்யும்னனும், சிகண்டியும் இவர்களுக்குத் துணையாகி விட்டார்கள். என்ன செய்வது?'' என்று துரியோதனனும்,

துச்சாதனனும் சகுனியிடம் முறையிட்டார்கள்.

கர்ணனும் துரியோதனனும் அந்தகனை திருதராஷ்டிரனிடம் சென்று, ''விதுரனிடம் நீர் இது நல்ல காலம் என்று சொன்னீரே! பாண்டவர்கள் நமக்கு விரோதிகளாயிற்றே?விரோதிகள் அபிவிருத்தி அடைவது நமக்குத் தீமையல்லவா ? அவர்கள் நம்மை நிச்சயமாக அழித்துவிடுவார்கள். நாம் அவர்களுக்குச் செய்யப் பார்த்தது நிறைவேறவில்லை. நிறைவேறாத காரியங்கள் நமக்கே பெரிய அபாயமாகும். எப்படியாவது நாம் அவர்களை இப்போது அழித்துவிட வேண்டும். இல்லாவிடில் நாம் கெட்டுப்போவோம். இதற்கு யோசனை செய்வீராக '' என்றார்கள்.

''மகனே! நீ சொல்வது உண்மை. ஆனால், நம்முடைய கருத்து விதுரனுக்குத் தெரியக் கூடாது. அதற்காகத் தான் நான் அவனிடம் அவ்வாறு நடந்து கொண்டேன். இப்போது செய்யத்தக்கது என்னவென்று உங்கள் யோசனையைச் சொல்லுங்கள், பார்ப்போம்'' என்றான் திருதராஷ்டிரன்.

''எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. கவலையில் சிக்கித் தடுமாறுகிறேன். என் புத்தி பலவாறாக ஓடுகிறது. இந்தப் பாண்டவர்கள் ஐவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் அல்ல. மாத்ரி குமாரர்களுக்கும் மற்ற மூவருக்கும் எப்படியாவது விரோதம் மூட்டி விடுவது ஒரு வழி. துருபதனுக்குத் திரவியம் நிறையக் கொடுத்து அவனை நம்முடைய கட்சியில் எப்படியாவது சேர்த்துக் கொள்ளப் பார்க்கலாம். தன் மகளைப் பாண்டவர்களுக்குக் கொடுத்திருக்கிற ஒரு காரணத்தினாலேயே நாம் அவனைச் சிநேகம் செய்ய முடியாமல் போகாது. தனத்தின் பலத்தினால், நாம் ஆகாத காரியத்தையும்கூடச் செய்து முடிக்கலாம்'' என்றான் துரியோதனன்.

இவ்வாறு துரியோதனன் சொன்னதைக் கேட்ட கர்ணன் நகைத்தான். ''இது வீண் பேச்சு '' என்றான்.

''எவ்விதத்திலாவது யுக்தி செய்து அந்தப் பாண்டவர்கள் இங்கே வந்து நம்முடைய வசத்தில் இருக்கும் ராஜ்யத்துக்கு உரிமை கோராமல் செய்ய வேண்டும். பிராமணர்களைத் துருபதன் நகரத்துக்கு அனுப்பி அங்கே வதந்திகளை உலாவச் செய்யலாம். பல பேர்கள் தனித்தனியாகப் போய்ப் பாண்டவர்களிடம் சொல்லட்டும். 'ஹஸ்தினாபுரத்துக்கு நீங்கள் சென்றால் உங்களுக்கு அபாயம் நேரிடும்' என்று பலர் சொல்லிப் பயம் உண்டாக்கினால், பாண்டவர்கள் இவ்விடம் வராமல் இருப்பார்கள்'' என்றான் துரியோதனன்.

''இதுவும் உபயோகமற்ற யோசனை'' என்றான் கர்ணன்.

மறுபடியும் துரியோதனன், ''திரௌபதியைக் கொண்டு பாண்டவர்களுக்குள் விரோதம் உண்டாக்க முடியாதா? இயற்கைக்கு மாறாகப் பல புருஷர்கள் ஒரு ஸ்திரீயை மணந்திருக்கிறார்கள். இது நமக்குப் பெரும் வசதி தருகிறது. காமவேக நிபுணர்களைக் கொண்டு அவர்கள் மனத்தில் சந்தேகத்தைக் கிளப்பிவிடலாம். நிச்சயமாகப் பலன் பெறுவோம். அழகான பெண்களைத் தேடி, குந்தி புத்திரர்களில் சிலரை ஏமாற்றித் திரௌபதியை இவர்கள்மேல் வெறுப்புக் கொள்ளவும் செய்யலாம். இவர்களில் யாராவது ஒருவன் பேரில் திரௌபதிக்கு விரோதம் ஆரம்பித்தால், அவனை நாம் ஹஸ்தினாபுரத்துக்குக் கூப்பிட்டழைத்து மேலே செய்யக் கூடிய தந்திரங்களைச் செய்யலாம்'' என்றான்.

கர்ணன் இதற்கும் நகைத்தான்.

(தொடரும்)

படித்துப் பாருங்கள்

ஸ்ரீசைலத்தில் ஸ்ரீசங்கரர்

பிரமராம்பிகையோடு ஸ்ரீ மல்லிகார்ஜுன மகாலிங்கம் கோயில் கொண்டிருக்கும் தலம் ஸ்ரீசைலம். பாரத நாட்டைப் பக்தியால் ஒன்றாக்கிய ஆதிசங்கரர் துதித்த புண்ணிய பூமி.

நடமாடும் தெய்வமாகத் திகழும் ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்கள், ஒருசில ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீ சங்கரப் பிரதிஷ்டை செய்ய இங்கு விஜயம் செய்தார்கள்.

இந்த நூலின் ஆசிரியர் ஸ்ரீ பரணீதரன், அவ்வைபவத்தை நேரில் காணும் அரிய வாய்ப்பினைப் பெற்றவர். தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும் என்ற ஆசையோடு, சொற்சித்திரத்தால் படிப்பவர்களையும் ஸ்ரீசைலத்துக்கு இட்டுச் செல்கிறார்; கும்பாபிஷேகத்தைக் காண வைக்கிறார். அதோடு ஆசாரியர்களுடைய ஆத்மீக வாழ்வையும் ஒரு கோடி காட்டி மகிழ வைக்கிறார். ஒருசில எழுத்துப் பிழை இருப்பினும் அழகான பிரசுரம்; ஆனந்த விகடன் பிரசுரம்.

கிடைக்குமிடம்: ஆனந்தவிகடன், 151, மவுண்ட்ரோடு, சென்னை—2; விலை: ரூ. 1.50.

இளவேனிற்காலம்! இயற்கையின் ஒவ்வொரு நரம்பிலும் வசந்தத்தின் நறுமணம்! மோனத் தவத்தில் மூழ்கியிருந்த மகாதேவனை இயற்கையின் எழில் கண் திறந்து பார்க்க வைத்து விட்டது! எதிரே உமையவள் எழிலுக்கு எழில் கூட்டியவாறு சிவப்பணி புரிந்து கொண்டிருந்தாள்!

அவளைக் காணும்போது இதுவரை சலிக்காத அவர் மனத்தில் திடீரென்று இப்படி ஒரு சஞ்சலம் தோன்றுவானேன்? காரணம், நண்பன் வசந்தனோடு வந்திருந்த மலர்வில்லோன் விளையாட்டாகத் தன் கரும்பு வில்லை அவர்மீது தொடுத்துக் கொண்டிருந்தான்! சிவமாக இருந்த பரமசிவனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'பயலே! என்னிடமா உன் விளையாட்டு?' என்பதுபோல் அவரும் வேடிக்கையாகத்தான் தமது மூன்றாவது கண்ணைத் திறந்தார். அடுத்த நொடியில் மன்மதன் பொசுங்கிச் சாம்பலாகி விட்டான்!

ஆசுதோஷரான சிவபெருமான் சட்டென விழித்துக் கொண்டார். 'என்ன காரியம் செய்து விட்டோம்?' என்று வருந்தினார். தமது தவற்றைத் திருத்திக் கொள்ள மன்மதனை அனங்கனாக அதாவது உருவமற்றவனாக உலகிலே உலாவ விட்டார்!

அருவமான அவன் தரும் மகிழ்ச்சி உலகத்திலேயே ஒப்பற்றது. இறந்தும் இறவாத அவன் புகழைப் பாடுவதாக அமைந்துள்ளது 'காமன் பண்டிகை'.



வில்லின் வண்ணங்கள் காட்டும் எண்ணங்கள்

ரா. வீழிநாதன்

இந்தக் 'காமன் பண்டிகை'யே வட நாட்டில் 'ஹோலி' என்னும் பெயரால் கொண்டாடப் படுகிறது! தமிழ் நாட்டில் காமன் பண்டிகை கொண்டாடப்படும் காலம் தான் வட நாட்டில் 'ஹோலி' கொண்டாடப்படும் காலமும்.

பண்டிகை என்றாலே அது மகிழ்ச்சியைக் குறிக்கும் சொல் அல்லவா? நந்தமிழ் நாட்டுப் பொங்கல் பண்டிகையைப் போலவே, அறுவடையைத் தொடர்ந்த பண்டிகைதான் இந்த ஹோலியும். ஆதி காலத்தில் எட்டு நாட்கள் கொண்டாடப்பட்டு வந்ததாகவும் இதற்கு 'அந்தாஷ்டகம்' என்று ஒரு பெயர் வழங்கி வந்ததாகவும் கூறுவர். இளவேனிற் காலமான மாசி, பங்குனி மாதங்களில், மரங்கள் எல்லாம் பூத்துக் குலுங்கும் அல்லவா? இயற்கையின் மகிழ்ச்சியில் இன்பம் காணுவதை மனித சமுதாயம் எப்பொழுதுமே விரும்பி வந்திருக்கிறது. இனிப்பின் அருமையை உறைப்பில் உணருவது போல, நிழலின் அருமையை வெய்யிலில் காண்பது போல, துன்பத்தினூடே தானே இன்பத்தின் பெருமையை உணர முடியும்?

இவ்வியல்பினை யொட்டி, 'ஹோலி' பண்டிகையைப் பற்றிப் பல கதைகள் வழங்கி வருகின்றன. அவற்றில் ஒரு சில:








இறவா வரம் பெற்ற இரணிய கசிபனுக்கு ஆணவம் தலைக்கேறுகிறது. இனி தனக்கு மரணம் கிடையாது என்ற நம்பிக்கையில், ஆண்டவன் என்று ஒருவன் உண்டு என்பதை மறந்து, தானே ஆண்டவனாகத் திகழத் தலைப்படுகிறான்! குப்பையிலே குருக்கத்தி போலப் பிரகலாதன் அவனுக்கு மகனாக வாய்க்கிறான். எந்நேரமும் 'நாராயணா' என்னும் நாமம் அவன் நாவில் நடமாடுகிறது. அது பிடிக்காத தந்தை மகனையே கொல்லத் துணிகிறான்! அவனது முயற்சிகள் அனைத்தும் படு தோல்வியுறுகின்றன. முயற்சி தோல்வியுறத் தோல்வியுற வீம்பு அதிகரிக்கிறது. எப்படியும் பிரகலாதனைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்று!

அவன் சகோதரி ஹோலிகா அவனைப் போலவே அதிசய வரம் பெற்று வந்தவள்! அவளுக்கு ஒரு புடவை கிடைத்திருந்தது. தீயினாலும் அதைப் பொசுக்க முடியாது. அதை உடுத்தி அவள் தீயில் குளித்தால் அன்றலர்ந்த மேனியளாக அவள் வருவாளே ஒழிய அவளுக்கு ஒரு தீங்கும் நேராது.

அதை அறிந்திருந்த இரணிய கசிபன், அவளுக்கு ஆணை விடுகிறான்: 'அப்புடவையை உடுத்துக் கொண்டு பாலகன் பிரகலாதனோடு அவள் தீக்குளிக்க வேண்டும். அவன் பொசுங்கிச் சாகும்வரை அவனோடு இருந்து அதன் பின் அவள் வெளியே வரவேண்டும்!'



இரக்கமே உருவான பெண் உள்ளம் இதற்கு இடம் தருமா? கும்பகர்ணனைப் போல என்ன மறுத்துக் கூறியும் அவன் பேச்சு எடுபடவில்லை. வேறு வழியின்றி, அவள் அந்தப் புடவையை உடுத்துப் பச்சிளம் பாலகனோடு தீக்குளிக்கிறாள்! அவளது இனிய உள்ளமும் செயலும்தான் காரணமோ, அல்லது நாராயணனின் செயல்தானோ? பிரகலாதன் புடம் போட்ட பொன்னாகத் தீயில் முழுகிக் கரை யேறுகிறான்! அவள் உயிர் துறந்து 'ஹோலி'ப் பண்டிகைக்கு உயிரூட்டுகிறாள். 'பொய்மை பொசுங்குவதும், மெய்ப் பொருள் நிலைத்திருப்பதும் என்றென்றும்



"இளைஞர்களை எல்லாரும் பழிக்கத்தான் செய்யறா; ஆனால் இளைஞர்கள் அப்படி ஒன்னும் கெட்டுப் போகலேன்னுதான் எனக்குத் தோணறது!"

"எப்படிச் சொல்றே?"

"பாரேன்! நாம் இரண்டு பெண்பிள்ளைகள் எதிரே வந்து நின்னு இருக்கோம். தலையை நிமிர்ந்து பார்த்தாங்களா....?"

கண்கூடு' என்பதைக் காட்டி மறைந்த அவள் பெயரால் பண்டிகை கொண்டாடப் படுவது நியாயம்தானே?

'**பொ**ய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது' என்னும் பழமொழி அக்னி பகவான் விஷயத்திலேயே மெய்யாகி விடுகிறது. பிருகு மகரிஷி தவச்சிரேஷ்டர். கல்வி–கேள்விகளில் கரை கண்டவர். அவர் மனைவியின் பெயர் புலோமை. அழகில் அவளுக்கு ஈடு இணை கிடையாது. கற்பினைக் காப்பதில் அவள் அக்கினி. அக்கினியையே அந்தக் கற்புக்கரசிக்குக் காவலாக வைத்தார் பிருகு மகரிஷி. தமது வேள்வியினால் அக்கினி தேவனைத் திருப்திப்படுத்தித் தமக்குக் குற்றேவல் புரியுமாறு செய்த பெருமை அவரையே சாரும்.

அவரது தவ வலிமை அசுரர்களை அச்சுறுத்தியது. அதைக் குலைக்கப் புலோமையைக் கடத்திச் செல்வதுதான் சரியென்று எண்ணினர். காவலிருக்கும் கனல் தேவனைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ள முயன்றனர். பிருகு மகரிஷியைக் காட்டிலும் பெரிய அளவில் திருப்திப்படுத்தி — இந்நாளைய மொழியில் இலஞ்சம் கொடுத்து — அவனைத் தங்கள் பக்கமாக்கிக் கொண்டனர். அதே கையோடு புலோமையையும் பறித்துச் சென்றனர்.

நீராடச் சென்ற மகரிஷி திரும்பி வந்து பார்த்தார். தமது மனைவியைக் காணாமற் போகவே, அக்கினி தேவனைக் கேட்டார். அவன் வாய் திறக்கவில்லை. கடிந்த முனிவர் அவனுக்குச் சாபம் கொடுத்து விடுவதாகப் பயமுறுத்தினார். 'தனக்குத் தெரியாது' என்று தலையாட்டினான். 'காவல் இருப்பவனுக்குத் தெரியாமல் ஒரு காரியம் நடக்குமா? பொய் சொல்லாதே!' என்றார் முனிவர். அவன் எதற்கும் மசியாமல் மூடி மறைக்கவே, முனிவர் சாபம் கொடுத்து விட்டார், 'இனி உலகில் யாரும் உனக்கு உணவளிக்காமற் போகக் கடவது' என்று! உலகம் கலகலத்தது. அக்கினி தேவனோ அன்ன ஆகாரமேதுமின்றி அணையத் தொடங்கிவிட்டான். அவன் செயலொழிந்து விடவே, மக்கள் தவித்தனர். கடைசியில் காத்தல் கடவுளான விஷ்ணுவே இறங்கி வந்து சாபத்தைத் திரும்பப் பெறுமாறு மன்றாடினார்.

ஆரம்பத்தில் கடுநெஞ்சராகத்தான் பதில் அளித்தார் பிருகு. 'இந்த அக்கினி செத்து மடிந்தால் எனக்கு என்ன?' என்றவரை, 'சிருஷ்டியே நசித்துவிடும்' என்று நல்ல வார்த்தை சொல்லிச் சமாதானப் படுத்தும்படியாயிற்று. சாபத்தில் ஒரு திருத்தம் கொடுத்தார், 'இனி தினமும் அசுத்தப் பொருள்களே அக்கினிக்கு உணவாகக் கிடைக்கும்' என்று. இறைவன் இறைஞ்சிய பின், 'தினமும்' என்பதை 'ஒரு தினம்' என்று மாற்றினார். அந்த ஒரு நாள் தான் இந்த ஹோலிப் பண்டிகை தினமாகும்.

அன்று ஒரு நாள் மட்டும் வேண்டாத பொருள்கள் எல்லாம் அக்கினிக்கு இரையாக்கப்படுகின்றன. நம் தமிழ் நாட்டிலே போகிப் பண்டிகை கொண்டாடுவதை இது நினைவு படுத்தவில்லையா?

இன்னுமொரு கதை: ஹோலிகா என்று ஓர் அரக்கி. எங்கே குழந்தைகளைக் கண்டாலும் அவள் இரையாக்கிக் கொண்டு விடுவாளாம்! அவளிடமிருந்து சிறார்களை விடுதலை பெறச் செய்ய மக்கள் வேண்டாத தெய்வங்கள் இல்லை. அவற்றின் உதவியால் அவள் எரிக்கப்பட்டாள். இப்படி அரக்க குணத்தை ஒழித்து மக்கட் பண்பைப் பேணுவதற்காகவும் இந்த 'ஹோலி'ப் பண்டிகை கொண்டாடப் படுகிறது.

இப்படி உயர்வை நோக்கிச் செல்லத் தூண்டும் இந்தப் பண்டிகை கார்முகில் வண்ணனுக்கு உகந்த பண்டிகையாகவும் கொண்டாடப் படுகிறது. நந்தகோகுலத்துக் கண்ணனும், ராதையும் இந்தப் பண்டிகைக்கு வண்ணமேற்றுகிறார்கள். இந்த ஹோலிப் பண்டிகையோடு ராதா கிருஷ்ணனைச் சேர்த்து இந்த உலகத்தையே இன்ப ஒளியில் திளைக்க வைக்கிறார்கள் எத்தனையோ கவிஞர்கள்!

கார்முகில் வண்ணனும் சிவந்த மேனி படைத்த ராதையும் ஒன்று சேரும்போது, வான வில்லின் நிறங்கள் தோன்றுகிறதாம்! அப்படிப்பட்ட 'ராதா — மாதவன்' எங்களைக் காத்தருளட்டும் என்று பொருள்படப் பாடுகிறார் ஒரு கவிஞர்.

இன்னொரு கவிஞரோ, தாம் ஆண்டவனின் வண்ணத்தைக் காணப் புறப்பட்டதாகவும், தாமே அந்த நிறத்தை அடைந்து அவரோடு ஒன்றி ஆத்மானந்தத்தில் திளைப்பதாகவும் கூறி மகிழ்கிறார்!

இப்படிப் பண்டிகையாக உருவெடுத்து, இலக்கியமாகப் பெருகி, சிறியவர் — பெரியவர், பணக்காரர் — ஏழை, ஆண் — பெண் என்ற பாகுபாடின்றி வண்ணப் பொடிகளைத் தூவி மகிழவைத்து, ஒரு நிறமாக்கி, ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியத்தையும் நினைவுறுத்தும் பண்டிகையாகத் திகழும் இந்த 'ஹோலி' சமுதாய ஒருமைப்பாட்டுக்கும் அடிகோலுகிறது! இன்பம் கூட்டும் இளவேனிற் காலத்து இந்தப் பண்டிகைக் காட்சி ஒன்றுதான் நமது 'கல்கி' இதழின் அட்டையை அலங்கரிக்கிறது. வண்ணப்படம்: **வித்யா விரதா**

பகலுணவுத் திட்டம் சுவையான சர்ச்சைகள்

பயன் தரவில்லையே?

"மதிய உணவுத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் சிரியது என்பதை ஒப்புக் கொண்டாலும், இத்திட்டம் நிர்வகிக்கப்படும் விதத்தைப் பார்த்தால், எதிர் பார்த்த பலன் கிட்டவில்லை; இத்திட்டம் வெற்றி பெறவில்லை என்றே கூறவேண்டும்" என்கிறார் திரு என். வி. சந்திரன். இவர் ஓய்வுபெற்ற உதவிக் கலெக்டர்.

"பல ஏழைச் சிறுவர்களுக்கு மதிய உணவு பள்ளியிலேயே கிடைக்கும்படி செய்திருக்கிறார்களே — இது ஓர் அரிய வாய்ப்பில்லையா? அந்த அளவுக்குத் திட்டம் வெற்றிதானே?" என்று கேட்டதற்குத் திரு சந்திரன் கூறுகிறார்:

"அதுதான் இல்லை. வறுமை காரணமாகப் பள்ளிக்குச் செல்ல இயலாத சிறுவர்களுக்குப் பள்ளியிலேயே நடுப் பகல் உணவு அளித்தால் அவர்கள் தவறாது பள்ளிக்கு வருவார்கள் என்பது திட்டத்தின் ஒரு குறிக்கோள். ஆனால் பல பிள்ளைகள் இந்த உணவுக்காகவே பள்ளிக்கு வருகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. மதிய உணவு உட்கொண்ட பின் சில பிள்ளைகள் பிற்பகலில் வகுப்பில் தங்குவதில்லை. வீட்டுக்குப் போய் விடுகிறார்கள். சிலர் சாப்பாட்டு வேளைக்கு வருவார்கள்! தாமதமாகப் பள்ளிக்கு வரும் சிறுவர்களுக்குச் சாப்பாடு இல்லை என்று மறுக்கவும் இயலாது.

"சாதி, சமய வேறுபாடின்றி, ஏழை — பணக்காரன் என்ற பேதமில்லாமல் எல்லாப் பிள்ளைகளும் ஒரு சமுதாய உணர்ச்சியுடன் உணவு அருந்துவதால் சிறுவர்களிடையே ஒருமைப்பாடு வளரும் என்ற நோக்கமும் இந்தத் திட்டத்தின் அடிப்படைக் காரணமாயிருக்க வேண்டும். இந்த நோக்கம் என்னவோ சிரியதுதான். ஆனால், நடைமுறையில் இது அனுஷ்டிக்கப்படுவதில்லை. கிராமங்களில் உள்ள பள்ளிகளில் பெரும்பாலும் மிகவும் வறுமை நிலைமையில் உள்ள சிறுவர், சிறுமியர் மட்டுமே பள்ளியில் வழங்கப்படும் மதிய உணவை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். 'என் மகனுக்கு என்னால் வீட்டில் சோறு போட முடியாதா? இவன் ஏன் அந்த இலவசச் சோற்றைத் தின்ன வேண்டும்?' என்பதே பணக்காரப் பெற்றோர்களின் மனோபாவம். இந்தத் திட்டம், பொருளாதார அடிப்படையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற மனப்பான்மையை இளம் உள்ளங்களில் வளர்க்கத்தான் செய்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. எதிர்பார்த்த நல்ல நோக்கம் ஈடேறவில்லை என்பது தவிர, விபரீதப் பலனும் விளைகிறதல்லவா?

"இலவச மதிய உணவு என்ற ஆசையை மூட்டி, பள்ளிக்கு வர விரும்பாத, படிப்பில் ஆர்வமேயில்லாத பல சிறார்களைப் பள்ளிக்கு வரச் செய்கிறோம். அந்த ஆசை காரணமாக வேறும் அவர்கள் பள்ளிக்கு ஒழுங்காக வந்து



பள்ளி செல்லும் தமது பேரனுடன் திரு என். வி. சந்திரன்

படித்தால் நல்லதுதான். ஆனால்... படிப்பில் நாட்டமற்ற பல சிறார்கள் படிப்பில் ஆர்வமுள்ள சிறுவர்களைக் கெடுக்கிறார்கள். கவனத்தைத் திருப்பி விளையாட்டிலும் குறும்பிலும் ஈடுபடச் செய்கிறார்கள். பள்ளிகளில் வழங்கப்பெறும் மதிய உணவு தரத்தில் உயர்ந்தது என்றும் கூற முடியாது. ஆனால், அந்த அளவு தரமுள்ள உணவைக்கூட வீட்டில் அளிக்க முடியாத நிலையிலுள்ள பெற்றோர்கள் பலர் இருக்கிறார்கள். அத்தகையவர்கள், தங்கள் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதன் முக்கிய நோக்கம் கல்வியேயன்றி மதிய உணவுக்காக அல்ல என்பதை உணர வேண்டும். பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் அவர்கள் அக்கறையில்லாமல் இருப்பதால் எதிர்பார்த்த நற்பலன்கள் இத்திட்டத்தின் மூலம் கைகூடவில்லை" என்று பெற்றோர்களின் தவற்றினையும் சுட்டிக் காட்டுகிறார் திரு சந்திரன்.

"நீங்கள் உதவி மாவட்ட அதிகாரியாகப் பணியாற்றியவர் என்ற வகையில் மதிய உணவுத் திட்டத்தின் நிர்வாகத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பீர்கள் அல்லவா? நிர்வாகத்தில் என்ன என்ன குறைபாடுகள் கண்டிருக்கிறீர்கள்?"

''பொதுவான ஒரு குறைபாடு, உணவுத் தயாரிப்பில் போதிய கவனம் செலுத்தப் படுவதில்லை என்பதே. ஒரு சிறுவனுக்கான சாப்பாட்டின் பெறுமானம் பத்து காசுகளே. இது எப்படிச் சத்துள்ள உணவாக முடியும்? போதிய அளவு பொருளுதவி கிட்டாததால் உணவின் தரத்தை உயர்த்தவும் வழியில்லை. 'கேர்' (Care) நிறுவனம் அளிக்கும் கணிசமான உதவியால் இத்திட்டம் இந்த அளவுக்காவது செயல்பட முடிகிறது. சுகாதார அடிப் படையில் பார்த்தால், பெருமளவில் தயாரிக் கப்படும் இந்த மதிய உணவு பாராட்டக் கூடியதாயில்லை. பாத்திரங்கள் நன்கு சுத்தம் செய்யப்படுவதில்லை. கறிகாய்கள் சொத்தை, அழுகல் இல்லாமல் இருக்கின்றனவா என்று சரிவரக் கவனிக்கப்படுவதில்லை.

''இந்தத் திட்டத்தினால் பள்ளியின் தலைமை யாசிரியருக்கு ஒரு பொறுப்பு கூடுதலாகிறது. கல்வி போதனையில் அவர் தமது முழுக் கவனத்தையும் செலுத்த முடிவதில்லை.''

''எப்படி?''

''கிராமங்களில் மதிய உணவு நிருவாகக் குழுவில் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர், பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆகியோர் பொதுவாக இடம் பெறுவது வழக்கம். உணவுத் தயாரிப்பில் தலைமை ஆசிரியருக்கு நேரிடையான பொறுப்பு இருப்பதுடன் மறைமுகமான சில பொறுப்புக்களும் இல்லாமலில்லை. அரிசி, பருப்பு முதலிய பொருள்களின் 'ஸ்டாக்' கைவசம் இருக்க வேண்டிய அளவைவிடக் குறைவாக இருந் தால், அதிகாரிகள் பரிசோதனை செய்ய வரும் போது தலைமையாசிரியரே பதில் சொல்ல நேரிடுகிறது. சிப்பந்திகள் யார் தவறு செய்திருந்தாலும், பொறுப்பு என் னவோ தலைமையாசிரியரையே சார்ந்து விடும். ஏதாவது பொருள்கள் திருட்டுப் போய் விட்டால், தலைமையாசிரியர் அனுப விக்கும் வேதனை கொஞ்ச நஞ்சமன்று. கல்வியில் தாம் செலுத்த வேண்டிய கவனத் தில் ஒரு பகுதி மதிய உணவு நிர்வாகத்தில் விரயமாகிவிடுகிறதே என்று தலைமையாசிரியர் வருத்தப்பட்டால் நியாயந்தானே?

''இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் சொல்லுகிறேன் — மதிய உணவுத் திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றியடையவில்லை'' எனக் கூறுகிறார் திரு சந்திரன். உதவி தாசில்தார், தாசில்தார், உதவி கலெக்டர், என்று படிப்படியாக உழைப்பினால் முன்னுக்கு வந்த இவர், எந்தப் பிரச்னையையும் அனுதா பத்துடன் அணுகுபவர். மதிய உணவுத் திட் டத்திலுள்ள இக்குறைபாடுகளை வெளியிடும் போதும், அவரது குரலில் இந்த அநுதாபத் தின் எதிரொலிப்பைக் கேட்க முடிந்தது.

பேட்டிகண்டவர் 'பாணன்'

(அடுத்த இதழில் இதற்குச் சென்னை கார்ப்பரேஷன் கழக ஆணையாளர் திரு ஜே. ஏ. அம்பாசங்கர் பதில் அளிக்கிறார்.)

தேர்த் திருவிழா

''மழை முத்து, முத்துப் பந்தலிட்டுக் கிட்டக் கிட்டத் தள்ளுது!'' என்று பரிச லோட்டி சரவணன் அயலூரில் மோர்க்காரி வள்ளியோடு ஆடிப் பாடிக் குதிக்கும் வேளை யிலே, அவன் தங்கை சிவகாமி உள்ளூரில் சினிமா டைரக்டர் ஆசைக்குப் பலியாகுள். பலன் பரிசலோட்டி சரவணன் சென்னைக் குப் பயணம் ஆகி ரிக்ஷாக்காரர், போலீஸ் காரராகித் தங்கையின் காதலரைத் தேடு கிறான். கர்ப்பத்தோடு சிவகாமி சென்னைக்கு வர, வள்ளியும் அங்கே வருகிறாள். கடைசி யில் சினிமாவில் நடிப்புக்காகச் சேர்ந்தவர்கள் வாழ்க்கையிலும் ஒன்றுகூடுகின்றனர்.



தேர்த் திருவிழா தலைப்புக்கும் படத்துக் கும் சம்பந்தமில்லை. காவிரிக் கரையிலே கிராமக் காதல் துள்ளு நடை போடுகிறது. மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., பரிசலோட்டி எம். ஜி. ஆர்., ரிக்ஷாக்கார எம். ஜி. ஆர்., போலீஸ்கார எம். ஜி. ஆர். என்று பல கோணங்களில் அவரைச் சந்திக்கிறோம்! பரிச லோட்டி எம். ஜி. ஆர். நடிப்பிலே சிறக்கிறார்.

மோர்க்காரி வள்ளியாக ஜயலலிதா குதி நடை போடுகிறாள்; ஆட்டத்துக்குக் கேட்பா னேன்? சிவகாமியாக வரும் விஜயகுமாரி சிறப்பாக நடிக்கிறாள். வில்லன் அசோகன் சாண்டோ சின்னப்பா தேவர் படத்தில், எம். ஜி. ஆருடன் அடி உதை, வாள் சண்டை போடுவதற்காகவே அவதாரம் எடுத்திருக்கிறார்!

வேல் நாடகக் கம்பெனி நடத்தும் நாகேஷ் — மனோரமா கோஷ்டியினர் 'பிலிம் பினான் சியர்' பதவிக்கு உயர்ந்துவிடுகின்றனர்!

தேர்த்திருவிழா தேர் நகருவது போல் நகரவில்லை. வேகமாகத்தான் செல்லுகிறது. திருவிழாக் காட்சிகள் பல உண்டு. எல்லாமே எல்லாருக்குமே பிடிக்குமா? அவரவருக்கு எது பிடிக்குமோ அதை மட்டும் ரசிக்கவும்!



வெற்றிக்கு வித்திட்ட கைதிகள்

கொலை கொள்ளை போன்ற பயங்கரக் குற்றங்கள் புரிந்து ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்பட்ட பன்னிரண்டு கைதிகள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் குரூரமானவர்கள். இந்தப் பன்னிரண்டு பேர்களின் வீணாகும் வாழ்க்கையை மகத்தானதொரு சாதனைக்காகப் பயன்படுத்தினால் என்ன என்று நினைக்கிறார் ஜெனரல் வார்டன் என்பவர். நாஜிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸ் நாட்டில் பாரசூட் மூலம் இவர்களை இறக்கிவிட்டு மிகப் பெரிய ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் தங்கியுள்ள ஒரு மாளிகையைக் குண்டுகள் வைத்துத் தகர்த்து நாசமாக்கும் வேலையில் இக்கைதிகளை ஈடுபடுத்த வேண்டும். இதில் அவர்கள் உயிர் துறந்தால் அது அவர்களுக்குக் கௌரவமான மரணமாகும். வெற்றி பெற்று மீண்டாலோ விடுதலை பெற்று வாழலாம்.



கண்டிப்புமிக்க மேஜர் ரீஸ்மென் என்பவர் அடங்காப் பிடாரிகளான பன்னிரண்டு கைதிகளையும் அடக்கி ஆண்டு இட்டத்தில் வெற்றி காணும் பொறுப்பை ஏற்கிறார். அவரவர்களின் முரட்டுத்தனங்களுக்கு ஈடுகொடுத்து, கெஞ்சியும் மிஞ்சியும் அவர்களுடன் பழகி, பன்னிருவரையும் தம் ஆணையை ஏற்கும்படி செய்கிறார்.

குறிப்பிட்ட பணிக்கு ஏற்ற வீரர்களாக அவர்களை உருவாக்கப் பயிற்சியளிக்கிறார். அதில் எத்தனையோ அநுபவங்கள்.


உண்மையாக நடந்த கதை இது. இரண்டாவது உலகப்போரில் நேசத் துருப்புக்கள், ஹிட்லரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பிரான்ஸை விடுவிக்கக் கிளம்பிய தினத்துக்கு முன்னதாக நடந்தது இந்த நிகழ்ச்சி. ஜெர்மானியத் தளபதிகள் பலரும் இதில் மாண்டதால் நேசத் துருப்புகள் வெற்றி பெறப் பெரிதும் உதவிய சம்பவம்.

முரட்டு மனிதர்களின் முக பாவங்களைத்தான் எப்படியெல்லாம் படமாக்கியிருக்கிறார்கள்! 70 எம்.எம். படமானதால் ஒவ்வொருவர் முகமும் குளோஸ்–அப்பில் நாலைந்து மடங்கு பெரிதாகவே தெரிகிறது. ஆயினும் அம்முகங்கள் உணர்ச்சிகளைப் பொழிவதால் நமக்கு அலுப்புத் தட்டவில்லை. ஆர்வமே அதிகரிக்கிறது. மேஜர் ரீஸ்மென்னாக வரும் 'லீ மார்வின்' அகாதமி பரிசு பெற்ற நடிகர். ''டர்ட்டி டஜன்'' (Dirty Dozen) ஒரு மகத்தான, மறக்க முடியாத படம்.



சலவைக்கு சலவை...

துணிகளுக்கு அதிக ஒளியூட்டுவது ஸன்லைட்



ஸன்லைட் சோப்பினால் சலவைசெய்து பார்த்தீர்களானால் தெரியும் வெட்ட வெளிச்சமான உண்மை: சலவைக்கு சலவை உங்கள் துணிகளுக்கு அதிக ஒளி! சிறிதே தேய்த்தாலும் செழுசெழுவென்று கொழிக்கும் நுரை—தூய்மை ஓங்க வெளுக்கும் ஒளி நிரக்க. உங்கள் துணிகள் அனைத்துக்கும் உரியது ஸன்லைட்.

**உங்கள் அன்றாடத் துணிகளின்
சலவைக்குரியது ஸன்லைட்**

லின்டாஸ்- S. 62-140 TM (R)

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

விளையாட்டில் வீராங்கனை :

படகில் பாவையர்

கோடை விடுமுறை. ஸ்ரீ ராமகிருஷ்ணன் குடும்பத்தினர் கோடைக்கானலுக்கு விடுமுறைக்குச் சென்றிருந்தார்கள். அழகிய ஏரியையும் படகையும் கண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணன் அவர்களின் புதல்விகளான கீதா, பிரபா, விமலா, உமா ஆகியோருக்கு ஒரே கொண்டாட்டம். படகில் ஏரியைச் சுற்றிச் சுற்றி வருவதில் சிறுமிகள் மகிழ்ந்தார்கள். அவர்களுக்குத் தாங்களே படகு விடக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. தந்தையிடம் தங்கள் ஆசையைத் தெரியப்படுத்தினார்கள். அவர் அனுமதி கொடுத்து விடவே, விடுமுறை முழுதும் படகு விடும் நுணுக்கங்களையெல்லாம் தெரிந்து கொண்டார்கள்; படகுக்குத் துடுப்பு போடவும் தொடங்கி விட்டார்கள். விடுமுறையோடு படகோட்டும் பயிற்சி முடிந்துவிடும் என்று கருதியிருந்த தந்தை ஏமாந்தார்! சென்னைக்கு வந்ததும் ''அப்பா! அருகில்தானே அடையாறு படகுக் கழகம் இருக்கிறது. இங்கேயும் படகு விட அனுமதியுங்கள்! எங்களுக்குப் 'பொழுது போகும்!'' என்றனர் செல்வக் குமாரிகள். தம் அருமைப் புதல்விகளைத் திரு ராமகிருஷ்ணன் அடையாறு படகுக் கழகத்தில் மேலும் படகு செலுத்தும் பயிற்சியில் ஈடுபட அனுமதித்தார். 1966ம் வருஷம் பெண் மணிகளுக்கான இரட்டையர் படகோட்டும் போட்டியில் குமாரி கீதாவும் குமாரி பிரபாவும் கேடயப் பரிசு பெற்றார்கள். 1967ம் ஆண்டில் நடைபெற்ற பெண்மணிகளுக்கான நால்வர் படகுப் போட்டியில் நான்கு புதல்விகளுமே ஒரு கோஷ்டியாகக் கலந்து கொண்டு மிஸ் ஷெர்லிகர் கோஷ்டியை வென்று கேடயத்தைப் பெற்றார்கள்.

''படகு செலுத்தும் போட்டியில் மூன்று பிரிவுகள் உண்டு. பயிற்சி பெறுவோர், ஜூனியர், ஸீனியர் என்று. பயிற்சி பெறுவோர் படகு கவிழ்ந்து விடாமல் இருக்கக் கனமானது; ஜூனியர் படகு நடுத்தரமானது. ஸீனியர் படகுகள் இலேசானவை, விரைவாகப் போகக் கூடியவை. ஒருவர், இருவர் நால்வர் என்று படகு செலுத்துவதில் பலவிதப் போட்டிகள் உண்டு!'' என்று குமாரி கீதா படகுப் போட்டியைப் பற்றி விவரித்தார். அவர் எம். ஏ. பட்டம் பெற்று, சென்னை சர்வகலாசாலையில் 'ஜர்னலிசம்' படித்து வருகிறார்.

''படகில் துடுப்பு போட இருவரோ நால்வரோ எத்தனை பேர் இருந்தாலும் படகை நிர்வகிப்பவர் காப்டன்தான் (Cox). அவரது திறமைதான் வெற்றிக்கு வழி வகுக்கும்! படகைச் செலுத்துவதில் உள்ள நுணுக்கங்களை விவரிப்பதும் துடுப்புப் போடுவோரை உற்சாகப்படுத்துவதும் 'காக்ஸி'ன் வேலை!'' என்றார் குமாரி பிரபா. இவர் எம். எஸ்ஸி. படித்துக் கொண்டிருக்கிறார்.

''சென்ற வருஷம் அடையாறு படகுக் கழகத்துக்கு நூற்றாண்டு விழா. அதைப் போட்டிகள் நடத்திச் சிறப்பாகக் கொண்டாடினோம். கல்கத்தா, பூனா, இலங்கை, கராச்சி ஆகிய நகர்களிலிருந்து படகுப் பந்தய நிபுணர்கள் வந்து கலந்து கொண்டனர்'' என்றாள் குமாரி கீதா.

''படகு விடும்பொழுது அசந்தர்ப்பமாகக் கவிழ்ந்து விடலாமல்லவா? அந்த மாதிரி சம்பவம் நிகழ்ந்ததுண்டா?''

''அடையாறு படகுக் கழகத்தில் அந்த மாதிரி சம்பவம் நிகழ்ந்ததில்லை. ஆனால் படகுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களைத் தண்ணீரில் தள்ளித் தமாஷ் செய்வது எங்கள் வழக்கம்!'' என்றாள் குமாரி கீதா.


''உங்களுக்கு நீச்சல் தெரியுமா?''

''என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? மீன் குட்டிக்கு நீந்தத் தெரியுமா என்ற கேள்வி போலல்லவா இருக்கிறது? படகுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கு நீச்சலும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்! துடுப்பைக் கரண்டி போல் போட்டு விட்டால் துடுப்பு தாக்கித் தன்நிலை இழந்து நீரில் விழ நேரிடும்!''

படகுப் பந்தயங்களுக்கென்று விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட படகுகள் அடையாறு படகுக் கழகத்தில் நீரில் மிதந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றில் நான்கு சகோதரிகளும் அமர்ந்து நீண்ட தூரம் சென்றார்கள்.

அவர்களது ஐந்தாவது சகோதரி கடைக் குட்டி ரமா, ''எனக்கும் படகு வலிக்கத் தெரியும்! நானும் வருங்காலத்தில் படகுப் போட்டிகளில் கலந்து கொள்வேன்!'' என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டு வந்தாள். —குண்டுமணி

படகோட்டும் பாவையர்களான குமாரிகள் கீதா, பிரபா, விமலா, உமா. நடுவில் நிற்பவர் 'காக்ஸ்'.





அனுபவம் புதுமை

எழுத்தை ஆள்வோர்

கி. ராஜேந்திரன்

மேற்கு பெர்லினில் வானொலிக்கென்று என்னைப் பேட்டி கண்டார்கள். அப்போது என்னை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தியவர், "Mr. Rajendran, in addition to being Associate Editor of Kalki is also a member of the Tamil Writers' Association which is a rare distinction" என்றார்.


எனக்கு வியப்பாக இருந்தது. கல்கி பத்திரிகையின் துணை ஆசிரியராக இருப்பதை விடத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் அங்கத்தினனாக இருப்பதற்கு ¶ அல்லவா ஓரளவு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசிவிட்டார் அவர்!

பேட்டியெல்லாம் முடிந்த பிறகு அவரிடம் இதுபற்றி விவாதித்தேன்.

மேனாடுகளில் சாதாரணமாகப் பத்திரிகைக் காரியாலயங்களில், — சஞ்சிகைகள் உள்படத்தான் — ஆசிரியர் குழாத்தில் ஒருவராக இருப்பவர் எழுத்தாளராகவும் இருக்க வேண்டும் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை. சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவோ துணை ஆசிரியராகவோ இருப்பதே ஒரு முழு நேர வேலையாக, சிரமமான காரியமாகக் கருதப்படுகிறது. அந்த ஒரு பணியைச் செவ்வனே செய்தால் போதும் அவர்களுக்கு. ஆக சில வேளைகளில் உதவி ஆசிரியர் எழுத்தாளராகவும் திகழ்ந்தால் அது செயற்கரிய செயலாகக் கருதுகிறார்கள். ஆசிரியர் குழாத்தில் தலையங்கம் எழுதுவோர், விசேஷக் கட்டுரைகள் எழுதுவோர் என்று தனித்தனியாக உள்ளனர். ஆசிரியர், உதவி ஆசிரியர், துணை ஆசிரியர் ஆகியோருடைய முக்கிய வேலை 'எடிட்டர்' என்ற சொல்லால் குறிக்கப்படுகிற 'எடிட்டிங்' தான்.

நமது நாட்டிலேதான் நம்மை ஒன்றும் எழுதச் சொல்லவில்லையே என்று ஏங்கும் துணை ஆசிரியர்களையும் ஒன்றுமே எழுதாமல் ஏதோ நாலு கதைகளைத் திருத்திப் போட்டுவிட்டு உட்கார்ந்திருக்கிறானே என்று அங்கலாய்க்கும் நிர்வாகத் துறையினரையும்

□ தரமான எழுத்தாளர்களின் நூல்கள் உயர்ந்த விலைகளில் பல பதிப்புக்களும், பிறகு மலிவு விலையில் பல பதிப்புக்களும் வெளியாகின்றன. மட்டரகமான எழுத்துக்கள் எடுத்த எடுப்பிலேயே நேரடியாக மலிவுப் பதிப்பாக வெளி வருகின்றன.





பத்திரிகை, சஞ்சிகைக் காரியாலயங்களில் காண முடியும்.

அது எப்படியோ போகட்டும் என்ருல், ''என்ன ஸார், கல்கிப் பத்திரிகையில் துணை ஆசிரியர் என்று சொல்லிக் கொள்கிறீர்கள்; உங்கள் கதை கட்டுரைகள் எதையுமே மாதக்கணக்கில் பத்திரிகையில் காணுமே?'' என்று கேட்கும் நண்பருக்கு என்ன பதில் சொல்வது ?

ஃ ஃ ஃ

இர்விங் வாலஸ் என்ற அமெரிக்க நாவலாசிரியர் டெலிபோனை எடுத்து ஒரு திரைப்படத் தயாரிப்பாளரிடம் தம்மிடம் கதைக்கு உண்டான ஒரு புதிய கருத்து உள்ளதாகச் சொன்னுர். உடனே படாதிபதி நேரில் வந்து லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து அந்தக் கருத்தைப் படம் பிடிப்பதற்கான உரிமையை வாங்கிக் கொண்டு போனுர். கதாசிரியரின் மனத்திலே உள்ள கருத்துத்தான். அது என்ன என்பதுகூடப் படாதிபதிக்குத் தெரியாது ! அப்படி அடிக்கிறது சில எழுத்தாளர்களுக்கு அதிர்ஷ்டம்.

பிரிட்டனிலே அரசியாரால் 'நைட்ஹுட்' வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எழுத்தாளர் ஒருவர். அவரது படைப்புக்கள் இரண்டு. பிரகரிப்பவர் யாரும் இல்லாத காரணத்தால் மியூஸியத்தில் கையெழுத்துப் பிரதிகளாகவே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன! சிலரது துரதிர்ஷ்டம் அப்படி !

பீட்டர்சினே, இயான் ஃபிளெமிங் போன்ருேர் இறக்கும்போது கோடீசுவரர்களாக விளங்கினர். மதுவுக்கும் நோய்க்கும் அடிமையாகி வருந்திய டயலன் தாமஸ் என்ற கவிஞரின் கதையும் பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

இவ்விதம் எழுத்தாளரின் பொருளாதார நிலையில் ஏற்றத் , தாழ்வுகள் இருப்பினும் ஏழை எழுத்தாளன் என்ற சொற்றொடருக்குப் பிரிட்டன், அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளில் இடமில்லை என்ருல் அது அவ்வளவு பொருத்தமில்லைதான்.. ஏனெனில், எழுத்தாளர் மட்டுமின்றி வேறு எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாஞுலும் வறுமைக் கொடுமையால் அவர்கள் பாதிக்கப்படாதவாறு அரசினரின் சமுதாய நலத் திட்டங்கள் பாதுகாப்புத் தருகின்றன.

ஃ ஃ ஃ

ஃபிராங்க் யெர்பி என்னும் சரித்திர நாவலாசிரியர் பிரமாதமான ஆராய்ச்சிகள் செய்து தமது நாவலில் பல சரித்திரச் சான்றுகளையொட்டிய உண்மைச் சம்பவங்களைச் சேர்த்திருப்பார். புத்தகப் பிரசுரகர்த்தர்கள் அந்தப் பகுதியெல்லாம் 'போர்' அடிப்பதாகக் கூறி வெட்டி எறிந்துவிடுவார்கள். ஃபிராங்க் யெர்பி இதுபற்றி, 'நான் எப்படி எழுதுகிறேன்' என்ற கட்டுரையொன்றில் கொஞ்சம் மன வருத்தத்துடனேயே குறிப்பிடுகிருர். ஆயினும் இது விஷயத்தில் அவர் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

பத்திரிகைத் துறையில் மட்டுமின்றி "புத்தகப் பிரசுரத் துறையிலும்கூட ஆசிரியர்குழாம் உண்டு. 'எடிட்டிங்' உண்டு. 'எடிட்டிங்' என்பது தரத்தை உயர்த்த உதவும் வகையில் திருத்துவது மட்டுமின்றித் தேவையில்லாதவற்றை வெட்டித் தள்ளுவதும்கூடத்தான் என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது.

'' நான் எழுதிய 'இலக்கிய'த்தில் ஒரு வரிகூட மாற்றக்கூடாது'' என்று கூறும் எழுத்தாளர்கள் தமிழ் நாட்டிலேதான் உண்டு. மேனாட்டிலோ, திருத்தப்பட்ட பிரதியைப் பார்க்கும் உரிமையை ஒருசிலர் கோருகிறார்கள். திருப்தி இல்லை என்றால் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள்.

தொடர்கதைகள் ஒரு காலத்தில் பிரபலமாக இருந்த போதிலும் இப்போது அது அநேகமாக இல்லை என்றே சொல்லிவிடலாம். எழுதி முடிக்கப்பட்ட நாவலை அது புத்தகமாக வெளிவருமுன்னர் சுருக்கி, எட்டுப் பத்து இதழ்களில் தொடர்ந்து வெளியிடுகிறார்கள்.

தரமான எழுத்தாளர்களின் நூல்கள் உயர்ந்த விலைகளில் பல பதிப்புக்களும் பிறகு மலிவு விலையில் பல பதிப்புக்களும் வெளியாகின்றன. மட்டரகமான எழுத்துக்கள் எடுத்த எடுப்பிலேயே நேரடியாக மலிவுப் பதிப்பாக வெளிவருகின்றன.

ஃ ஃ ஃ

எத்தனையோ பல ஆண்டுகளாக லட்சிய எழுத்துக்களைப் படித்துப் படித்து அலுத்துப் போன வாசகர்கள் மேனாட்டில் புதிய பாணிகளை வரவேற்கிறார்கள்.

மேற்கு ஜெர்மனியில் 'பாப் ரைட்டர்ஸ்' (Pop Writers) என்ற ஒரு கூட்டத்தினரைச் சந்தித்தேன். அவர்களில் ஒருவர் கையில் டைப் அடித்த தாள் ஒன்றை வைத்திருந்தார். அது என்ன என்று கேட்டேன். ''பாப் திரைப்படத்துக்கான பாப் ஸினேரியோ'' என்றார். ''அந்தப் பாப் எழுத்தைக் கொஞ்சம் படியுங்களேன், கேட்போம்!'' என்றேன்.

''உங்களுக்குப் புரியாது. அது ஜெர்மன் மொழியிலே இருக்கிறது'' என்றார்.

''அது என் தாய்மொழியான தமிழில் இருந்தால்கூட எனக்கு ஒன்றும் புரியப் போவதில்லை; சும்மா படியுங்கள்'' என்றேன். நண்பர் ஒருவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அங்கு கேட்டதை அப்படியே தமிழில் தருகிறேன் :

உன் விரல்கள் முட்டைக் கோஸ் இதழ்களைப் போல் உள்ளன ; ஒரு எலி அந்த இதழ்களைக் கடிக்கிறது; இதழ்களின் நிறம் செம்மையாக மாறுகிறது; ஒரு கத்தியின் தோற்றம்; குரங்கு; 'பக் பக்' என்று அடித்துக் கொள்ளும் இருதயம் ; இலைகள் உதிருகின்றன ; புயல்; அதளபாதளம் ; நான் விழுகிறேன்; விழுந்து கொண்டே இருக்கிறேன்; கடல்; கப்பல் மிதக்கிறது; பறவை — இத்தியாதி, இத்தியாதி........

மரியாதைக்காகப் பொறுமையுடன் இறுதி வரை கேட்டுக் கொண்டிருந்தேன்.

மேனாடுகளில் லட்சிய நோக்கிலிருந்து திரும்பி யதார்த்த நோக்குக்கு வந்தார்கள். ரியலிஸம், நாச்சுரலிஸம், ஸர்ரியலிஸம், எக்ஸிஸ்டென்ஷனலிஸம், பாப் ரைட்டிங் — என்று புதுப் புதுப் பாணிகளை உருவாக்கிக்கொண்டே போகிறார்கள். நாமும் அவர்களைப் பின்பற்ற வேண்டுமா? அவசரப் படக்கூடாது என்பதே என் கருத்து.

லட்சிய நோக்கிலே எந்த அளவுக்கு ஊறித் திளைத்து அம்மக்களும் தேசமும் எந்த அளவுக்குத் தொழில், கல்வி, பொருளாதாரத் துறைகளில் வளர்ந்து முன்னேறிய பிறகு அங்கே ரியலிஸம், எக்ஸிஸ்டென்ஷனலிஸம் போன்ற புதுப் பாணிகள் உருவாகி உள்ளன என்பதைச் சிந்திக்க வேண்டும். எழுத்தாளனுக்கு இந்தக் கடமை உண்டு என்பது எனது அபிப்பிராயம். நாம் உழைத்துப் பாடுபட்டு முன்னேற வேண்டியது எவ்வளவோ இருக்கிற சமயத்தில் வாழ்வின் ஓர் அபத்த நிலையை உணர்த்தும் புதுப் பாணிகள் அவசியமா ?

ஒரு பெண்மணி கற்பழிக்கப்படுகிறாள். குடையை நாம் இழந்தால் என்ன செய்வோம்? 'தொலைஞ்சுதா? போய் ஸ்நானம் பண்ணிவிட்டு வா' என்போம். அதே ரீதியில் தாயார் கற்பழிக்கப்பட்ட மகளைப் பார்த்து, 'போ! போய் ஸ்நானம் பண்ணிட்டு வா!' என்று சொன்னால் அது யதார்த்த நோக்கிலே சரியாக இருக்கலாம்; மறுக்கவில்லை. தாய் அந்நிலையில் வேறு என்னதான் செய்யமுடியும்?

ஆனால் இதுபோன்ற கதைகள் இங்கு எழுதப்பட வேண்டுமா? எழுதக்கூடாது என்றால் இலக்கியம் எப்படி வளரும் ? பெரிய பிரச்னை இது. என்னைப் பொறுத்த வரையில் இலக்கியம் வளர இது போன்ற புது உத்திகளைக் கையாள விரும்புவோர் — அதாவது இன்றைய நமது சமுதாயம் பரவலாக ஏற்றுக் கொள்ளத் தயாராகாத கருத்துக்களை எழுத விழைவோர் — அத்தகைய கதைகளையும் நாவல்களையும் புத்தக வடிவிலே பிரகரிப்பது நலம் என்று தோன்றுகிறது. பிரபலமான குடும்பப் பத்திரிகைகளில் இத்தகைய கதைகளைப் பிரசுரிக்க முயலுவதைத் தவிர்க்க வேண்டும்.

அதோடு யதார்த்த நோக்கிலும் லட்சியத்தைக் காண நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் எனக்குப் படுகிறது. மகாத்மா காந்தியின் வாழ்க்கையை மையமாக வைத்து மற்றத் துணைப் பாத்திரங்களுடன் ஒருவன் கதை புனைகிறான் என்று கொள்வோம். காந்திஜியின் வாழ்க்கை லட்சிய நோக்கிலே அமைந்ததுதான். ஆனால் அவர் கண்ணுக்கு மெய்யாக நம் முன்னே இருந்தவர் என்ற முறையில் அது யதார்த்த நோக்கும்கூடத் தான் அல்லவா ?

ஃ ஃ ஃ

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் அண்மையில் வெளியான ஒரு பிரபலமான நூலைப் படித்துவிட்டு அது பற்றிப் பல கோணங்களில் கருத்துத் தெரிவித்துத் தர்க்கம் செய்கிறார்கள். இது ரொம்பவும் ரசமான நிகழ்ச்சி.

இதே போல் எழுதப் பயிலுபவர்களுக்கான, ''லிட்டரரி ஒர்க்ஷாப்'' என்று ஒரு மாணவர் கூட்டம் நடக்கும். ஒரு நூதனமான கருத்தை ஒருவன் தெரிவிப்பான்.

அதைத் தொடர்ந்து ஒரு நாவலாக அதனை எப்படி உருவாக்கலாம் என்று ஒவ்வொருவரும் பல கருத்துக்களை வெளியிடுவார்கள். பலர் மறுத்துரைப்பார்கள். கதாபாத்திரங்கள், அவர்களது குணாதிசயங்கள், நிகழ்ச்சிகள் எல்லாம் பலரது கூட்டு முயற்சியில் படிப்படியாக உருவாகும். சக மாணவர்களால் திருத்தப்படுவதும் திருத்திக் கொள்வதும் சகஜமாக இருக்கும். எழுத்தார்வம் மிக்க இளைஞர்களுக்கு மிக நல்ல பயிற்சியாக அமைகிறது இது.

ஃ ஃ ஃ

எழுத்தாளர்கள் தங்கள் நாட்டையே நன்கு சுற்றிப் பார்க்க வசதி அளிக்கும் விதிமுறைகள் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் உண்டு. பிரயாணச் சலுகை கிடைக்கும். அதாவது ரயில் டிக்கெட்டுகள் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

பிரிட்டனில் இந்த மாதிரியான சலுகை ஏதேனும் உள்ளதா என்று விசாரித்தேன்.

''பிரிட்டிஷ் எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் எழுத்துச் சுதந்திரத்தை உயிரென மதிப்பவர்கள். அவர்களுக்கு இத்தகைய சலுகை ஏதேனும் தரப்பட்டால்கூட வேண்டாம் என்று ஒருமுகமாக மறுதளித்து விடுவார்கள்'' என்று பதில் கிடைத்தது.

அதாவது ஆட்சியில் இன்றுள்ளோரிடமிருந்து ஏதேனும் சலுகை பெற்றால் எழுத்தாளன் அவனையும் அறியாமலே அடுத்து வரும் ஒரு பிரச்னையில் தவறான முறையில் ஆட்சியில் உள்ளோருக்குச் சாதகமாக எழுதி விடக்கூடும். அதற்கு இடமளிக்கும் விதத்தில் நன்றிக் கடன்பட்டு நிற்கக் கூடாது என்பது அவர்கள் வாதம் !

ஃ ஃ ஃ

ஜனநாயக நாடுகளில் மக்களுக்கு அரசினிடமிருந்து நீதி கிடைக்கச் சிறந்ததொரு சாதனமாக விளங்குவது பத்திரிகை. நீதிக்காக உழைக்கும் பத்திரிகை நிருபர்கள், எழுத்தாளர்கள் பலர் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் 007 — ஜேம்ஸ்பாண்டைக் காட்டிலும் விசித்திரமான வீரச் செயல்களைப் புரிவதோடு துப்பறியும் கலையிலும் 007 போலவே நிபுணர்களாக விளங்க வேண்டிய நிலையில் உள்ளனர். Investigative Reporting அல்லது உண்மையைத் துப்பறிந்து வெளியிடுவது என்ற கலையில் பல எழுத்தாளர்கள் விசேஷப் பயிற்சி பெற்றுச் சூரர்களாய் விளங்குகின்றனர்.

ப்ரொஃப்யூமோ — கிரிஸ்டீன் கீலர் விவகாரம் சில வருஷங்களுக்கு முன்னால் உலகம் முழுவதும் சந்தி சிரித்தது. அதைத் தொடங்கி வைத்தது ஒரு பத்திரிகைதான்.

இது போன்ற விஷயங்களில் எழுத்தாளன் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். தனிப்பட்ட ஒரு நபரின் வாழ்க்கையை அது எவ்வளவு மோசமான வாழ்க்கையாக இருந்தாலும் படம் பிடித்துக் காட்டுவது ஆபத்தாக முடியும். கோர்ட்டுக்கு எழுத்தாளன் இழுக்கடிக்கப்படுவதுடன், மக்களுக்கும் 'வேண்



டாத குப்பையை யெல்லாம் கிளறுகிறானே இவன்?" என்ற எண்ணம் தோன்றிவிடும்.

ஆனால் தனிநபரின் விவகாரம் தேசிய நலனுக்குப் பாதகமாக இருக்கும் போது அதனை அம்பலப்படுத்தினால் புகழ்பெறலாம்.

இன்று பல பத்திரிகைப் பிரதிநிதிகள் சின்னஞ்சிறு டேப் ரிக்கார்டர்கள், குட்டிக் காமிராக்கள் போன்ற துப்பறியும் சாதனங்களுடன் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் வளைய வருகிறார்கள்.

லண்டனில் புராதனமான பொருள்களை விற்கும் வியாபாரிகள் சிலர் ஒன்றுகூடி ஒரு சூழ்ச்சி செய்தார்கள். ஒரு புராதனப் பொருள் ஏலத்துக்கு வரும்போது அதன் சொந்தக்காரருக்குக் குறிப்பிட்ட ஒரு தொகைக்கு மேல் கொடுப்பதில்லை என்று முன்கூட்டியே நிர்ணயித்துக் கொண்டு ஏலத்துக்கு வருவார்கள். அந்த வியாபாரிகளில் யாரேனும் ஒருவர் அந்தப் பொருளை குறிப்பிட்ட அந்த மிகக் குறைந்த விலைக்கு வாங்கி விடுவார். அதைவிட அதிகமாக யாருமே கேட்க மாட்டார்கள். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அதே பொருளைப் பத்து அல்லது இருபது மடங்கு அதிகமான விலைக்கு விற்று லாபத்தைப் பங்கு போட்டுக் கொள்வார்கள்.

இந்தச் சூழ்ச்சி பற்றிக் கேள்விப்பட்ட 'ஸண்டே டைம்ஸ்' பத்திரிகை தனது நிருபரையும் ஒரு புராதனப் பொருள் வியாபாரி மாதிரி நடிக்கச் செய்தது. நிருபர் ஏலம் நடக்கும் இடத்துக்குப் போய்ப் பல வியாபாரிகளுடன் பேசிக் கொண்டிருந்தார். அவரது கோட்டின் உள்பாக்கெட்டுக்குள் டேப் ரிக்கார்டர் இயங்குவதை அறியாமல் இவரும் தங்களது சூழ்ச்சிக் கும்பலில் ஒருவர்தான் என நம்பிச் சில வியாபாரிகள் பேசி விட்டார்கள். அப்போது அவர்கள் சொன்ன செய்திகள் சில அவர்களை நன்றாக மாட்டி வைத்து விட்டன!

இது போன்ற காரியங்களில் இறங்கும் நிருபர்கள் தங்கள் உயிரையே ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்கிறார்கள் என்றால் அது மிகையில்லை.

அயல்நாட்டு ஒற்றர்கள், விபசார விடுதி நடத்துவோர், கள்ளக்கடத்தலில் ஈடுபடுவோர் என்று இப்படிப் பலரகப்பட்ட பேர்வழிகளின் ஊழல்களை அம்பலப்படுத்தும் பத்திரிகை நிருபர்களின் உயிர் ஆபத்துக்குள்ளாவதில் அதிசயமென்ன?

வாஸல் என்று ஒருவன் பிரிட்டிஷ் கடற்படையில் உயர் அதிகாரியாக இருந்தான். ஒரு சமயம் இவன் ருஷ்யாவிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் பணியாற்ற அனுப்பப்பட்டான். இவனுக்கு ஒருவித காமவிகார நோய் இருந்தது. ருஷ்யர்கள் இதனை எப்படியோ கண்டுபிடித்துப் புகைப்படங்களும் அவனுக்குத் தெரியாமலே எடுத்துவிட்டனர்.

பின்னர் புகைப்படங்களைக் காட்டி அவன் ரகசியத்தை அம்பலப்படுத்திவிடுவதாய்ப் பயமுறுத்தினர். அவன் சொல்லி முடியாத வெட்கத்துடன் அவர்கள் கோருவதையெல்லாம் செய்யத் தயாரானான். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவனுக்கு மீண்டும் லண்டனுக்கே மாற்றலாகியது. லண்டன் வந்து சேர்ந்த அவன் ருஷ்யர்களின் கட்டளைப்படி கடற்படை சம்பந்தப்பட்ட ரகசிய தஸ்தாவேஜுகளில் உள்ள விவரங்களை யெல்லாம் அவ்வப்போது ஒரு ருஷ்ய ஒற்றனிடம் கூறி வந்தான். இதற்குப் பதிலாக அவனுக்கு நிறையப் பணம் கிடைத்தது.

அவனுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டே போய்ச் சுகபோகத்துடன் வாழ்வதைப் பார்த்த சில பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குச் சந்தேகம் தட்டியது. அவர்கள் தங்கள் வேவு பார்க்கும் வேலையைத் தொடங்கினர். வெகுசீக்கிரத்தில் எல்லா விவரங்களும் அம்பலத்துக்கு வந்து நீதி ஸ்தலத்தில் வழக்கு நடந்து வாஸல் கடுமையாகத் தண்டிக்கப்பட்டான்.

இப்படி எத்தனை எத்தனையோ உதாரணங்களைப் பிரிட்டிஷ் அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள், எழுத்தாளர்களின் திறமைக்குச் சான்றாகக் கொடுத்துக் கொண்டே போகலாம்.

அசகாய சூரர்கள்தான் அவர்கள்.



"ஏன் இப்படி ஒவ்வொருவரும் துக்கமா இருக்கிறாங்க?"

"அதுவா? முதலில் இருப்பவருக்கு மூன்று ரூபாய் தேவை, அடுத்தவருக்கு முந்நூறு தேவையாம், மூன்றாம் பேர்வழிக்கு மூவாயிரம், நான்காம் நபருக்கு முப்பது ஆயிரம் ரூபாய் வேணும், கடைசி மனிதருக்கு வேண்டியது மூன்று லட்சமாம்!"



நன்றியுள்ள நாயா, யார் சொன்னது?

ஃ. ஆர். மோகன்

"நாய் விற்ற காசு குரைக்குமா?"

"நாணமும் அச்சமும் மடநாய்களுக் கன்றோ வேண்டும்!"

"நன்றி கெட்ட மகனைவிட நாய்கள் மேலடா....!"

"காலேஜ் அட்மிஷன் வாங்குவதற்குள் நான் பட்ட பாடு பட்டுவிட்டேன்."

இப்படிச் சில நாய் மொழிகள்.

ஆனால் நாய் இறும்பூதடையக் கூடிய விஷயமும் ஒன்று உண்டு. அதாவது அவை உலக சரித்திரத்தையே நிர்ணயிக்கக்கூடிய பல மாபெரும் அரசியல் தலைவர்களையும், பேரு மன்னர்களையும் மிக மிகக் கவர்ந்துள்ளன.

சோவியத் மேஜர் ஜெனரல் ஜி. மெத்வியேதோ நாயைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: "வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு நாய் மனிதனின் நண்பனாகவும், தோழனாக வும் இருந்துள்ளது.

"பாசிஸ்டுப் படையெடுப்பாளர்களை எதிர்த்து சோவியத் மக்கள் வெஞ்சமர் புரிந்த அந்தக் கடுமையான ஆண்டுகளில் நாய் விலகிச் சென்று விடாது உற்ற துணையாகக் கூடவே இருந்து பணி புரிந்தது. பகைவனது குண்டு மழையில் போர்க்களங்களிலிருந்து நமது நாலு கால் தோழர்கள், காயமுற்ற ஆறு லட்சம் போர் வீரர்களை மறைவிடங்களுக்கு இழுத்து வந்து பாதுகாத்தன. தரைக்கடியில் பகைவன் வைத்துச் சென்ற வெடிகள் இருக்கும் இடங்களைக் கண்டுபிடித்துக் கூறின. மனிதன் மாபெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைச் சாதிப்பதற்கும் அவை உதவியுள்ளன."

லியோனித் குருன்ஸ் கூறுகிறார்: "ஆட்டு மந்தை மலைகளிலிருந்து இறங்கி அவற்றின் குளிர்காலக் கொட்டில்கள் இருந்த பள்ளத் தாக்கிற்கு வந்து கொண்டிருந்தது. அப்பொழுது தலைமை ஆடு மேய்ப்பாளர் தமது சிறந்த காவல் நாய் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டதைக் கண்டார். வழக்கமாக அவர் அணிந்து கொள்ளும் ஆட்டுத் தோல் தொப்பியையும் காணவில்லை. மறந்து போய், தாம் அதைக் கோடைக்கால மலை முகாமிலேயே விட்டு வந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.

"வசந்தம் வந்ததும் கூட்டுப் பண்ணையின் மந்தை மலைகளில் உள்ள மேய்ச்சல்வெளிகளுக்குச் சென்றன. தமது தொப்பி இவ்வெளிகளில் கிடப்பதைக் கண்டார், தலைமை ஆடு மேய்ப்பாளர். காணமற் போன நாய் அதனருகே அமர்ந்து காவல் காத்துக் கொண்டிருந்தது! இதிலிருந்து நாயின் நன்றி மறவாமை தெள்ளென விளங்குகிறதே!"

பத்திரிகையாளர் எஸ். நிகோலயேவ் எழுதுகிறார்: "மனிதன் இன்று விண்வெளியிலே பய

ணம் செய்கிறான். விரைவில் சந்திரனுக்கும் அதன் பின் பிறகோள்களுக்கும் சென்று வருவான். மனிதன் பாதுகாப்புடன் புறவெளியில் பயணம் செய்வதற்குப் பாதையைச் செப்பனிடும் பொருட்டு முதலில் விண்வெளிக் கப்பல்களில் பிராணிகள் வைத்து அனுப்பப்பட்டன. வெதெரோக், உசோல்போக் ஆகிய இரண்டு நாய்களும் விண்வெளிப் பயணத்துக்குத் தயார் செய்யப்பட்டது பற்றிய விவரங்கள் என் நினைவுக்கு வருகின்றன. இந்த நாலு கால் பயணிகளுடன் காஸ்மாஸ் – 10 என்ற ஸ்பூத்னிக் சுழற்பதைக்கு அனுப்பப்பட்ட செய்தி உலகெங்கும் வெளியிடப்பட்டது. பயணத்தின் போது இந்நாய்களின் உடல்நிலை பற்றிய விவரங்களை ஸ்பூத்னிக்கிலிருந்த கருவிகள் பூமிக்கு அறிவித்தன.''

எழுத்தாளர் போரிஸ் ரையாபினின் கூறுகிறார் : ''இமாலயத்தின் உயர் சிகரத்தை மனிதன் இறுதியாக வெற்றி கண்டு விட்டான் என்ற நற்செய்தி 1959 மே மாதத்தில் நம் எல்லாரையும் பரவசமடையச் செய்தது. நோர்கி தென்சிங்கும், எட்மண்ட் ஹிலாரியும் எவரெஸ்டு சிகரத்துக்கு ஏறிவிட்டனர். இவர்களுடைய பெயர்கள் எல்லாப் புவியியல் பாடப் புத்தகங்களிலும் இடம் பெறும் அளவுக்குப் பிரபலமாயின.

''இந்த வெற்றியாளர்களுடன் கூடச் சென்றிருந்த மற்றோர் உறுப்பினரின் பெயர் பத்திரிகைகளிலும் வானொலிச் செய்திகளிலும் அடிபடவில்லை. இக்குழுவில்' இந்த வெற்றியாளர்களின் உண்மை நண்பனாகக் கூடச் சென்றிருந்த இந்த நாலு கால் தோழனின் பெயர் சங்கர்.''

சோவியத் எழுத்தாளர் கான்ஸ்தன்தின் பௌஸ்தோவ்ஸ்கி கூறுகிறார்: ''நாயிடம் காணக்கூடிய தன்னலமறுப்பு, வீரம், சாமர்த்தியம் ஆகிய அரிய பண்புகளை ஒருங்கே உணர்த்தும் சொல் எதுவும் இல்லை. நாயைத் துன்புறுத்துபவனை நாய் மன்னித்து விட்டாலும்கூட, அவனை நான் மன்னிக்க முடியாத கொடியவனாகவே கருதுவேன். நாயிடம் உள்ள நன்றி உணர்வும், பற்றுறுதியும், ஆனந்தமாயினும் துன்பமாயினும் துடித்துக் கொண்டு உடனே வெளிக் காட்டிவிடும் அதன் இயல்பும் என் நெஞ்சைக் கொள்ளை கொள்கின்றன. நாயைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் என் உள்ளம் நெகிழ்கிறது.''

இதையெல்லாம் படிக்கும்போது எவ்வளவோ சந்தோஷமாக இருப்பினும், ''நன்றியுள்ள நாயா, யார் சொன்னது அப்படி? அதைவிடக் கொடூரமான விலங்கு இருக்க முடியுமா என்ன?'' என்று கேட்கவைக்குமளவுக்குப் பயங்கரச் சம்பவம் ஒன்றும் நிகழ்ந்திருக்கிறது அமெரிக்காவிலே.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் நியூஸ்வீக் பத்திரிகையில் வெளியாகியுள்ளது இந்தச் செய்தி :

வர்ஜீனியா மாகாணத்தில் மாடிஸன் ஹைட்ஸ் என்ற ஊர் மக்களுக்கு நாய்கள் என்றால் ரொம்பவும் பிடிக்கும். **ஆனால் ரத்தத்தை ருசிபார்த்துவிட்ட நாய்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார்கள்.** குட்மேன் தம்பதியர் தங்கள் பெயருக்கேற்ப ரொம்ப நல்லவர்கள். இரண்டு பிள்ளைகள் அவர்களுக்கு. வயது நான்கு, மூன்று.

பக்கத்து வீட்டுக்காரரின் காவல் நாய்கள் நான்கும் சிறு பிராணிகளைத் தூக்கிப் பிடித்துக் கொன்று தின்று வந்தன என்பதை குட்மேன் தம்பதியர் அறிந்திருந்தனர். கொஞ்சம் ஏமாந்தால் வீட்டிலே செல்லமாக வளர்க்கப்படும் முயல், பூனை முதலானவற்றைக்கூடக் கொன்றுவிடும். அவற்றிடம் எச்சரிக்கையாகவே இருந்து வந்தனர்.

திடீரென்று ஒரு நாள் சிறுவன் வீட்டுக்குள் ஓடி வந்தான். ''அம்மா ! துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடி வா, சீக்கிரம். பக்கத்து வீட்டு நாய்களிடம் தம்பி அகப்பட்டுக் கொண்டான்!'' என்று கத்தினான்.


துப்பாக்கியில் தோட்டா கிடையாது என்பது தாயாருக்குத் தெரியும். கையில் அகப்பட்ட தோட்டக் கருவியொன்றை எடுத்துக் கொண்டு மகன் வழிகாட்டக் கிளம்பினாள்.

குன்றின் அடிவாரம்–காடு. திடீரென்று நாலு நாய்கள் அவள் மீது பாய்ந்தன. தன்னால் முடிந்தவரையில் போராடிப் பயன் இல்லை என்று கண்டதும் மகனை ஒளிந்து கொள்ளுமாறு சத்தம் போட்டுச் சொல்லி விட்டுப் பின்வாங்கிச் சென்று கணவனுக்கு–அவர் வேலை பார்த்து வந்த தொழிலகத்துக்கு டெலிபோன் செய்தாள் தாயார்.


குட்மேன் ஒருசில நிமிஷங்களில் விரைந்து ஸ்தலத்துக்கு வந்தார். ஆனால் அதற்கு முன்னால் மூத்த மகனின் ரத்தத்தையும் ருசி பார்த்துவிட்டன நாய்கள். தகப்பனாரைக் கண்டதும் அவர் மீதும் பாய்ந்தன. கற்களையும் குச்சிகளையும் தமது பூட்ஸ்களில் ஒன்றையும்கூட அவற்றின் மீது விட்டெறிந்து தப்பி வந்தார் குட்மேன். ஆனால் மக்கள் இருவரையுமே காப்பாற்ற அவரால் முடியவில்லை !

பின்னால் ஊர் மக்கள் நான்கு நாய்களையும் சுட்டுக் கொன்று பழி தீர்த்துக் கொண்டார்கள்; ஆனால் குட்மேன் தம்பதியருக்கு அதில் என்ன ஆறுதல் கிடைத்துவிடும் ?

இதற்கு முன்பக்கத்தில் பிரசுரமாகி இருப்பது நாய்களுக்குப் பலியான பாலகர்களின் படங்களே.



பொன்னிவனத்துப் பூங்குயில்



பதினோராம் அத்தியாயம்

"தன்னை ஆள்பவன் தரணி ஆள்வான்!"

கொத்தமங்கலம் சுப்பு

சர்க்கரை, விருந்திலும் சேரும், மருந்திலும் சேரும். நமது புலவர் மகன் சர்க்கரையும் அப்படித்தான். அவன் மணலிலும் படுப்பான், மஞ்சத்திலும் படுப்பான்.

சிறையிலடைக்கப்பட்ட சர்க்கரைக்குத் தூக்கமே வரவில்லை. அந்தத் தொந்தரவை அவனால் தாங்க இயலவில்லை. ஏழைப் புலவன். அவன் வீட்டிலே எட்டடிக் குச்சுக்குள்ளே நாலு பேர் படுப்பார்கள். தலைக்கும் காலுக்கும் சுவர்தான் தலையணை. சிறைச்சாலையில் கட்டிலையும், மெத்தையையும் காலுக்கும் தலைக்கும் தலையணையையும் கண்டவுடன் அவன் தூக்கம் பயந்து ஓடியது.

இரவில் நெடு நேரம் வரையில் அவன் தந்தை நைடதம், நன்னூல் இரண்டையும்பாராமல் ஒப்புவிக்கச் சொல்லுவார். இங்கு தமிழ் நூலும் இல்லை. படித்துக் களைக்காவிட்டால் புலவனுக்கு எப்படித் தூக்கம் வரும்? அவன் வீட்டில் தாலாட்டுப் பாடினால் குழந்தைகள் தூங்கும். குழந்தைகள் கத்தினால்தான் பெரியவர்கள் தூங்குவார்கள். இது பரம்பரை வழக்கம். இங்கு குழந்தை கத்தாமல் எப்படித் தூங்குவது?

அவன் விழித்தபடி படுத்திருந்தான். இரவு நடு நிசி! வாசலில் உள்ள காவலர்கள் இருவரும் மாறி மாறி நடந்து

கொண்டே இருந்தார்கள். அவர்கள் வீட்டிலும் அப்படித்தான். கட்டிலின் மேல் நடந்து கொண்டேதான் தூங்குவார்கள். பாராக்காரர்களின் கைப்பந்தமும் நடையும் சர்க்கரையின் தூக்கத்தைக் கலைக்கவே அவன் யோசித்தான்.

'' 'பாப்புக்கு மூப்பில்லை. பணத்துக்கு முறையில்லை. அரசியலுக்கு அண்ணன் தம்பி இல்லை' என்பது சரியாக இருக்கிறது. நம்மைச் சிறையில் அடைப்பதைப் பார்த்துக் கொண்டே பிரதாபசிம்மர் எப்படிச் சும்மா இருந்தார்? இதுதான் அரசியல் தர்மமோ?

''பூசாரியை நான் ஏன் தொடர்ந்து போக வேண்டும்? இதற்காகச் சம்பளம் வாங்கும் அதிகாரிகள் எல்லாம் சும்மா இருக்கையில் எனக்கேன் வம்பு? அரசுக்கு அருகில் இருப்பவர்கள் ஊமை, செவிடு, குருடு போல இருக்க வேண்டும். பேசாதே, காதில் வாங்காதே. கண்டதைச் சொல்லாதே! அப்படி இருந்தால்தான் அவர்கள் நன்றாக இருப்பார்கள். இல்லை, தலையாட்டிப் பொம்மையாக இருந்துவிட வேண்டும். நான் அவனைத் தொடர்ந்ததனால்தானே இக்கதி.

''அரசியலுக்கும் கவிஞனுக்கும் ஆகவே ஆகாது. கவிஞனுக்கு உண்மைதான் உயிர் நாடி. உண்மைதான் உணர்ச்சியின் தூண்டுகோல்.

''அரசியலுக்கும் உண்மைக்கும் ஐந்து காதம். உணர்ச்சியை அடக்குவதுதான் அரசியல்.

''பண்டித முனிவர் நம் மீது குற்றம் சாட்டினார். நண்பரோ அதை மறுக்க முன்வராமல் இருந்தார். இரண்டுமே மனத்தை மறைத்த செயல்தான். இது பொய்.

''ஆனால் சின்ன மனிதன் சொன்னால் பொய். அதையே பெரிய மனிதர் செய்தால் ராச தந்திரம்!

''அரண்மனையைப் பற்றி நமக்கு என்ன? பிரதாபசிம்மர் ராஜகுமாரர். பட்டத்து அரசியின் மகனல்ல; ஆனாலும் எப்போது எது நடக்கும் என்று யார் கண்டார்கள்? ஆகாயம், அரசு இரண்டிலுமே மின்னாமல் இடி இடிப்பதும், எண்ணாமல் முடி தரிப்பதும், இயற்கை.

''நமக்கு அரசர் நாவுக்கரசர். நமது ராசாங்கம் தமிழ். எதுகையும் மோனையும் அமைச்சர்கள். இலக்கணம், படைகள். கருத்துதான் மழை. கடவுள்தான் பயிர்.

''இந்த அமைச்சர் நம்மைச் சிறையில் அடைத்ததாகப் பெருமை அடையலாம். ஆனால் இது என் வீட்டைவிட எத்தனையோ பங்கு மேல் என்று அவருக்குத் தெரியுமா? பிரதாபசிம்மருக்கு இல்லாத கவலை நம் மீது நமக்கு ஏன்?'' என்று எண்ணிக் கொண்டே 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்று பாட ஆரம்பித்தான் சர்க்கரை. தன் தாலாட்டிலேயே தூங்கியும் விட்டான்.

விடிய ஒரு ஜாமம் இருக்கும். அந்தச் சிறைச்சாலையின் அருகில் ஓர் உருவம் உடல் முழுதும் ஒரு சிவப்பு அங்கியால் மூடிக் கொண்டு தூண்களின் நிழலில் ஓசையின்றி மெல்ல நடந்து வந்தது. 'ஹமேர்' என்று காவல்காரனின் தீப்பந்த ஒளி அதன் மீது விழவே அவன் கூச்சலிட வாயைத் திறந்தான். சட்டென்று அவனுடைய வாயில் தன் கையை வைத்துக் கூச்சலை அடக்கியது அந்த உருவம். அடுத்த கணம் காவலாளியின் வாய், கண்கள் கட்டப்பட்டன. அவன் கீழே உருட்டிவிடப்



பட்டான். பிறகு அந்த உருவம் சிறைச் சாலையின் பூட்டில் தன் உடைவாளால் ஏதோ செய்தது. அப்போது ''சபாஷ்! எதிர்பார்த்தேன்! வேலியே பயிரை மேய்ந்தால்....?'' என்று பண்டித முனிவரின் கம்பீரக்குரல் கேட்டது. ஆம்! பூட்டைத் திறந்தவர் பிரதாபசிம்மர்தான்.

'' அமைச்சர்கள் தவறு செய்தால் அரசன் திருடனாவதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? என் நண்பனுடன் நானும் இருக்கலாமென்று வந்தேன்! வெண்மையான ஆடையில் கறை பட்டால் உடனே தெரிகிறது. நாம் விரும்பும் மேலான மனிதர்கள் தவறு செய்தாலும், உடனே தெரிகிறது'' என்றார் பிரதாபசிம்மர். அவருடைய முகத்தில் இதுவரையில் நாம் காணாத கோபம் இருந்தது. 'சிரித்த முகத்துடன் கிருஷ்ண வேஷம் தரித்துக் கொண்டு வந்த அவர்தானா இவர்? ஒரே மனிதன் கண்ணனாகவும், ஊழிக்கால உருத்திரனாகவும் தோன்றுகிறாரே' என்று கண்டவர் திகைக்கும்படி அவர் நின்றார்.

துறவிக்கு வேந்தன் துரும்பு! இளவரசனின் ஆத்திரம் பண்டித முனிவரின் அமைதியைக் குலைக்கவே இல்லை.

''இளவரசே! தாங்கள் சொல்லிய உவமை மிகவும் பொருத்தமானது தான். அதனால்தான் தஞ்சை அரச வம்சத்தினர் வண்ண ஆடைகளை அணிகிறார்கள்'' என்றார்.

'நாம் அவர் மீது குற்றம் சொல்லுகிறோம். அவர் நம் மீதே அதைத் திருப்புகிறாரே' என்று எண்ணினார் பிரதாபசிம்மர். அடக்கத்தையும் மீறி அவருடைய வாயிலிருந்து ஒரு கடு சரம் வந்து தாக்கியது. ''தஞ்சை அரசர்கள் அமைச்சர்களை மதிப்பவர்கள். மனைவி சொல் கேட்ட கள்வனும், மந்திரி சொல்லைக் கேட்ட மன்னவனும் தங்கள் செயலுக்குப் பொறுப்பேற்க முடியாது.''

''அரசர்களுக்கு அந்தப்புரத்துக்கே நேரம் போதவில்லை என்றால்...''

''எனக்கு அந்தப்புரம் ஏற்படவில்லை.''

முனிவரின் கண்கள் பிரதாப சிம்மரைக் கூர்ந்து நோக்கின. இந்தப் புலிக்குட்டியின் வாலை உருவி விடுகின்றோம் என்ற பெருமிதமும் அவருக்கு உண்டாயிற்று.

'' இளவரசே! ஏன் என்மீது இவ்வளவு கோபம்? என்ன குற்றம் செய்தேன்?''

''குற்றம் சாட்டும் தகுதி எனக்கு வரவில்லை. ஆனால் குறைகூறும் உரிமை எனக்கும் உண்டு. அதற்கு மன்னனாக இருக்க வேண்டும் என்பதில்லை. மக்களே கூறலாம்.''



''நான் மக்களையும் மன்னராக மதிப்பவன்!'' என்றார் முனிவர்.

''இன்று நீங்கள் செய்த செய்கை எனக்கு வியப்பாக இருக்கிறது. சர்க்கரை ஒரு குற்றமும் புரியாதவன். என் கட்டளைப்படி பூசாரியைத் தொடர்ந்தான். அந்தப் பூசாரி இறந்ததற்கு என் நண்பனை நீங்கள் சந்தேகிக்கிறீர்கள். அந்தப்புரப் பெண்களுக்கு முன்னால் அவனை நீங்கள் கைதுசெய்யச் சொன்னீர்கள். இது எனக்குப் புரியவில்லை. புதுமையாக இருக்கிறது.''

''உலகில் இதுமட்டும்தான் புதுமையா? மனிதனே புதுமைதான். மற்ற பிராணிகள் குறுக்கே வளரும்போது மனிதன் உயர்ந்து வளர்வது புதுமை. விலங்குகள் பச்சையாகத் தின்கின்றன. இவன் வேகவைத்துத் தின்பது புதுமை. அவை தீயைக் கண்டால் அஞ்சுகின்றன. இவன் தீயை அடக்கியது புதுமை. அவை வானமே கூரையாக வாழ்கின்றன. இவன் மனை கட்டி வாழ்வது புதுமை. என்றைக்கு மனிதன் ஆடையைக் கட்டிக் கொள்ள ஆரம்பித்தானோ அன்றைக்கே அவன் தன்னையும் கட்டிக் கொண்டான். தன் இச்சையை அவன் அடக்கிக் கொண்டது புதுமை. மருந்து கண்டு பிடித்தது புதுமை. விலங்குகளைக் காட்டிலும் நெடுங்காலம் வாழ்வது புதுமை. மானம், குலம், கல்வி, அறிவு, தானம், தவம் என்றெல்லாம் கண்டுபிடித்தது புதுமை. இறைவனைக் கண்டு கொண்டதோ எல்லாவற்றிற்கும் மேம்பட்ட புதுமை. அமைச்சருக்கு முன் அரசனாகிய நீங்கள் பணிந்து கேள்வி கேட்பதும் புதுமை! இளவரசே! உங்கள் நண்பனை நான் கைது செய்தது குற்றம் என்று உங்களுக்குத் தோன்றினால் அதற்குரிய 'தண்டனையை நீங்கள் எனக்கு அளிக்கலாம்'' என்று முனிவர் தம் கைகளைக் கட்டிக் கொண்டு பிரதாபசிம்மர் முன் நின்றார். அவருடைய அடக்கம், இளவரசருடைய சினத்தையும் அடக்கியது. அவருடைய வாக்கு வாயை மழுக்கியது. அரசனுக்கு முன் ஆண்டி உயர்ந்து நின்றான்.

''சுவாமி! உங்களோடு பேசும் திறமை எனக்குக் கிடையாது. என்னைச் சிறையிலிடுங்கள். சர்க்கரையை விடுதலை செய்யுங்கள்!'' என்று பதற்றத்துடன் பகர்ந்தார் பிரதாபசிம்மர்.

''இளவரசே! நான் வேறு. என் பதவி வேறு. இந்த அந்தணன் வேறு அமைச்சன் வேறு. உங்களால் நாட்டுக்கு இடையூறு என்று தோன்றினால் நானும் என் ஆணையும் உங்களுக்கு அஞ்சப் போவதில்லை.''

''குற்றவாளி நான்தான். என் நண்பன்மீது ஏதேனும் குற்றமிருக்குமானால் அது என் சொற்படி அவன் நடந்தான் என்பதுதான். எய்தவன் இருக்க, அம்பை நோவது ஏன்?''

முனிவர் ஒரு கணம் திகைத்து நின்றார். அவருடைய மூளை பரபரவென்று வேலை செய்தது. கண்களில் ஒளி வீசியது.

''எய்தவன், அம்பு'' என்ற இரண்டு வார்த்தைகளையும் பலமுறை மாறிமாறி உச்சரித்தார்.

''இளவரசே! உமது நண்பனை விடுவிக்க ஒரு நிபந்தனை!''

இளவரசர் ஆவலுடன் ''என்ன?'' என்று கேட்டார்.

''அந்தப் பூசாரியைப் பிழைக்க வைத்தால் உம் நண்பன் விடுதலை அடைவான்.''

''செத்தவன் பிழைப்பதா?''

''இறந்து விட்டான் என்று யார் சொன்னார்கள்? அவன் உடலைத் தூக்கும் போது அது துவண்டதை நீங்கள் பார்க்கவில்லையா? வாருங்கள் மருத்துவசாலைக்கு'' என்று முனிவர் நடந்தார். பிரதாப சிம்மரின் கால்கள் அவரைத் தொடர மறுத்தன. அவர் சிலை போல் நின்றார்.

''இளவரசே! இருபதுக்குள் ஒரு தொகை சொல்லுங்கள்!''

''இரண்டு.''

''உங்கள் மனத்தில் ஒரு சந்தேகம் இருக்கிறது. 'நாளை நள்ளிரவில் மீண்டும் முயன்று காவலாளிகளைக் கொன்று சிறைச்சாலையின் கதவை உடைத்து உங்கள் நண்பனை விடுதலை செய்து விடலாமே! இவரோடு ஏன் தொடர்ந்து போவது' என்ற ஐயம்தான் அது! இது உண்மைதானே!

''இதற்கு ஆருடம் தேவையில்லை. தங்கள் அறிவே போதும். ஆனால் என் நண்பனை அடைத்திருப்பது தவறு!''

''அப்படி இருந்தால் ஏன் தயங்குகிறீர்கள்? இதோ இருக்கிறது சிறைச்சாலையின் சாவி'' என்று தன் இடுப்பில் இருந்த சாவியைக் கையில் எடுத்து இளவரசர் முன்பு காட்டிக் கொண்டு ''உங்கள் உடைவாளால் என்னைக் கொன்றுவிட்டுச் சாவியை எடுத்துக் கொள்ளலாம்'' என்று ஆண் சிங்கம் கர்ஜிப்பதுபோல் கர்ஜித்துக் கொண்டு வீர நரசிம்மமாகத் தம் விழிகளால் இளவரசரைப் பார்த்தார் பண்டித முனிவர்.

இளவரசர் உடல் முழுவதும் கனல் கொதித்தது. இவருக்கு நாம் ஏன் கட்டுப்பட வேண்டும் என்றுகூட ஒரு கணம் தோன்றியது. ' கல்வியே! நீ


பூத்த புதுமையோடு பூமணம் கமழவே...
Himalaya Bouquet Talcum Powder
ஹிமாலயா புக்கே
டால்கம்
5 வித நறுமணங்களுடன் வரும் டால்கம் இதுவொன்றே
—அந்தந்த வாசனைக் கேற்ற தனிவண்ண டப்பா.
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு.
லின்டாஸ்: HBT.36-77 TM



உயிர்க்களை ததும்ப
உடையழகுக்கு பின்லே துணிகள்.
சூர்த்தாக்களுக்கா ! ருபெல்லா &
ரேணுகா. நிறங்களிலே பனிச்
சென்ற தெளிவு. அதி
நேர்த்தியானவை, கலுங்கவே
கலுங்காதவை. அதற்கேற்ற
பொருத்தம், அலசி
அணிதற்கேற்ற பாப்லின்
சூரிதார்கள், ஃபேவரிட்-
ப்ரின்ஸ், தவிர
லக்கி ப்ரின்ஸ். அல்லது
மார்னிங் ட்யூ & பரம்-
ஹன்ஸ் கேம்ப்ரிக்குகளோடும்
இணைசேர்க்கலாம்.
அழகான ஆடைகளுக்கு
பின்லே.
பின்லே
ASP/JF-116

மனிதனை மழுப்பி விடுகிறாய். வீரத்தையும் வெட்டிவிடுகிறாய். புலியைப் பசுப் போல் அடங்கிவிடச் செய்கிறாய். சே! நான் ஏன் அரசர் மனையில் பிறந்தேன்? ஏன் அருங்கலை நூல்களைக் கற்றேன். என் அறிவே என்னைத் தடுக்கிறதே!' என்று எண்ணினார் இளவரசர். இரு விழிகளிலிருந்தும் கண்ணீர் பொங்கியது. வால்மீகி இராமாயணம் என்ற பாற்கடலைத் தன் அறிவாகிய மத்தால் கடைந்து, 'இராமபிரானின் தினசரி அலுவல்கள்' என்ற நவநீதத்தைத் திரட்டி ஒரு நூலாக்கியவர் பிரதாப சிம்மர். அவர் வேறு என்ன செய்ய முடியும்!

''முனிவரே, எனக்கு என்ன ஆணை இடுகிறீர்கள், செய்கிறேன். ஆனால் என் இஷ்டத்தோடல்ல'' என்று மண்டியிட்டு முனிவர் முன் வணங்கினார்.

'வென்றது மானுடம்! மானிடனே உன்னுடைய அடக்கம் அமரர்களுக்கும் வந்ததில்லை. நீ தேவர்க்கும் தேவன்!' என்று வானம் வாழ்த்தியது அவரை. ''என்னைத் தொடர்ந்து வாருங்கள். இந்த உலகில் யாருமே அவர்கள் இஷ்டப்படி நடக்க முடியாது'' என்று கூறிவிட்டுச் சென்றார் முனிவர். பிரதாபசிம்மர் தொடர்ந்தார்.

மருத்துவசாலைக்குள் ஒரு விசுப் பலகையின் மேல் பூசாரியின் உடல் கிடந்தது. இளவரசரும் முனிவரும் அதன் அருகில் நின்றார்கள்.

வாத்திய சாலையைப் போலவே மருத்துவ மஹாலையும் அபூர்வமாக அமைத்திருந்தார் துக்கோஜி மன்னர். போர்க்களத்தில் அடிக்கடி நிற்பவர் ஆகையால் அரசர் மருத்துவத்திலும் வல்லவராக விளங்கினார். அந்த மருத்துவ மஹாலில் ஓர்புறத்தே மூலிகைகளை அரைப்பதற்குரிய கருங்கற் கலுவங்களும், மாத்திரைகளை இழைப்பதற்கு ஏற்ற சிறு கைக் கலுவங்களும், ரஸக்கட்டுக்களை உரைக்கும் உரை கற்களும், செந்தூரம் முதலான மருந்துகளைக் கொடுப்பதற்கு வேண்டிய இஞ்சிச் சாறு, தேன், பழங் காடி, கஷாயங்கள் முதலியவைகளும் தயாராக வைக்கப் பட்டிருந்தன. ஓர் அடுப்பில் வெந்நீர் கொதித்துக் கொண்டிருந்தது. அந்த வெந்நீர் பாத்திரத்துக்குள் ரண சிகிச்சைக்குரிய சத்திரக் கருவிகள் போடப்பட்டிருந்தன. அந்த ஆவி படும் இடத்தில் காரச் சீலைகளும், பஞ்சு முதலிய கட்டுப் போடுவதற்கு வேண்டிய பொருள்கள் யாவும் இருந்தன. இரத்தம் செலுத்தப்பட வேண்டியவர்களுக்காக உடனே இரத்தத்தை உண்டாக்கித் தரும் இரத்தம் போன்ற ஒருவகைப் பச்சிலைச் சாறும், இரண்டு



இரண்டு காதுகள் சொல்லும் சாட்சியைவிட ஒரு கண் சொல்லும் சாட்சியே மேலானது.

— டச்சுப் பழமொழி

ஜாடிகளில் இருந்தன. ஒரு துவாலையிலிருந்து வந்த நீராவி நீர் ஆகி ஒரு ஜாடியில் கொட்டிக் கொண்டே இருந்தது. ஓலைச் சீட்டில் பெயர் எழுதிய தடுக்கு அறைகளில் பல அபூர்வமான பச்சிலைகளும், கிழங்குகளும் வைக்கப் பட்டிருந்தன. வராகன், பணம், குந்துமணி, நெல், உளுந்து முதலிய எடைக் கருவிகளோடு கூடிய தராசு ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

''எய்தவன் இருக்க அம்பை நோவதா என்று கேட்டீர் அல்லவா? அந்த உடம்பில் ஏதேனும் அம்பு தைத்திருக்கிறதா என்று பாருங்கள்?'' என்றது முனிவரின் வாய். பிரதாப சிம்மர் மிகவும் எச்சரிக்கையோடு தம்முடைய பீதாம்பரத்தின் ஓரத்திலிருந்து ஒரு நூலை எடுத்து அவன் மூக்குக்கு மேல் பிடித்து உயிர் இமையாடுகிறதா என்று பார்த்தார்.

உடனே ஓடிச் சென்று அலமாரியில் இருந்த ஓலையை எடுத்து எழுத்தாணியால் நன்றாக வாரி ஓர் ஓரத்தினால் பூசாரியின் உடல் முழுதும் நெருடிக் கொண்டே வந்தார். காலில் முள் குத்தியிருந்தால் கை விரலால் அதை நெருடிப் பார்த்துக் கண்டு பிடிப்பது தம் வழக்கம். ஆனால் பிரதாபசிம்மர் முன் ஜாக்கிரதையாக அந்த உடலில் விஷ அம்பு தைத்திருக்கலாம் என்று ஊகித்துவிட்டதால் எச்சரிக்கையாகத் தம் விரல் அதன் மேல் படாமல் ஓலையால் தடவிப் பார்த்தார். சற்று முன் இந்த விஷயத்தில் சிறிதும் அக்கறை இல்லாதவராக அவர் காணப்பட்டார். ஆனால் ஓர் அலுவலை எடுத்துக் கொண்டு அதில் ஈடுபட்டவுடனே மன்னர் மருத்துவனாகவே மாறிவிட்டார்.

''இதைக் கண்டு பிடிக்காமல் விடுவது என் மரபுக்கே இழுக்கு. நமது பெரிய தந்தை ஷாஜி மகாராஜா அவர்கள் எத்தனையோ புதிய மருந்துகளைக் கண்டு பிடித்தார்கள். தஞ்சையிலிருந்து இராமேசுவரம்வரை அவர்கள் கட்டிய அன்னச் சத்திரங்கள்தான் எத்தனை? உணவை அளித்தால் மட்டும் போதாது, நோய் தீர்க்கவும் வேண்டும் என்ற கருத்தில் அவர்கள் ஒவ்வொரு சத்திரத்திலும் மருத்துவ விடுதிகளை அமைத்தார்கள். ஒரத்தநாடு, அம்மணி

சத்திரம், கட்டுமாவடி, மணமேற்குடி, மீமிசல் போன்ற ஊர்களில் எல்லாம் மருத்துவசாலைகளை நிறுவினார். ஆயுர்வேத சித்த மருத்துவர்கள் போதுமான அளவு கிடைக்கவில்லையாம். பிறருக்குச் சொன்னால் மருந்து பலியாது என்ற எண்ணத்தில் அவர்கள் கலையை நழுவ விட்டு விட்டார்களாம். இதனால் அரேபியாவிலிருந்தும் ஐதராபாத்திலிருந்தும் ஏராளமான மருத்துவர்களை அழைத்து வந்து யூனானி வைத்திய முறைகளையும்; உள்நாட்டுப் பண்டிதர்களைக் கொண்டு சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளையும் அவர்கள் நிறுவி இராவிட்டால் சோழ நாட்டின் மக்கட் தொகை பாதிக்கு மேல் குறைந்து இருக்கும். அது மட்டுமா? ஆண்டிகாட்டிலே குழந்தைகள் நலத்துக்கென்றே ஒரு பெரிய மருத்துவக் குடும்பத்தை இருக்கச் செய்து, கணை, மாந்தம், கட்டி, சோகை, கரப்பான் முதலான குழந்தை நோய்களுக்கு மாத்திரை, தைலம், எண்ணெய், துவலை என்று பற்பல ஔடதங்களைக் கண்டுபிடிக்கச் செய்தார். மருங்கப்பள்ளம் என்ற ஊரையே மருத்துவத்துக்காக ஒதுக்கினார். என் தந்தையாரும் நானும் எத்தனை நாட்கள் அங்கு தங்கியிருக்கிறோம். தாமிரம், நாகம், பவளம், அப்ரகம் போன்ற பஸ்மங்களையும் செந்தூரங்களையும் செய்வதற்கு அங்குள்ள வைத்தியர்களின் கீழ் என்னை வேலை கற்றுக் கொள்ள விட்டார். அந்தக் கிராமத்தைச் சுற்றிலும் பள்ளங்கள் வெட்டி ஒவ்வொரு பள்ளத்திலும் வரட்டிகளை அடுக்கி மூட்டம் போட்டு, சுற்றி இரண்டு நாழி தொலைவுக்கு ஆள் நடமாட்டமே உதவாதென்று உத்தரவிட்டு எத்தனை அரிய பஸ்மங்களை என் கையாலேயே தயார் செய்திருக்கிறேன்! மகாதேவ் பட்டினத்தில் என் தந்தை அவர்கள் இருந்தபோது சித்த புருஷராகவே விளங்கினார். 'அகத்தியர் கரிசலை'ப் படிப்பதற்காகவே பாடுபட்டுத் தமிழைப் பயின்றார். ஆயுர்வேத நூல்களை இரவு பகலாக ஆராய்ச்சி செய்தார். அவர்களே 'தன்வந்திரி சாரநிதி' என்ற மருத்துவ நூலையும் எழுதினார். அந்த மன்னருக்கு மகனாகப் பிறந்த நான் மகுடம் சூட்டிக் கொள்ள விரும்பா விட்டாலும் அவர் இயற்றிய மருத்துவ நூல் ஒன்றே எனக்குப் போதுமே! மன்னரின் சேவையைக் காட்டிலும் மருத்துவரின் சேவை மட்டமானதா? அப்படி இருந்தால் மருத்துவர்களை ''மகராஜ்'' என்று அழைப்பார்களா? ''கவிராஜ்'' என்று கூப்பிடுவார்களா? உடற் பிணியை நீக்க மருத்துவமும், மனக் கவலையைப் போக்க இசையும் இன்றியமையாதவை. இந்த இரண்டையும் மராட்டிய அரசர்களாகிய நமது மூதாதையர் நன்கு வளர்த்திருக்கிறார்கள். இந்த இரண்டுமே உலகம் உள்ள அளவும் எங்களுக்குப் பெருமையைத் தரும்'' என்று எண்ணிக் கொண்டே பூசாரியின் உடம்பில் ஒரு மயிரிழை கூட விடாமல் ஓலை நறுக்கால் தடவிப் பார்த்தார். பயனில்லை. அவன் உடலில் இருந்த சில மருக்கள் தட்டுப்பட்டன. இரண்டொரு தடித்த மச்சங்கள் இருந்தன. தழும்புகள் தெரிந்தன. ஆனால் அவர் தேடிய அம்பு அல்லது கூரிய ஆயுதம் தட்டுப்படவேயில்லை. முயற்சியை அவர் அதோடு நிறுத்தவில்லை. முனிவர் வியப்புடன் அவரையே பார்த்துக் கொண்டிருக்கையில் பிரதாப சிம்மர் இரண்டு குடத்தில் சுத்தமான பசும் பால் வேண்டுமென்று கேட்டார். பால் குடங்கள் வந்தன. 'தன்னையும் தன் உடன் பிறந்த சகோதரனையும் கொல்லுவதற்காக நச்சுப் பாம்பைக்கொண்டு வந்தவன் அவன். நஞ்சினும் கொடியவன் அவன்' என்ற விரோத மனப்பான்மை சிறிதும் இல்லாமல் பூசாரியின் உடலுக்குப் பால் அபிஷேகம் செய்தார் இளவரசர். திறந்த கண்களை மூடாமல் முனிவர் பார்த்துக் கொண்டே இருக்கையில், ''ஹா, இதோ!'' என்று கூவினார் பிரதாப சிம்மர்.

இருவரும் குனிந்து அந்த உடலின் இடது தோளை நோக்கினர். நிலவைப் போன்ற வெண்மையான பாலின் நடுவிலே ஒரு நீலப் புள்ளி தெரிந்தது. இருவரும் உற்றுப் பார்த்தனர். பிரதாப சிம்மர் அவசரமாகத் தம் உடைவாளை எடுத்துப் பரபரவென்று தரையில் தீட்டினார். அதே வேகத்தில் நீலப் புள்ளி தெரிந்த இடத்துக்கு அருகில் தம் வாளைக் கொண்டு போய்க் காட்டவே, குண்டூசியைக் காட்டிலும் சிறிதே நீளமாகிய ஓர் ஊசி பிரதாப சிம்மரின் வாளின் மீது வந்து ஒட்டிக் கொண்டது. ''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'' என்பார்கள். ஆனால் முனிவரோ தாயினும் ஆயிரம் பங்கு அதிகமான களிப்பில் பிரதாப சிம்மரைக் கட்டித் தழுவிக்கொள்ள விரைந்தார்.

''நில்லுங்கள்! நில்லுங்கள்! ஆபத்து! என்னைத் தொடாதீர்கள்'' என்றார் இளவரசர்.

அவரது வாள்முனை நெடுகவே நீல நிறம் ஓடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டார் முனிவர். **(தொடரும்)**



வளரும்
உங்கள்
குழந்தைகளுக்கு

காமதேனு
வனஸ்பதி



வைடமின்கள்
A & D நிறைந்தது

'காமதேனு' சிறந்த சமையல் சாதனம்

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

Criterion-MC-1134

ஓநாய்க் கோட்டை

11

கதை: வாண்டுமாமா

சித்திரம்: விஜயா—






கொழுத்த, கோரமான, பயங்கரம் மிகுந்த ஓநாய் ஒன்று வெறி வழியும் வாயுடன் பலிபீடத்தை நோக்கி அடிமேலடி வைத்தபடி வந்து கொண்டிருக்கிறது!
ஓநாய்த் தேவா! உன் மக்கள் உனக்களிக்கும் ருசிமிக்க காணிக்கையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள், அப்பனே!
கந்தா, அந்தக் கொடியவர்கள் போய் விட்டார்கள். இருந்தும் நாம் இங்கு தனித்து இல்லை
ஆனந்தா! உற்றுக் கேள், ஏதோ ஒன்று மெல்லப் பதுங்கி வருவது போலில்லை? அது, ஏதோ ஒரு மிருகமாகத்தானிருக்க வேண்டும்.
ஆனந்தா! இந்தக் கோயிலின் வாயிலில் ஏதோ ஒன்று நம்மீது பாய்வதற்குப் பதுங்குகிறது.
கந்தா... அது... அது... ஐயோ! ஓநாய் இதுவரை அந்த கோரமான கொடியதோர் ஓநாயை நான் கண்டதே இல்லை.
இது தான் நம் முடிவா? உயிரோடு அந்த ஓநாயின் கோரப்பற்களுக்குப் பலியாக வேண்டியது தானா?
பதுங்கிப் பதுங்கி நெருங்கி நெருங்கி வந்த ஓநாய் குபீரென்று அவர்கள் மீது பாய்ந்தது.
ஆ..ஆ..ஹ்
இந்தக் கட்டுக்கள்....இவையில்லாவிட்டால் இதை நெரித்தே முடியவில்லையே, என் பலம் எங்கே போனது..?
தொடரும்....


இனிமையான
பேச்சு
CIBA
இதயங்கள் நெருங்கும் நேரம்
மென்மையான இரகசியம்–
பசுமையான செழும் மணம்
பினகா குளோரோபில்
இதை என்றுமே தரும்!
Binaca®
Binaca



அல்டாப் அப்பாசாமி

சிரும்பன்

"இவ்வளவு சொல்றதுலே உன்னை 'ஃபைலிங் கிளார்க்'காகத் தாற்காலிகமாக எடுத்துக் கொள்ளுகிறேன். அவ்வளவுதான் நான் செய்யக் கூடியது. உனக்கு 'ஃபைலிங்'னு என்னன்னு தெரியுமோ?"

"என்ன அப்படிக் கேட்டுட்டேள்? 'ஃபைலிங்' தெரியாமல் உலகத்திலே ஒருத்தர் இருக்க முடியுமோ? என்னைக் கேட்டால், இந்த 'ஃபைலிங்' நம் நாட்டுக்குப் புதிதல்ல; மிகப் பிராசீனமான கலை! அதுவும் எங்கள் குடும்பத்துக்குக் கைவந்த கலை. இப்பொழுதெல்லாம் இந்த ஆபீசும், ஃபிலாஸும் புதிசா ஏற்பட்டு, 'ஃபைலிங்' தெரியுமா? எத்தனை வருஷ அநுபவம்? அப்படின்னு கேட்கிறா. ஆனா எங்க பாட்டிக்குப் பாட்டிகூட இந்தக் காரியத்தை ரொம்ப நருவிசாச் செய்வாளாம்!"

"என்ன சொல்றே நீ?"

"உங்களுக்கு அஞ்சறைப் பெட்டி தெரியுமோ, அஞ்சறைப் பெட்டி?"

"நன்னாக் கேட்டியே, அஞ்சறைப் பெட்டியைத் தெரியாமல் இருப்பாளா யாராவது?"

"அது என்னங்கிறேன்? அந்தக் காலத்து 'ஃபைலிங்' முறையாக்கும்! எப்படின்னு கேட்கிறேளா? அந்தக் காலத்திலே உக்கிராண அறைன்னு ஒண்ணு உண்டு. இந்தக் காலத்து நாகரிகப் பேரு ஸ்டோர் ரூம். அந்தக் காலத்திலே அது இருட்டாத்தான் இருக்கும். வருடாந்திரத்துக்கு வேண்டிய சாமான்களைச் சல்லிசா வர்றப்போ வாங்கிப் போட்டுடுவா. அன்றாடத் தேவைக்கு அஞ்சறைப் பெட்டியிலே எடுத்து வச்சுப்பா. ஒவ்வொரு நடைக்கும் கையிலே குத்துவிளக்கையோ கைவிளக்கையோ தூக்கிண்டு போக முடியுமா? பழக்கத்திலே எது எது எங்கே எங்கே இருக்குங்கிறது அத்துபடியாயிருக்கும்! கண்ணை மூடிண்டு போய் அஞ்சறைப் பெட்டியிலே கை வைச்சா அவாளுக்கு வேண்டிய சாமான் கிடைக்குமாம். இல்லாவிட்டால் அஞ்சறைப் பெட்டியை 'ஏர்கண்டிஷனு' நினைச்சிண்டு வாசம் செய்கிற தேள்தான் ஒரு போடு போட்டுப் பதம் பார்க்குமாம்! என்ன சிரிக்கிறேள்? நீங்க கேட்க வேண்டியதுதான் தாமதம்; 'ஃபிங்கர் டிப்'லே எதையும் கொண்டு வந்து தந்துவிடுவேன்! 'ஃபைலிங்' எனக்கு ஒன்றும் கை வராத காரியமல்ல."

இப்படி ஒரு போடு போட்ட அப்பாசாமி வேலைக்கு வந்து மூன்று மாதங்களுக்குமேல் ஓடிவிட்டன. அன்றாடம் வரும் கடிதங்களை ஒருசில நாட்கள் பார்த்துப் பார்த்து 'ஃபைல்' செய்தான். அப்புறம் அவனுக்கே இயல்பான அறிவுக் கூர்மை வேலை செய்தது. அன்றாடம் தபாலில் வரும் உறைகள் சில அழகாயிருந்தன. அவற்றின்மீது கடிதங்கள் வந்த தேதியைப் போட்டு, 'ஒரு நாளைக்கு ஓர் உறை' என்ற கணக்கில் அடுக்கி வைத்தான். 'ராக்'கில் நாளுக்கு நாள் உறைகள் ஏறி வந்தன. 'ஃபைல்' செய்வதில் புதுமையைப் புகுத்திய அப்பாசாமிக்குப் பெருமித உணர்வு தோன்றியிருந்தால் அதில் வியப்பென்ன?

அன்றைக்கு முதலாளி வந்ததும் வராததுமாக மூன்று மாதங்களுக்கு முன் ஒரு தேதியைக் குறிப்பிட்டு "இன்னார் எழுதிய கடிதத்துக்கு நாம் என்ன பதில் எழுதினோம்? எடுத்து வா!" என்றார். அவர் குரல் கடுமையாக இருந்தது. எதிரே சிகரெட்டும் கையும் டிப்டாப் உடையுமாக ஒருவர் அமர்ந்திருந்தார்.

அடுக்குக் கலையாமல் அன்றையத் தேதியிட்ட உறையை எடுத்த அப்பாசாமி கடிதங்களை எடுப்பதற்காகக் கையை விட்டான், உள்ளே ஒரே கூளமாக இருந்தது. பெரிய எலி ஒன்று தாவிக் குதித்து ஓடியது. கண் திறக்காத மூன்று குஞ்சுகள் அந்தக் கூளத்தை மெத்தையாக்கிக் கொண்டு படுத்திருந்தன.

அப்பாசாமி அயர்ந்து விட்டான்.

"அப்பாசாமி! இத்தனை நேரமா ஒரு கடிதம் எடுத்து வர?" என்று குமுறினார் முதலாளி.

"அஞ்சறைப் பெட்டிக்குள்ளே கையை விட்டால் அந்தக் காலத்திலே தேள் கொட்டும்னு பாட்டி சொன்னா. இந்தக் காலத்திலே ஃபைலிலே கையை விட்டா எலி பிராண்டும்னு யார் கண்டாங்க, சார்!" என்று கூளத்தை அவர் மேஜை மீது வைத்த அப்பாசாமி அப்புறம் அங்கே நிற்கவில்லை.

மறுநாள், 'எப்படி இருந்தாலும், சீட்டு கிழிக்கத்தானே போறான்? இதற்கு ஆபீசுக்குப் போவானேன்?' என்று இருந்தவனை அழைத்துப் போக ஆள் வந்து விட்டான். 'சரி, போய்க் கணக்குப் பார்த்துச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வருவோம்' என்று கிளம்பினான் அப்பாசாமி.

ஆச்சரியம்! முதலாளி அவனைக் கட்டித் தழுவிக் கொண்டதோடு ஒரு நூறு ரூபாய் நோட்டையும் அவன் சட்டைப் பையில் திணித்தார்.

அல்டாப்பையே விஞ்சி விட்டது இந்த உபசாரம். அப்புறம் பேச்சு வாக்கில், மெல்ல மெல்ல விஷயம் புரிய வந்தது. முதலாளி குறிப்பிட்ட ஃபைலைக் கேட்டபோது எதிரே உட்கார்ந்திருந்தாரே, ஒரு நபர், நிதி அமைச்சரவையில் உயர் அதிகாரியாம். முதலாளி வரிகளை ஒழுங்காகச் செலுத்தாமல் ஏமாற்றுகிறார் என்று தகவல் கிடைக்கவே உரிய உத்தரவுகளுடன் விசாரணைக்கு வந்து குறிப்பிட்ட ஃபைலை எடுக்கச் சொல்லி அதட்டினாராம். அதே ஃபைலை எலி கடித்த துண்டுக் காகிதக் குவியலாக அப்பாசாமி கொண்டு வந்து வைத்தால் முதலாளி உள்ளூற மகிழாமல் என்ன செய்வார்?

நெடிதுயர்ந்த இந்த ஆஸ்பத்திரியைப் பார்க்கும்போதே அவனைச் சந்தித்த இதமான நினைவுகள் சூழ்கின்றன. மனம் எழுதி எழுதிக் கலைத்துப் படைத்த ஓவியமான வனை உடனே காணும் ஆவல் மீதூர்கின்றது. ஜீவனுள்ள கவிதையைப் படிக்கும்போது எத்தனை தரம் படித்தாலும் இனிய ரசம் சுரப்பது போல் அவனது இனிய நினைவு அநாயாசமாகப் பதிகின்றது. எதிர்பாராத சிரிப்பில் உயிர்த்து, யதேச்சையான சந்திப்பில் இணைத்து ஆழமான

சிறப்புச் சிறுகதை

ஆறறிவின் திகைப்பு!

கோமகள்



நீரோட்டமாகப் பெருகி, வயப்படாது ஓடும் அன்பு மயக்கம் அது!

கல்லூரியின் வலதுபுறம் அமைந்திருந்த அந்தச் சிறிய சிற்றுண்டிச்சாலையில் இருவரும் நுழைந்தனர். அம்பிகா சுற்று முற்றும் பார்த்தாள். ஒரு மேஜையைப் பிடித்து அமர்ந்த பின்னர், ''நான் உங்கள் வீட்டுக்கு வந்திருந்தபோது என்னமாகப் பயந்தேன் தெரியுமா? உன் அத்தானும், அக்காவும் என்னைப் பற்றி என்ன சொன்னார்கள் அம்பிகா?'' என்று கேட்டான் நந்தகுமார்.

'' 'நீங்கள் கண்ணியமானவர்' என்று அத்தான் கூறினார். 'நீ அதிர்ஷ்டசாலியடி!' என்று அக்கா கூறினாள். 'உத்தமமான பிள்ளை!' என்று என் அக்காவின் மாமியாரும் மெச்சிக் கொண்டார். போதுமா?''

அவளது விரியும் விழிகளின் கவர்ச்சியில் ஈடுபட்டுத் தன்னை மறந்திருந்தவன் மெல்லிய குரலில் கூறினான்: ''நான்தான் அதிர்ஷ்டம் செய்தவன் அம்பிகா!''

அக்காவின் வீடு அருகிலிருந்தாலும் அம்பிகா மருத்துவக் கல்லூரி விடுதியில் தான் தங்கியிருந்தாள். படிப்பு முடிந்த பின் ஹவுஸ் சர்ஜனாகப் பணி புரிந்தபோதும் அம்பிகா அங்குதான் தங்கியிருந்தாள். வீட்டுக் கவலைகள் படிப்புக்கு இடையூறாகாதிருக்கவும், அதிகாலையில் வார்டுக்குச் செல்ல வசதியாக இருக்கவும் விடுதி வாழ்வு தேவைப்பட்டது. இந்த வருடம் முடிந்து விட்டால் அடுத்த ஆண்டு அரசாங்கப் பணியை வெளியூரில் தொடங்க நேரிடலாம். எனவே டாக்டர் நந்தகுமாரைத் தன் குடும்பத்தினருக்கு அறிமுகப்படுத்திச் சம்மதமும் பெற்றாள் அம்பிகா.

நந்தகுமாரின் அப்பா அவன் விருப்பத்துக்குச் சம்மதித்து விட்டார். அதன் பிறகே அம்பிகா அவனைத் தன் ஒரே உறவாக எஞ்சியிருந்த அக்காவின் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். இப்போது மனத்தில் ஒருமித்த நிறைவு பூத்து விட்டது. கூடிய சீக்கிரமே திருமணத்தை முடித்து விட வேண்டும் என்று அவள் அக்கா தன் கணவனிடம் கூறியதும் அவனுக்குத் தெரியும்.

''அம்பிகா, உனக்கு ஃபோன் வந்திருக்கு!''

''அம்பிகா, உடனே புறப்பட்டு வா. உன் அக்கா இரத்தமாக வாந்தி எடுத்து விட்டுக் களைத்துக் கிடக்கிறாள். என்ன



வென்றே தெரியவில்லை.'' இது ஃபோன் கூறிய செய்தி.

அடுத்த கணம் அம்பிகா சில முக்கியமான மருந்துகளோடு வாடகைக் காரில் வீட்டுக்குப் பறந்தாள்.

விமலா சோர்ந்து கிடந்தாள். வெளுத்த உடம்பும், ஒடுங்கிய முகமுமாக இருந்தவளைக் கண்டதும் கண்ணீர் பீறிட்டது. காலையில் அம்பிகாவின் மனவாழ்விற்கு உத்தரவாதம் தந்து கையசைத்து விடை கொடுத்தவள் எப்படிச் சோர்ந்து கிடக்கிறாள்? முதலுதவியாக ஏதோ ஓர் ஊசி போட்டுவிட்டு, தான் வந்த வாடகைக் காரிலேயே அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தாள். அவளுக்குத் தெரிந்த பெரிய டாக்டர் விரைவில் வந்தார். அவர் கூறிய முறைகளின்படி நேரக் கணக்குத் தப்பாமல் ஊசி போட்ட வண்ணம் இரவு முழுதும் கண் கொட்டாமல் காத்திருந்தாள் அம்பிகா. அவளுக்கு ஒத்தாசையாக நந்தகுமாரும் இருந்தான். பாலு வேதனை தாங்காமல் மனைவியையே உற்றுப் பார்த்த வண்ணம் கண்ணீர் வடித்தான்.

எத்தனை மருந்து ஏற்றியும் நம்பிக்கைக்கு அறிகுறியான சூசகமே தெரியவில்லை.

குழந்தை கலாவின் பொக்கை வாய்ச் சிரிப்பை ரசித்த விமலா மெதுவாகப் படுக்கையை விட்டெழுந்து முழங்கையைத் திண்டில் ஊன்றிச் சாய்ந்து உட்கார முயன்றாள். அவ்வளவுதான். கட்டுப்படுத்த முடியாத சீறலுடன் 'ஓ'வென்று வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் குருதி மீண்டும் வடிந்து முகம் தாழ்ந்தது. அம்பிகா சட்டெனப் பாய்ந்து அவளைத் தாங்கிப் படுக்க வைத்தாள். இடே சுத்தம் செய்ய நர்சும், நோயாளியைக் கவனிக்க வார்டு டாக்டரும் ஓடி வந்தனர். பரிசோதிப்பும், உடனடியான கவனிப்பும், மாற்று மருந்தும், அவசரத் தேவையுமாகச் சிறிது நேரம் பரபரப்புத் தொடர்ந்தது. விமலா மயக்கமாகிக் கிடந்தாள்.

நள்ளிரவின் பிடியில் உலகம் துயிலும் போது மூன்றும் முறை பெற்ற இரத்தத்தின் உதவியால் விமலா தூங்கிக் கொண்டிருந்தாள். உடம்பில் அது நிலைத்து நின்று தரும் இதத்தை அறிந்த அம்பிகா மணியைப் பார்த்தவாறே மருந்து கொடுப்பதில் கவனம் செலுத்தினாள். விடியற்காலை வேளையில் இலேசாக நினைவு திரும்பிய விமலா, ''குழந்தை என்ன செய்கிறாள்?'' என்று கேட்டாள்.

"குழந்தை பத்திரமாக என் விடுதியறையில் தூங்குகிறான். என் சக டாக்டர் பார்த்துக் கொள்கிறார். நீ கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கு அக்கா" என்று கனிவாகக் கூறினாள் அம்பிகா.

"அம்பிகா! எனக்கு மறுபடியும் மயக்கம் வரும்போல இருக்கு. முன் மாதிரியே வயிற்றில் ஏதோ பண்ணுகிறது. இனி நான்..."

"அக்கா! இதென்ன பேச்சு?"

"அம்பிகா! நீ டாக்டருக்குப் படிப்பவள். எல்லாம் உனக்குத் தெரியும். இருந்தும் ஏன் மறைக்கிறாய்?... அவரையும் குழந்தையையும் நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்."

"விமலா! இந்த நேரத்தில் எதுவும் பேசாமல் இருப்பதுதான் நல்லது."

"கொஞ்சம் விலகுங்கள். இந்த ஊசியைப் போடுகிறேன்!" என்றான் அப்போது அங்கு வந்த நந்தகுமார்.

நந்தகுமார் கையிலிருந்த ஊசி மருந்தை விமலாவின் உடம்பில் செலுத்திவிட்டு நாடியைப் பரிசோதித்தான். அவன் முகத்தில் வாட்டமான அமைதி நிலவியது.

திடீரென விமலா நலிந்த குரலில், "மிஸ்டர் நந்தகுமார்! என் தங்கையை எனக்காகத் தியாகம் செய்ய விடுங்கள். தடுத்து விடாதீர்கள். உங்கள் வாழ்விலிருந்து அவளை விட்டுக் கொடுத்து விடுங்கள்!" என்றாள்.

நந்தகுமாருக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"விமலா! என்ன இது? ஏன் இப்படி என்னவெல்லாமோ பேசுகிறாய்?" பாலு அவளருகே நகர்ந்து வந்து மெதுவாக நெற்றியைத் தடவினான்.

அம்பிகா கனிவோடு தமக்கை அருகில் நெருங்கினாள். தங்கையின் அளவிலாத அன்பைக் கண்டதும் சலுகையான அழுகை பொங்கியது விமலாவுக்கு. அம்பிகாவின் முகத்தைப் பார்த்தவாறே மறுபடியும் திணறித் திணறிக் கூறலாரம்பித்தான். "நீ... நீ எனக்கு வாக்குத் தருவாயா? அவரைக் கைவிட மாட்டேன், குழந்தையைக் காப்பாற்றுவேன் என்று?" — காரியம் சாதிக்கும் வெறியில் அவளுடைய கண்கள் ஒளிர்ந்தன. அவள் என்ன கேட்கப் போகிறாள் என்பதுதான் முன்பே தெரியுமே. அதை அவள் முழுதும் சொல்லிவிட்டபோது மற்றவர்கள் பிரமித்தனர். ஆனால் அம்பிகா மட்டும் சற்றும் தயங்காமல், "உன் பிரியப்படியே நடந்து கொள்ளுகிறேன், அக்கா. உனக்குத் திருப்திதானே? கொஞ்ச நேரம் பேசாமல் படுத்திரு!" என்றாள்.

"நிச்சயமாகவா?" என்று சம்சயத்தோடும், கேட்ட ஒன்றை உறுதியாக்கிக் கொள்ளும் தோரணையோடும் தன் மெலிந்த துவண்ட கரத்தை அவள் பால் விரித்து யாசித்தாள் விமலா.

"நிச்சயமாகத்தான் அக்கா!" கொஞ்சம் கூடத் தடங்கலில்லாமல் கையடித்துத் தந்தாள் அம்பிகா.

நந்தகுமார் அதிர்ந்தான். பாலு திடுக்கிட்டான். விமலா தன் காதுகளில் ரீங்கரித்த சொற்களின் சுகத்தில் சுமை நீங்கி இலேசானாள். தங்கையின் கைகளைப் பற்றிக் கொண்டு தலையைத் தூக்க முயன்றபோது மறுபடியும் அதே பயங்கர இரத்த வாந்தி. ஏற்றிய இரத்தத்தை இறக்கியது. இம்முறை தப்பிய நினைவு திரும்பவேயில்லை.

அம்பிகா இதயத்தை அழுத்திக் கொண்டாள். உடன் பிறந்த பாசம் அணுவணுவாகத் தேய்க்க, உள்ளம் மறுகினாள். மனைவியை இழந்தவனைத் தேற்றி அன்னையை இழந்த கலாவைச் சமாளித்து நடக்க வேண்டியவற்றைக் கவனிப்பதில் முனைந்தாள். நந்தகுமாரிடமிருந்து அவளுக்கு முழு உதவியும் கிடைத்தது.

இப்போதெல்லாம் அவள் வீட்டிலிருந்துதான் மருத்துவக் கல்லூரிக்கு வந்தாள். குழந்தை கலாவைப் பார்த்துக் கொள்ள வீட்டில் பாலுவின் அம்மா இருந்தாலும், கொஞ்ச நாள் வரை வீட்டில் தங்கியிருப்பதே முறை என்று தோன்றியது. பாசப் பரிதவிப்பு சிறிது சிறிதாகத் தணிந்து வந்த போதுதான், நந்தகுமார் முன்போல் தன்னை நெருங்கி வந்து பேசவோ, ஆறுதல் கூறவோ இல்லை என்பதை அம்பிகா உணர்ந்தாள். அவள் கண்களில் அதிகம் படுவது கூடக் காணுமே. ஏதோ ஒரு பந்தம் இற்று தூர விலகுவது போல் இது என்ன மாற்றம் அவனிடம்? எங்கேயாவது பார்க்க நேர்ந்தால், வந்தனமும், வறண்ட புன்சிரிப்புமாக விலகியோடுகிறானே? அவள் சுற்றும் வார்டுகளுக்கு அதே நேரத்தில் கூடக் கூட வரும் அந்த உணர்வைத் தடுத்தது எது?

'அனாட்டமி' ஹாலில் அன்று ஒரு பரிசோதனைக்கு வாய்ப்பு ஏற்பட்டது. நுரையீரல் சம்பந்தப்பட்ட ஒரு சிறு சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள நேரடியாக ஆராயவென அம்பிகா அங்கே நுழைந்தாள்.

அம்பிகா உள்ளே வந்தபோது ஒரு மேஜையருகே நந்தகுமார் அமர்ந்து கொண்டு அதே நுரையீரல் சம்பந்தப்பட்ட நேரடிப் பரிசோதனையைச் செய்து கொண்டிருப்பதைக் கண்டாள். நந்தகுமாரை நீண்ட நாட்களுக்குப் பின் சந்திக்க உற்சாகம் ஒருபுறம். பல விஷயங்களைப் பற்றி விவாதித்தாள். எல்லாம் தொழில் பற்றியவை. நந்தகுமாரின் பேச்சில் முன்போல் உற்சாகத் துள்ளல் இல்லை.

"உம்! ஏதோ கல்லையோ, மண்ணையோ ஆராய்வது போல் மனித உடலை ஆராய்கிறோம். இதோ இருக்கிறது இதயம். இது இயங்கும் விதமும் விந்தையும் விஞ்ஞானத்திற்குட்பட்டவை. ஆனால் மனம், மனம் என்று கூறுகிறோமே, ஒரு 'அப்ஸ்ட்ராக்ட்' பொருள்தானே அது?" என்று ஆழ்ந்த துயரமான குரலில் கூறினான் நந்தகுமார்.

"ஓ! என்ன உங்கள் தடம் விஞ்ஞானத்தை விட்டு மெய்ஞ்ஞானத்துக்குப் போகிறதே? உங்களுக்குள்ளேயே சுருண்டு கொள்கிறீர்களே, ஏன் நந்தகுமார்?"

"இந்த உலகத்தின் விசித்திர நடப்புகள் அப்படி மாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை." அவனுள் ஏதோ மனப்புண் கசிவது போன்ற வேதனைச் சொற்கள்.

"மிஸ்டர் நந்தகுமார்! என்ன ஒரு மாதிரியாக, விரக்தியாகப் பேசுகிறீர்கள்?"

நெஸ்கா∴பேயின் ருசியிலிருந்தே தெரியும்:

1 அது தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்திய பீபெரி காபிக்கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் 100% தூய காபி

2 அது இன்ஸ்டன்ட் காபி தயாரிப்பதில் உலகிலேயே அதிக அனுபவம் உடையவர்களால் தயாரிக்கப்படுகிறது.

3 உங்கள் ருசிக்கேற்றபடி 'ஸ்ட்ராங் காகவோ' 'லேட்டாகவோ' போட்டுக் கொள்ளக்கூடியது.



குறைந்த அளவு: ஸ்பூன் நிரம்ப: குவித்து:

4 நெஸ்கா∴பேயின் ருசியிலிருந்து தெரியவராத விஷயம்:
அது சிக்கனமானது. நேரடியாக கப்பிலேயே தயாரித்துக் கொள்ளக் கூடியதால் அதை தேவையான அளவு மட்டுமே போட்டுக் கொண்டால் போதும்.

NESTLÉ

ஒரு நெஸ்லே தயாரிப்பு



NESCAFÉ® நெஸ்காஃபே—தனிச்சிறப்புள்ள தரமான காபி!

* நெஸ்கா∴பே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும்
NCE 4248 A

ஆரோக்கியமாக

இருக்க உங்களுக்கு

வைட்டமின்களும் மினரல்களும்

தேவை...

அதாவது தினமும்

ஒரே ஒரு



விம்க்ரான்®

அது அத்தியாவசியமான 11
வைட்டமின்களும்,
8 மினரல்களும் அடங்கியது.

நாள் முழுவதும் உங்களைச்
சக்தியுடன் வைத்திருக்க
ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை
போதுமானது. இன்றே விம்க்ரான்
வாங்குங்கள்

SQUIBB
SARABHAI CHEMICALS

® ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்.


Shilpi SC 53A/67 Tam

செய்து கொள்வதற்கென
“இரு முறை தீட்டப்பட்டது”

•

•

நீடித்து உழைக்கிறது



ZENITH

SPECIAL BLADE

பிரமாதமான முகக்ஷவரத்
திற்கு எப்பொழுதும்
ஜெனித் பிளேடுகளையே
உபயோகியுங்கள்

மூல நோயை

முற்றவிடாமல்

நம்பிக்கையான

ஹெடென்ஸா

உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
— ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

DOL-327/1 TAM

பெருமூச்சோடு நந்தகுமார் எழவும், அம்பிகாவும் எழுந்து பின்தொடர்ந்தாள். கல்லூரிக் கட்டிடத்தை விட்டு வெளியேறியதும் அவன் அவளைச் சிற்றுண்டிசாலைக்கு அழைத்தான்.

அவன் வேதனையோடு சிரித்தான். நம் பாதை வேறாகி விட்டது என்பது போலிருந்தது அவன் சிரிப்பு.

அம்பிகா மெல்லச் சிரித்தாள். 'ஓ! இந்த மனத்தாங்கலா உங்களுக்கு? என்னைக் கேட்காமலேயே என் பாதையை விட்டு விலகத் தீர்மானித்து விட்டீர்களா, நந்தகுமார்? இதைப் பற்றி நாம் சாவகாசமாக அல்லவா பேச வேண்டும்?' இப்படி ஓடிய சிந்தனையை அவள் வாயால் கொட்டிவிடவில்லை.

மாலை ஒளி மங்கி வடிந்தபோது அம்பிகா வீட்டை அடைந்தாள். 'நானே பாலு அத்தானையும் அழைத்துக் கொண்டு நந்தகுமார் வீட்டுக்கே போய்ப் பேசிவிட்டு வந்தால் என்ன? அவர் எதை எதையோ நினைத்து அலட்டிப்படுவதை அத்தானும் சேர்ந்து மாற்றலாமே!' என்ற எண்ணம் அவள் மனத்துள்ளே. வாசலில் பாலுவின் அம்மா செல்லம் குழந்தை கலாவோடு நின்றிருந்தாள். அம்பிகாவைக் கண்டதும் கலா தாவிப் பாய்ந்தாள். அவளைத் தூக்கி உச்சி முகர்ந்தவாறே உள்ளே வந்தவளின் செவியில் செல்லத்தின் சொற்கள் விநோதமாக ஒலித்தன. ''அசல் அவள் அம்மா மாதிரிதானே நீ. அதுதான் உன்னைக் கண்டதும் கலா அப்படிப் பாய்ந்து வருகிறாள். ம்! அதையும் வச்சுத்தானே விமலா அப்படிக் கேட்டுச் சத்தியம் வாங்கிக்கிட்டுப் போனா. அம்மா அம்பிகா! உனக்கு உங்க அக்கா போன துயரம் இருக்கும். ஆனாலும் அவ சொல்லிட்டுப் போனபடி சீக்கிரமா இந்த வீட்டுப் பொறுப்பை ஒரு தாலியைக் கட்டிக்கிட்டு ஏத்துக்கோம்மா. அவ ஆத்மா அப்பத்தான் சாந்தியடையும்...''

இதைக் கேட்டுக் கொண்டே பாலு தன் அறையிலிருந்து வந்தான். அவனைக் கண்டதும், ''நான் கலாவைத் தூக்கிக்கிட்டுக் கோயில் வரைக்கும் போயிட்டு வரேன். ரெண்டு பேருமா யோசிச்சு ஒரு முடிவுக்கு வாங்க'' என்ற செல்லம் குழந்தையோடு அவ்விடத்தை விட்டு நீங்கினாள்.

எனவே அதைப் பற்றிப் பேசியே தீர வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தில் நின்றான் பாலு. அம்பிகா தலைக் கொண்டையைப் பிரித்துச் சீவியவாறே, ''என்ன அத்தான், உங்க அம்மா இப்படிக் கூறுகிறார்கள், நீங்கள் பேசாமல் இருக்கிறீர்களே...?'' என்றாள்.

''நான் என்ன செய்யணும்னு நினைக்கிறே அம்பிகா? நீ ஏதேனும் சொல்லணும்னா என்கிட்டே மனம் விட்டுச் சொல்லலாம். என்னைப் பொறுத்தவரை நான் இன்னமும் துக்கத்திலேயிருந்து விடுபடல்லே. நீயும் அப்படித்தான்னு நினைக்கிறேன்.''

''அத்தான்! நீங்கள் அக்காவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?... அவள் கடைசியாகச் சொன்னதைப் பற்றி என்ன முடிவுக்கு வந்தீர்கள்?''

''என்னைப் பொறுத்தவரை அவள் நினைவுக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. அதேபோல் அவள் கூறியதையும் நான் கௌரவப்படுத்தவே நினைக்கிறேன்... ஆனால் அது உன்னையும் பொறுத்த விஷயமாக இருப்பதால் உன் முடிவையும் காத்திருந்து நிதானிப்பேன்...''

''ஆனால் என் முடிவு வேறு என்பதானால் நீங்கள் அதற்குரிய கௌரவம் தருவீர்களா, அத்தான்?''

''அம்பிகா!'' அவன் குரலில் ஒரு சிறு பதற்றம். ''உன் முடிவு வேறாக இருக்க முடியாதே.. இருக்கக் கூடாதே அம்பிகா. உன் முழு விருப்பத்தோடும் அன்று உன் சகோதரியின் கடைசி வாக்குக்குச் சத்தியம் செய்து கொடுத்தது என் நினைவில் இருக்கிறது, அம்பிகா...''

''ஆனால் அந்த நேரம் அவள் உயிர்த் தாபத்தை நீக்க அப்படிச் சத்தியம் செய்தேன். சாகப் போகும் உயிர் சலனமில்லாமல் போக வழி செய்தேன். அதன் துயர் களைந்தேன். அதன் பின், கடமை முடிந்த பின், அந்த அர்த்தமற்ற, க்ஷண நேரம் நடந்து முடிந்த ஒரு நாடகத்துக்கு உயிர் கொடுக்க வேண்டுமென்பதில்லையே...! அவள் இனி இல்லை. உயிரால், உணர்வால், உடலால் நின்றபோது ஆசையாக ஒன்றை வேண்டினாள். என் அன்பு மற்றவர் மீது உள்ள தறிந்தும், போகும் உயிருக்கே உண்டான ஒரு பேராசை வெறியில் அவள் என்னை அவ்வாறு கேட்டாள். அப்போது மறுப்பது நியாயமா அத்தான்? என் சகோதரி மரண வாயிலில் நின்றபோது துடிப்பு நிற்கும் இதயத்துக்கு ஓர் ஆறுதலூட்டினேன். இன்று அவள் இல்லை. எனவே நடந்து முடிந்த எதுவுமே இல்லை!''

''அம்பிகா! அப்படிச் சொல்லாதே. அவள் தெய்வமாகி நம்மிடையே நிறைந்திருக்கிறாள். சாகவில்லை. உடலால் அழிந்து, ஆத்மாவால் நம்மையே சூழ்ந்திருக்கிறாள் அம்பிகா..''

''எங்கள் வைத்திய சாஸ்திரத்தில் இந்த அதீத நம்பிக்கைக்கு இடமில்லை அத்தான். அதை நம்பி உயிருள்ள உடலின் உணர்ச்சிகளைப் புறக்கணித்து, பிறிதொன்றை ஏற்பதில் அர்த்தமே இல்லையே...'' என்று அம்பிகா அடுக்கியபோது பதில் பேச இயலாது விழித்தான் பாலு.

அம்பிகா சுவரில் மாட்டியிருந்த விமலாவின் புகைப்படத்தைக் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தாள். பின் தெளிவான குரலில் கூறவாரம்பித்தாள். ''அத்தான்! இதோ இந்தப் புகைப்படத்திலிருக்கும் உருவம் இப்போது இல்லை என்பதுதான் மெய்! இது இருந்தபோது இதற்கு அபிலாஷைகள் உண்டு என்பது உண்மை! மறைந்த பின்னும் ஓர் உயிர் தன் ஆசைகளைக் கோரி நிற்கிறது என்றால், அது பகுத்தறிவுக்கு ஒத்து வருகிறதா, பாருங்கள்! ஆத்மா, ஆத்ம சாந்தி என்பதெல்லாம் என்னால் நம்ப முடியவில்லை, அத்தான். ஓர் உயிரின் துடிப்பு இவ்வுலகில் இருக்கும்வரையில் எத்தனை நாட்களானாலும் கண்ணயராது பணி புரிபவள்தான் நான். எனினும் அந்தத் துடிப்பின் ஓய்வுக்குப் பின் அந்த உடலை எத்தனைக்கு மதிக்கிறேனோ, அத்தனைக்குத்தான் அந்த மறைந்த உயிரின் கடந்த கால ஆசைகளும், நேசங்களும். இறந்துபோன உயிர் முதலில்

இயற்கையின் தத்துவத்துக்கும் கோட்பாட்டுக்கும் உட்பட்டு ஜன்மித்தது. பிறப்புக்கு உருக் கொடுத்த இயற்கை நியதிதான் இறப்புக்கும் காரணமாகிறது. தோற்றம், வளர்ச்சி, அழிவு — அதன் பின் எஞ்சுவது ஏதுமில்லை. வெறும் சூனியம்தான்! உடலின் உருவில் அசைவு எப்படி இயற்கையாக ஏற்பட்டதோ, அப்படி அடங்கி விட்டது. அந்த உடல் அசைவற்று ஓய்ந்ததும் அங்கு ஏதுமில்லை. மீண்டதே நம் நினைவுதான். அதற்கப்புறம் ஒன்றுமில்லாததற்கு உண்டு என்று பொருள் கொள்ள நான் கற்ற வைத்திய சாஸ்திரம் இடமளிக்கவில்லை. அத்தான், உங்கள் மனத்தைப் புண்படுத்துவதோ, நீங்கள் போற்றும் நிகழ்வை இகழ்வதோ என் நோக்கமல்ல. ஆயினும் எனக்கு ஒவ்வாத வாழ்வை ஏற்றுக் கொள்வதில் திவிரம் எழவில்லை.''

''நான் தனிப்பட்ட முறையில் எனக்காக உன்னை வற்புறுத்தப் போவதில்லை, அம்பிகா. வலிய இந்த வாழ்வை ஏற்றுக் கொள்ளச் சொல்லும் அம்மாவையும் நான் சமாதானப் படுத்தி விடுவேன். ஆனால் உன்னிடமிருந்து எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கவில்லை நான்....'' என்று பதிலளித்தான் பாலு.

''நான் நந்தகுமாரை மணப்பதற்கு உங்கள் ஆசியைப் பெற்றிருக்கிறேன். அதற்கு நீங்கள் உதவ வேண்டும் அத்தான்......''

''உன் எண்ணத்துக்கு முதலிடம் தருகிறேன், அம்பிகா. கூடவே என் விமலாவின் ஆத்மா சாந்தியடைய உன் சார்பில் நான் அவளை மன்னிப்புக் கேட்டுக் கொள்வேன். உனக்கும் நல்ல வாழ்வு அமைய அவள் மனம் பொங்கி ஆசீர்வதிப்பாள். இதற்கிடையில் ஒரு வேண்டுகோள், அம்பிகா. மறுபடியும் விமலாவின் ஆத்மசாந்தி பற்றி உன் நம்பிக்கையின்மையைத் தயவுசெய்து வெளியிட வேண்டாம். ஒரு தூய நினைவைத் தூக்கியெறிந்து பேசுவது போல் எனக்குப் படுகிறது. நீ ஒரு டாக்டர். எனவே, உயிரோடு இருக்க உடலைப் பற்றி மட்டுமே பேச உரிமையுண்டு என்பது போல் நினைக்கிறாய். நீ இப்போது எதை எண்ணி 'காதல்' என்ற ஓர் உணர்வைப் போற்றுகிறாய்? சரி அதிருக்கட்டும். உனக்கேற்பட்ட சூழ்நிலைகள் அவ்வாறு அறிவுறுத்தியதெனில், அந்த உரிமையோடு ஆராய்ந்து பார்க்கவேண்டியதுதான். ஆனால் அதை நம் உள்ளுணர்வால் உணர முடியும் என்பதையும் அப்போது அறிந்து கொள்வாய்.''

அதை மறுப்பவள் போல் அம்பிகா மெல்லத் தலையசைத்த போது செல்லம் குழந்தை கமலாவோடு கோயிலிலிருந்து திரும்பி வந்தாள். ஆகவே அவர்கள் சம்பாஷணை அத்துடன் முடிந்தது. பாலுவிடமிருந்து செல்லம் அம்பிகாவின் மனநிலையை அறிந்தபோது வெறுப்பினால் முகம் சுளிக்கப் பார்த்தாள் அந்தப் புதுமைப் பெண்ணை.

''அத்தான், நான் நாளையிலிருந்து பழையபடி விடுதியிலேயே தங்கிக் கொள்கிறேன்'' என்றாள் அம்பிகா.

''என் பெயரில் இருக்கும் உன் அப்பாவின் பணத்தையெல்லாம் உன் பெயருக்கே மாற்றி விடுகிறேன், அம்பிகா.''

''செய்யுங்கள். உங்களுக்கு அது சுமையாக இருக்குமானால் அப்படியே செய்யுங்கள், அத்தான். இத்தனை வருடங்களும் நீங்கள் என் பொருட்டு ஏற்றிருந்த பொறுப்புக்களை நான் மறக்கவே முடியாது. நந்தகுமாருடன் என் திருமணம் நடைபெறும்போது நீங்கள் தவறாது வரவேண்டும் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன்......'' என்ற போது அவள் குரல் தானறியாமல் தழுதழுத்தது. அதில் அவளுக்கே விந்தை. அவள் யாருக்காக அழுகிறாள் ?

'' உன் திருமணத்துக்கு வரக் கடமைப்பட்டவனில்லையா நான் ? நிச்சயம் வருவேன் அம்பிகா. உன் மீது எனக்குக் கோபமில்லை '' என்று கொஞ்சம்கூட உள் சலனமில்லாமல் அவளைத் திருப்திப்படுத்தும் குரலில் கூறினான்.

காலை வேளையின் பசிய புஷ்பம் போல் அம்பிகா வேகநடையிட்டு வார்டையடைந்த போது தலைமை டாக்டர் சுற்றுலா இளம்பத் தயாராகி விட்டார் எனத் தெரிந்தது. அவரைத் தொடர்ந்தவர்களுள் அம்பிகாவும் ஒருத்தி. கூட்டத்தில் நந்தகுமார் அவளைப் பார்த்தும் பாராதவனைப் போல் நிற்பது கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

வேகமாக வெளியேறும் நந்தகுமாரை விரைந்து பின்பற்றி வந்து எதிர்நின்றாள் அம்பிகா. அவன் தயக்கத்தோடு அவளைப் பார்த்தான். அவள் அவனுக்கு முன்னதாக நடந்து வராந்தாவின் கோடிக்குச் சென்று நின்றாள்.

''என்ன, அம்பிகா! ஏதேனும் பேச வேண்டுமா ?'' என்று ஒட்டுறவில்லாத புதிய சிநேகிதன் போல் கேட்டான் நந்தகுமார்.

''என் மன நிலையை விளக்கி உங்களிடம் கூறிவிட வேண்டாமா ? நான் வீட்டை விட்டு மறுபடியும் விடுதி வாழ்வை ஏற்றுவிட்டேன்'' என்று அதற்குரிய காரண காரியங்களையும் நடந்தவைகளையும் அவள் கூறிய போது அவன் திடுக்கிட்டான்.

''நீ செய்வது தவறு, அம்பிகா. கடைசியாகப் பிரிந்த உயிருக்கு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்ற விட்டால் என்ன பயன்? பகுத்தறிவு என்று கூறிக் கொண்டு, தியாகம், இரக்கம், விட்டுக் கொடுக்கும் இயல்பு எல்லாவற்றையும் மறந்து விட்டால் மனிதனுக்கும் மண்ணுக்கும் வேற்றுமை என்ன? சத்தியம் பொய்யாகக் கூடுமா, அம்பிகா?''

''சரிதான். நீங்களும் அப்படி நம்புகிறீர்களாக்கும்! இது ரொம்ப வேடிக்கைதான் ! உடம்பை அரிந்தரிந்து, அதன் செயல் திறன் உணர்ந்து கற்ற ஒரு டாக்டரா, இப்படிப் பேசுகிறீர்கள்? அசைவுகள் நீங்கிய பின் உடம்பே இல்லை என்றால் உயிர் ஏது நந்தகுமார்?''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை, அம்பிகா. என் குற்றமல்ல அது. என்னைப் படைத்த கடவுளின் ஒவ்வொரு படைப்பு அம்சத்தையும் வியந்து போற்றுகிறேன் நான். வெறும் ஊனுக்காக உடம்பைப் படைத்து, அதை அழியவிடும் விளையாட்டுத்தான் பிறப்பு என்பதை நான் நம்பவில்லை. பிறவிகள் யுகம் தோறும் தொடருகின்றன, வாழ்கின்றன. உடல் அழியும் போது ஆத்மா

எஞ்சி வேறு படைப்பில் உயிர்க்கிறது. இதுவே என் நம்பிக்கை! எனவே, நான் உனக்காக வருந்துகிறேன் அம்பிகா. ஏனெனில், அந்தக் கடைசி உயிரின் ஆசைக்குப் பங்கம் விளைவிக்க என்னால் இயலாது. சுயநலத்தைப் பருத்தறிவால் புதுப்பிக்கும் முயற்சியை விட்டு நீ கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்று அம்பிகா. அதுதான் நல்லது.''

எண்ணங்களின் இருட் போர்வையில் அம்பிகாவுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையிலேயே புரண்டு புரண்டு படுத்த வள் எழுந்து மேசை விளக்கைப் பொருத்தி விட்டுத் தலைமாட்டிலிருந்த ஒரு புத்தகத்தை இழுத்தாள். 'அனாட்டமி' புத்தகம். உடற் கூறுகளின் தத்துவத்தை அறுதியிட்டுக் கூறும் நூல்.

மல்லாக்கப் படுத்தவாறே புத்தகத்தை மார்பில் நிறுத்தி விரித்த போது, அதனுள் ளிருந்து 'பொத்'தென அவள் கன்னத்தில் விழுந்தது ஒரு புகைப்படம். அதை எடுத்து உற்று நோக்கிய அம்பிகா சிலிர்த்துப்போனாள். அவர்கள் இருவரும் கட்டிய கோட்டைகள் எத்தனை? வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாக இந்த விமலா மட்டும் இறக்காமலிருந்தால்.....? 'உம்'மென்ற பெருமூச்சு இதயக் கரையை உடைத்துக் கொண்டு புறப்பட்டது.

அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் பெருத்த பரபரப்பு. தமிழ்நாட்டின் தென்மாநிலங் களின் கிராமங்களில் எல்லாம் பெருவாரி யாகப் பரவி வாந்திபேதி மக்களைக் கொன்று கொண்டிருந்தது. நகரங்களின் பெரிய ஆஸ் பத்திரியிலிருந்தெல்லாம் மருத்துவக் குழுக்கள் புறப்பட்டன. அந்தக் குழுவில் நந்தகுமார் சேர்ந்து புறப்பட்ட போது, அம்பிகாவையும் எதிர்பார்க்கவே செய் தான். சேவை செய்ய நேரும் அரிய சந்தர்ப் பத்தை அவள் இழக்க நேர்ந்ததில்லையே! தனி 'வானி'ல் மருந்துகள் சகிதம் புறப்பட்ட மருத்துவக் குழு மிகவும் சீர்கேடான, பின் தங்கிய ஆனால் ஜனத்தொகை மிகுந்த அந்தக் கிராமத்தை அடைந்தது.

அங்கே உடனடி வேலைகள் காத்திருந்தன. அவற்றைத் தொடங்குமுன் எல்லோரும் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டனர். துரித மாக நோயாளிகள் பரிசீலிக்கப்பட்டனர். ஓரிரு நாட்களிலேயே மரணத்தின் எண்ணிக்கை குறைவுபட ஆரம்பித்தது.

பத்து நாட்களுக்குப்பின் அம்பிகா பெண் களுக்கும், சிறுவர்களுக்கும் தடுப்பு ஊசிகள் போட்டுக் கொண்டிருந்தாள். மனம் ஒரு மாதிரியாகக் களைத்திருந்தது. காலையி லிருந்தே அவள் நந்தகுமாரைப் பார்க்க வில்லை. வேலையின் அவசரத்தில் ஓய்வாகப் பேசவே சமயம் வாய்க்கவில்லை. என்றாலும், அவன் கண்ணில் தென்படும் தூரத்தில் தான் அவள் பணிகள் செய்து கொண்டிருப் பாள். இன்றென்னவோ நந்தகுமாரைப் பார்க்கவே இயலவில்லை. 'இதோ, இன்னும் அரைமணி நேரத்தில் வேலைகளை முடித்து விட்டு, பொறுப்பை வேறு யாரிடமாவது ஒப்படைத்து விட்டு, இன்று அவனோடு எப்படி யும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும்.'

இப்படி எண்ணமிட்டுக் கொண்டிருந்தவளை, ''என்னிடம் குளுகோஸ் எடுத்துத் தந்துவிட்டு என்னோடு கூடவே வாருங்கள்....'' என்று அழைத்தான் டாக்டர் சேகர்.

''யாருக்கு என்ன ஆபத்து?'' என்ற வாறே பரபரப்புடன் குளுகோஸ் பாட்டில் களை எடுத்துத் தந்தவள், டாக்டர் சேகரைப் பின்தொடர்ந்தாள்.

''ஒரு டாக்டர் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள நேரமில்லாமல் வேலை செய்திருக் கிறார்!''

''பேஷ்! மரணத்தை வலிய வரவேற்றிரு ராக்கும்! யாரோ அவர்?''

''டாக்டர் நந்தகுமார்!''

''என்ன?''

ஓங்கி அவள் மண்டையில் யாரோ சம்மட்டி யால் அடிப்பது போலிருந்தது. கால்கள் வெட வெடவென்று நடுங்கின. ஓடிகூட எடுத்து



பூப் போன்ற மேனி!
பொன் போன்ற உள்ளங்கம்
'காப்'பின்றிப் பலர் கையில்
கசங்கும் எழில் தோற்றம்!

குளிருக்குக் 'கதகத'ப்பாய்க்
குலவி, சொகுசாகத்
தளிரான பால்மேனி
தடவி முகர்ந்து - எச்சில்

அதரத்தால் சுவைத்துக்
கனலாக்கி என்னைக்
களித்து மகிழ்ந்த பின் -
காலால் மிதிக்கின்றார்!

இரவும் பகலும்
எண்ணிய போதெலாம் - என்
உறவினை நாடி - உயிர்
உறிஞ்சி ரசிக்கின்றார்!

வரையில்லை - வயதில்லை;
மறைவில்லை - முறையில்லை!
நிறைவாக அனுபவித்து -
நெரித்தென்னை எறிகின்றார்!

பால்வண்ண மேனி
படிப்படியாய்க் குறைவாகி
''நூ''—என்று துப்பும் - துண்டுச்
'சிகரெட்' நான்! என் செய்வேன்?

வைக்கச் சக்தியில்லாது வெல வெலத்தது உடல்.

அவள் அசுரத்தனமான வெறியோடு ஓடினாள். ''கடவுளே! இவரைக் காப்பாற்று. என்னிடமிருந்து பறித்துவிடாதே'' என்றாள் மானசீகமாகப் பிரார்த்தனை புரிந்த வண்ணம்.

அவள் நந்தகுமாரை நெருங்கிய போது டாக்டர் மார்பு வரை படர்ந்திருந்த வெள்ளைப் போர்வையை இழுத்து முகத்தை மூடிவிடுகிறார். சூனியத்தை வெறிப்பதுபோல் முகம் இறுக அக்காட்சிகளைக் காண்கிறாள் அம்பிகா.

நந்தகுமார் இறந்துவிட்டானா? அவளை விட்டு அவன் போய் விட்டானா? கடைசியில் இப்படியா முடிந்து போயிற்று கதை? அவளுக்கு இனி யார்? எத்தனை மக்களைக் காப்பாற்றினாரோ, அத்தனை மக்களுக்கும் ஈடானதாயிற்றே அவரின் ஓர் உயிர்! அது போய் விட்டதா, திரும்பியே வராதபடி?

மாலை மங்கியது. ஜன்னலில் பணிப்பெண் வைத்திருந்த மல்லிகை ஆரம் குண்டு குண்டான முத்துக்களாகப் பூத்திருந்தது. அம்பிகா எழுந்து அந்த மலரை எடுத்தாள். வழக்கம் போலவே இன்றும் கைகள் தலையருகே தயங்கின. அவள் பார்வை மேஜை மீதிருந்த புகைப்படத்தில் பதிந்தது. 'குபுக்'கென்று அழுகை வெடித்தது. ''மாட்டேன், நந்தகுமார்! இனியும் என்னையே நான் ஏமாற்றிக் கொள்ளும் இந்த வேஷம் போட முடியாது'' என்று ஆவேசமாக முணு முணுத்தவள் மலர் ஆரத்தைப் புகைப்படத்திற்குச் சூட்டினாள். வெகு நேரம் மேசை எதிரில் புகைப்படத்தை நோக்கியவாறே ரகசியமாக விம்மிக் கொண்டிருந்தாள் அவள்.

உடம்பு எந்த இயற்கைக்கு உட்பட வேண்டுமோ அதைத்தான் டாக்டர் நந்தகுமார் அடைந்துள்ளான். இதில் அம்பிகா அழ என்ன இருக்கிறது? அவனோடு, அந்த உடம்போடு அவன் கதை முடிந்ததென்றால் அந்தப் புகைப்படத்தைக் கண்டழுவதிலும் அர்த்தமில்லையே! சட்டென்று பிறந்த இரு உணர்வுகளின் வேறு பாட்டில் உடல் குலுங்க உள்ளம் அதிர நின்றாள் அம்பிகா. ஆயினும் சற்று முன் ஏற்ற ஞானம்தான் உண்மையான ஒன்றுபோல் படுகிறது. அது பொய் என்றாலும்கூட அதை உண்மை என்று ஏற்பதிலே ஏற்படும் மகத்தான ஒரு சந்துஷ்டி வேறு எதிலும் கிட்டாதுபோலும் படுகிறது. அவளுக்கும், அவனுக்கும் இடையில் இருந்த கருத்து வேற்றுமையில் அவனுடையதையே ஒட்டிக் கண்மூடி ஏற்றுக் கொள்ள வேண்டும் போலக்கூட ஒரு பேராவல் உதிக்கிறது. இது என்ன ஆச்சரியமான மாறுதல் அவளுள்? தனக்கு ஏற்பட்ட தோல்வியை ஒப்புக்கொள்ளவும் ஒரு சிறு வெட்கம் திரையிடுகிறது.

நினைத்துப் பார்த்தால் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இருவருமே டாக்டருக்குப் பயின்றவர்கள்தாம். அவள் உடம்பைக் கண்டபோது வெறும் ஊனையும், அது செயல்படும் ஒரு வரைமுறைகளையும் கண்டாள். உடம்பாகச் செயல்படும்வரை அதன் இயக்கத்துக்கு மதிப்பு உண்டு என்ற எண்ணம் கொண்டவள். கண்ணுக்குத் தெரிந்த உடலை அறிவுக்குப் புலனாகிய அதன் படைப்பு விதிகளை மட்டும் ஏற்றுக் கொண்டாள். அவனோ இந்த உடல் தத்துவத்தை விளக்கும் உயிராத்மாவையும் அது இயங்கப் படைக்கப்பட்ட துணை உபகரணங்களையும் கண்டு சிருஷ்டியின் மகத்துவத்தைப் போற்றினான். எல்லாம் வல்ல இறைவனை வியப்பது போலவே, ஓர் உயிருக்குத் தரவேண்டிய அளப்பரிய மரியாதையை நல்கிக் கௌரவித்தான்.

உயிருக்குயிராக நேசித்த அவர்களுக்குள் ஒரு பெரிய கருத்து வேற்றுமை இருக்க முடிந்ததே அதிசயமல்லவா? நந்தகுமாரின் புகைப்பட உருவம் அவளைப் பார்த்து நகைப்பது போல் ஒரு பிரமை மேவிடுகிறது. அந்தப் பிரமையை ஏற்கக் கூசி அவள் கண்கள் நிராகரவில் நீர் பொழிகின்றன. ஏனிந்தக் கண்ணீர்? அவளுக்கே புரியவில்லை.

உலகின் மறைபொருள்களை, மாயத்தைக் கண்டுணரும் விஞ்ஞானியே உலகையும் அதன் தத்துவத்தையும் கண்டு திகைக்கிறான். அதைப் படைத்த கடவுளை எண்ணி வியந்து போற்றித் தொழுகிறான். உயிரின் மேன்மைகளை உன்னிப் பெருமிதமுறுகிறான். அநாதிகாலந் தொட்டு நம் மரபில் உதித்த மெய்ஞ்ஞானப் பெரியோர்களோ, உண்மையான ஆத்மாநுபவத்தை உபநிஷதங்களாக விட்டுப் போயிருக்கிறார்கள். சென்று போன உயிர்களுக்காக அந்த வமிசத்தினர் பிண்டமும், எள் நீரும் இறைக்க வேண்டும் என்பதும் சாத்திரமில்லையா? ஆதியிலிருந்து, இன்று வரை இந்த உலகின் பல்கோடி உயிர்கள் நம்பும் ஒன்றை அவள் மட்டும் நம்பாமல், தன்னைப் போல் அறிவுச் சுடர் வேறு ஒருவரும் இல்லை என்ற மமதையில் நின்றாளே? அது இப்போது தலை தாழ்ந்து நின்றது! அவள் உடம்பு குலுங்கி அதிர்ந்தது.

''ஆத்மா உண்டு என்று உணர்ந்ததில் தான் எத்தனை இதம்! அடுத்த ஜன்மத்திலாவது உங்களை அடைவேன், நந்தகுமார். இதுவே என் ஆசை.''

அடுத்த நாள் அம்பிகா தன் அக்கா வீட்டுக்குச் சென்றாள். அவளுக்குத் தேறுதல் கூற இயலாமல் நின்ற பாலுவையும், அவள் தாயையும் கண்டுவிட்ட சலுகையில் தன்னையறியாமல் பொங்கித் துயரைக் கொஞ்சம் ஆற்றிக் கொண்டாள்.

''என்னை மன்னித்துவிடுங்கள், அத்தான். அக்காவின் ஆத்மாபற்றிச் செய்த வாதங்களை எண்ணி வருந்துகிறேன். அது உண்டு. அதற்கு மரியாதை செய்ய வேண்டும் என்று இப்போது உணர்கிறேன். ஆனால் இப்போது உணர்ந்து பயனில்லை. என் நந்தகுமார் இல்லை. துரதிர்ஷ்டவசமாக என் அக்கா கூறியதை என்னால் இப்போது ஏற்க முடியவில்லை. நான் அவருடையவளாகவேவாழ்ந்துவிட முடிவு செய்துவிட்டேன். அவர் விரும்பி விஸ்தரிக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்த பணிகளைத் தொடர்ந்து செய்வேன்!''

அம்பிகாவின் மெய்யும் மனமும் சிலிர்த்தன. எத்தனை பெரிய உண்மை! அவள் அன்புக்குரியவனால்தான் அவள் பரிபூரண உண்மை கண்டாள். அவள் வாழ்க்கை முடிவில் இந்த ஞான விழிப்பு!

பலத்திற்கும்
ஆரோக்கியத்திற்கும்

பண்டிட் D. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

69 வருடங்களாக
பிரசித்தி பெற்றது

ஆயுர்வேதாஸ்ரமம்

பிரைவேட் லிமிடெட்
சென்னை - 17.

திருவாரூர் ஸ்ரீ ஞானம்பிகா சமேத கருணாகரேசுவரர் ஆலயத் திருப்பணி

புராதனப் பெருமைவாய்ந்த திருவாரூரில் சிதிலமடைந்திருந்த கருணாகரேசுவரர் ஆலயம் இந்துமத அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் மூலம் பல அபிவிருத்திகள் செய்யப்பட்டு நித்திய ஆராதனைகள் நடந்து வருகின்றன. தர்மகர்த்தாக்களின் முயற்சியினாலும், பல அன்பர்களின் ஒத்துழைப்பினாலும் இடிந்த மதில் சுவர்கள், ஸ்ரீ கணபதி ஸ்ரீமுருகர் சன்னிதிகள் பழுது பார்க்கப்பட்டுப் பூஜை நடந்து வருகிறது. இன்னும் ஏராளமான திருப்பணிகள் காத்திருக்கின்றன. எல்லாவற்றையுமே புதுப்பிக்க வேண்டியதா யிருக்கிறது. செல்வம் மிகுந்த ஆலயமா யிருந்தால் திருப்பணிகளை எளிதில் செய்து முடித்து விடலாம். ஸ்ரீ கருணாகரேசுவரர் ஆலயத்துக்கு இறைவனின் அருட்செல்வம்தான் இருக்கிறது; பொருட்செல்வம் இல்லை. ஆகவே, அன்பர்களின் பொருளுதவியைக் கோர வேண்டி யிருக்கிறது.

இதைக் காணும் அன்பர்கள் தங்களாலியன்றபொருளுதவியைக் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி இறைவனின் திருவருளை அடைய வேண்டுகிறோம்.

திரு G. இராமச்சந்திர நாயுடு, மானேஜிங் டிரஸ்டி & P. W. D. காண்ட்ராக்டர், திருவாரூர்.
திரு S. வைத்தியநாதன், டிரஸ்டி, ஸ்ரீ லக்ஷ்மி ஸ்டோர்ஸ் மளிகை, விஜயபுரம் P. O. தஞ்சை மாவட்டம்.



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்
"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414, மதராஸ்-5
தந்தி: 'EVERMANS' போன்: 85834

மதராஸ் சிட்பண்டு 1961 ஆக்ட்படி கீழ்க்காணும் சீட்டுகள் நடத்தப்படுகின்றன
(மதராஸ் ஆக்ட் நெ. 24 of 1961)

25 மாதங்கள் — குறுகிய காலச் சீட்டுகள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200	ரூ. 5000	D	ரூ. 25	ரூ. 625
B	ரூ. 100	ரூ. 2500	E	ரூ. 20	ரூ. 500
C	ரூ. 50	ரூ. 1250	F	ரூ. 15	ரூ. 375

40 மாதங்கள் — நீண்ட காலச் சீட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500	ரூ. 20000
LTB	ரூ. 250	ரூ. 10000
LTC	ரூ. 125	ரூ. 5000

சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்
கிளைகள்: புதுடில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

VSK - SSC - 1000 THI.IK

''டைரக்டர் ஸார், ஒரு படத்திலே கதாநாயகனும், கதாநாயகியும் இல்லாவிட்டால்கூடப் பரவாயில்லே. ஆனால் காதல் முக்கியம். இதை மறந்துவிடக்கூடாது. அதையும் விட முக்கியம் காதல் சீன்கள்! 'டிஸ்ட்ரிப்யூட்டர்'கள்கூட, குளுகுளு காஷ்மீரிலே காதல் காட்சிகளைக் கலரிலே எடுத்திருக்கிறோம் என்று சொன்னால் போதும். அந்தப் படத்தைப் பார்க்காமலே அட்வான்ஸ் கொடுக்கத் தயாராயிருக்கிறாங்க'' என்றார் படமுதலாளி.

''நீங்கள் சொன்னது சரி. நானும் அது சம்பந்தமா யோசனை பண்ணிக் கொண்டு தான் இருக்கிறேன். உங்களோடும் வெள்ளித்திரை வெங்குவோடும் 'டிஸ்கஸ்' பண்ணி விடவேண்டும் என்பது என் ஐடியா!''

உடனே வெங்கு அங்கு வந்து சேர்ந்தான்.

''வா, அப்பா, வெங்கு! 'நினைத்தேன், வந்தாய். நூறு வயது'' என்று பாடினார் டைரக்டர்.

''என்ன, டைரக்டர் ஸார், ரொம்பக் குஷியா யிருக்காப்போல இருக்கு!'' என்றான் வெங்கு சிரித்துக் கொண்டே.

''ஆமாம். குஷிதான். ஒரே குஷி! காதல் காட்சிகளைப் பற்றி 'டிஸ்கஸ்' பண்ண ஆரம்பித்தால் குஷியாகத்தானே யிருக்கும்?'' என்றார் டைரக்டர்.

முதலாளியின் முகம் மகிழ்ச்சியால் விரிந்தது. ''டைரக்டர் ஸார், நீங்கள் காதல் சீன்களைச் சொல்லுங்க!'' என்றார்.

டைரக்டர்: 1. கதாநாயகி 'ஸ்லீவ்லெஸ் ஜம்பர்' உடையில், எடுப்பான அங்கங்களில் எழில் பொங்க, அன்ன நடை நடந்து கல்லூரிக்குப் போய்க் கொண்டிருக்கிறாள். அப்போது இந்த உலகையே மறந்து கதாநாயகன் சிந்தனையில் மூழ்கி அவ்வழியே வந்து கதாநாயகியின்மீது மோதி அவள் புத்தகங்களைக் கீழே தள்ளி, அவளையும் கீழே தள்ளிவிடுகிறான. உடனே தன் நினைவுபெற்று 'ஸாரி' என்று சொல்லிவிட்டு அவள் தளிர்க்கரம் பற்றித் தூக்கிவிட்டு, புத்தகங்களையும் எடுத்துத் தருகிறான். அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் பார்த்த கனிந்த பார்வையில் காதல் பிறக்கிறது.

2. இதே காட்சியை இன்னொரு விதமாகவும் தயாரிக்கலாம். எதிரும் புதிருமாகக் கதாநாயகனும், கதாநாயகியும் சைக்கிள்களில் வருகிறார்கள். கதாநாயகி தன் சைக்கிளை எவ்வளவு வளைத்துத் திருப்பியும், கதாநாயகன் அவள் மீது மோதி விடுகிறான். அப்புறம் இருவருக்கும் சிறு வாக்குவாதம் நடக்கிறது. பிறகு காதல் பிறக்கிறது.

3. கதாநாயகி சைக்கிளில் வருகிறாள். ஒரு குழந்தையின் மீது ஏறி விடாமல் இருப்பதற்குத் தன் சைக்கிளைத் திருப்புகிறாள். கீழே விழுந்து விடுகிறாள். புடவைத் தலைப்பு சைக்கிள் சக்கரத்தில் சிக்கிக் கொள்கிறது. அவளால் அதை எடுக்க முடியவில்லை. அவ்வழியே போன கதாநாயகனை 'ஸார்' என்று அழைத்து 'ப்ளீஸ்'! என்று சிக்கலை விடுவிக்கும்படி கெஞ்சுகிறாள். அந்தச் சிக்கல் பூரிப்பான அவளது பருவ எழிலின் கவர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. சிக்கலை விடுவிக்கப் போனவன் அவள் அழகில் சிக்கிக் கொள்கிறான். பிறகு என்ன? காதல் பிறக்கிறது.

4. கொட்டும் மழையில் கதாநாயகி நனைந்து கொண்டே பஸ் ஸ்டாப்பில் தவிக்கிறாள். அப்பொழுது கதாநாயகன் காரில் வருகிறான். அவளைக் காரில் ஏறிக் கொள்ளச் சொல்லுகிறான். கதாநாயகி காரில் ஏறிக் கொள்கிறாள். கார் விரைகிறது. உடலோடு ஒட்டிய ஈர உடையுடன் அழகுச் சிலையாகக் கதாநாயகி குளிரில் நடுங்குகிறாள். காரை நிறுத்திக் கதாநாயகன் தன் கோட்டைக் கழற்றி அவள் மீது போர்த்தி அவளை ஆவலோடு பார்க்கிறான். காதல் பிறக்கிறது. —

''இப்படியே புடவைக் கடையில் பிறக்கும் காதல், சினிமாக் கொட்டகை வாசலில் சிலிர்த்தெழும் காதல், ரேஷன் கடையில் நேரும் காதல், பாதாளப் பாதையிலே பூக்கும் காதல், ரயில் பிரயாணத்தில் ரமிக்கும் காதல் என்று காதல் தோன்றும் விதங்கள் பலவற்றையும் பட்டியலாக்கி வைத்திருக்கிறேன். நமது படங்களின் திரைக்கதைப் போக்கை மனசில் வைத்துக் கொண்டு இந்தச் சம்பவங்களைப் புனைந்திருக்கிறேன்.''



எந்தக் காதல் நல்ல காதல்?

காந்தன்

"சபாஷ் டைரக்டர் சார்! பெரிய புடவைக் கடையிலே இருகவாரியாகப் புடவைகளை எடுத்துக் குவிப்பாங்களே, அந்தமாதிரியல்லவா ஐடியாக்களைக் கொட்டித் தீர்த்துப்பிட்டீங்க. பிரமாதம் போங்க. ஆனா ஒண்ணு. சைக்கிள் காதல், பாதசாரிக் காதல், கார்க் காதல், ரயில் காதல் என்றெல்லாம்தான் சொன்னீங்களே தவிர, அது ஜிரு ஜிரு காதலா அல்லது ஓஹோஹோ காதலா அல்லது பாம்பம் பரபரபாம்பம் காதலா என்பதை விளக்கவில்லையே !"

"ஓ. அதுவா ! மியூஸிக் டைரக்டரிடம் அதைப் பற்றிப் பேசிட்டாப்போச்சு. காதல் பிறக்கிறது எங்கேயானாலும் அது பொங்குவது பூங்காவனத்திலேதான். அதன் முடிவு முதலிரவுக் காட்சியிலேதான். இதையெல்லாம் மறந்துவிடுவேனா நான் ?"

"டைரக்டர் ஸார் ! எனக்கென்னவோ ஹஹ்ஹஹ்ஹ ஹஹா! ஹஹஹஹஹஹ்ஹா! காதலைவிட ஜிருஜிரு ஜிரு ஜிரு காதல் நல்லா இருக்கிற மாதிரி தோணுது. ஓசை நயம், 'டெபனெட்லி பெட்டர்! மியூஸிக் டைரக்டர் கிட்டே ஒரு வார்த்தை சொல்லுங்க இது பற்றி. அப்புறம் நம்ம கவிஞர் பொடி போடறதையே நெனைச்சுக்கிட்டுப் பாட்டிலே பொடி வைக்க மறந்துடப் போறாரு. அதையும் சொல்லி வையுங்க. காட்சியிலே கவர்ச்சியோடு இப்போதெல்லாம் பாட்டிலேயும் கவர்ச்சி தேவைப்படுது!"

"கவலையை விடுங்க. இப்பத்தான் கவிஞர் கவிதை கொடுத்துவிட்டுப் போனாரு. படிக்கலாமா?" என்று கேட்டுக் கொண்டே டைரக்டர் சட்டைப் பையிலிருந்து ஒரு தாளை உருவி எடுத்தார். படித்தார் :

" அங்கு தொட்டேன்! இங்கு பட்டேன்!
தொட்ட இடம்! பட்ட சுகம்!
ஆஹாஹா! ஓஹோஹோ! ஈ ஹி ஹி!"

"பலே!" என்ற படாதிபதி வெங்குவைத் திரும்பிப் பார்த்தார்.

"அடாடா ! இலக்கியத்தரம் வாய்ந்த இன்சொல் கவிதையாயிற்றே!" என்றான் வெங்கு/ தொடர்ந்து அவனே, "படத்திலே காதலைப் பொறுத்தவரையிலே இன்னும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் கவனம் செலுத்திட்டா போதும், கம்ப்ளீட் ஆயிடும் !" என்றான்.

"என்ன அது?" என்று படாதிபதி டைரக்டர் இருவருமே கேட்டனர்.

"அதுதான் 'பளார் ஸீன்!' கன்னத்தில் ஓர் அறை ! அதற்குக் காரணம் எதுவாக வேனுமானாலும் அமைச்சுக்கலாம். உதாரணமாகக் கதாநாயகி தன் அங்க எழிலைக் கண்ணாடியில் கண்டு களிக்கும்போது கதாநாயகன் அவளுக்குப் பின்னால் நின்று கொண்டு அவளுக்குத் தெரியாமல் அவள் அழகை ரசிக்கலாம். இதை அவள் கண்டு கொண்டு அவன் பக்கம் திரும்பிப் பெண் புலியைப் போலச் சீறி, அவனுடைய கன்னத்தில் பளீர் என்று அறைந்துவிட வேண்டும். ஒரு முக்கியமான விஷயம். சினிமாவிலே, கதாநாயகன் — கதாநாயகி இவர்களிலே யார் கன்னத்திலே அடி வாங்கிக் கொண்டாலும் அதற்குத் தனி விறுவிறுப்பு படம் பார்ப்பவர்களிடத்தில் ஏற்படும். இன்னும், தாயார் மகனை அறைவது, அண்ணன் தங்கையை அறைவது, முதலாளி நன்றியுள்ள பணியாளனை அறைவது ஆகிய எல்லாவித அறைகளுக்கும் என்றுமே திரையுலகிலே மவுஸ் உண்டு. ஆனால் எது எப்படிப் போனாலும் கதாநாயகி கதாநாயகனுக்குப் 'பளீர்' கொடுக்கிற காட்சிக்குத் தனி மவுஸ் உண்டு. கடைசியிலே அவன், 'என்னை மன்னிச்சிடுங்க!' என்று கண்ணீருடன் அவள் காலில் விழப் போவான். அவள் தடுத்துத் தாங்கிக் கொள்வாள். இதிலே காதலோடு இரக்க உணர்ச்சியும் ஏற்படும்."



" மார்வலஸ், வெங்கு! ரொம்ப நல்ல பாயிண்ட்! நான் ரொம்பவும் சிந்தனை பண்ணி என்னவெல்லாமோ குறித்து வைத்தேன். ஆனால் 'பளார் ஸீன்' ஒன்று தேவை யென்பது எனக்குத் தோன்றாமற் போய் விட்டதே !" என்றார் டைரக்டர்.

"காதல் காட்சிகள் நம்ம படத்தில் ரொம்பத் திருப்தியாக அமைந்து விட்டன!" என்றார் பட முதலாளி ஆனந்த பரவசத்துடன்.

வெங்கு வெள்ளி வெற்றிலைப் பெட்டியை மிகவும் பணிவோடு குழைந்தபடி அவரிடம் நீட்டினான்.

இருளரக்கியின் கன்னங்கரிய கூந்தல் அவிழ்ந்து கொண்டிருந்தது. ஏழாம் நாள் இரத்தப் பசியடக்கி ஏப்பம் விட்டாள் போர் அரக்கி! அஞ்சிய நிலையில் செஞ்சி மண் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது.

அரண்மனையில் கனக தீபங்கள் கண் விழித்தன. அங்குமிங்குமாகப் பாங்கியர் அரசியுடன் நடமாடினர். அவலத்தின் மடியில் தலை வைத்துக் கவலையின் காவியத்தைக் கண்ணீரால் எழுதிக் கொண்டிருந்தாள் யசோதரன் தேவி.

இன்னும் போர்க்களம் நோக்கிச் சென்ற கணவனைக் காணோம். என்ன செய்வாள்? செஞ்சோற்றுக் கடனால் வந்த நிலைதான் அது என்பது அவளறிந்ததாயிற்றே? இல்லையென்றால் அன்னியர் பக்கம் நின்று சொந்த மனிதர்களை எதிர்க்கும் மந்தபுத்தி நிலை இந்த மண்ணுக்கு ஏற்பட்டிருக்க முடியுமா?

பிஞ்சு காணா இளமையையும் கண்டு மரணப் பெருமூச்சு விட்டான் தளபதி யசோதரன். பின்னர், திக்கித் திணறிப் பேசத் தொடங்கினான்:

''தேவி! அழுகிற நேரமல்ல இது! தில்லி பாதுஷாவின் கட்டளையை நிறைவேற்றி வைக்க வேண்டிய நேரம் இது. என்ன செய்ய? கடனில் பெருங்கடன் செஞ்சோற்றுக் கடன்! புரிகிறதா, தேவி?''

''புரிகிறது பிரபோ, நன்றாகப் புரிகிறது.''

''மேலும் புரியச் சொல்லுகிறேன். கேள். நீயும் உன் உயிருள்ளவரை கடைசி மூச்சுவரை போராடி, அந்த மகாராஷ்டிர வீரர்களைப் புறமுதுகிடச் செய்ய முனைய வேண்டும். பிஜப்பூர் சுல்தான் நம் இனத்துக்கு அந்நியரானாலும், என்னை வளர்க்க பெருமைக்கு ஆளானவர். எனவேதான் அந்தக் கடமையாற்றும் நன்றியுள்ளவர்களாக நாம் நடந்து கொள்ள வேண்டும். ஒருவிதத்தில் நீ பெருமையடைய வேண்டும். உன் கணவன் ஒரு கோழையின் வாள் வீச்சால் வீர மரணம் அடையவில்லை. மாவீரரான சத்ரபதி சிவாஜியின் வீர வாள் பட்டு வீர சொர்க்கமடைகிறேன். அவரை எதிர்த்த வீரப் பெண்மணியாக நீயும் விளங்கவேண்டும்!''

''நிச்சயம்: விளங்குவேன், பிரபோ! இது சத்தியம்!''

தளபதி யசோதரனின் உயிர்ப் பறவை வானோக்கிப் பறந்தது. சுற்றிச் சூழ்ந்திருந்த வீரர்களின் முகத்தில் சோகம் படர்ந்தது. ஆனால் தொலைவில் நின்றிருந்த ஒரு வீரனுடைய கண்களில் மட்டும் நீர் சலசலவென்று வராக நதி போலப் பாய்ந்தது. அந்த வீரன் வேறு யாராக இருக்க முடியும்? சத்ரபதி சிவாஜிதான்! காரண காரியங்களை அறிய ஒரு சாதாரண சிப்பாய் வடிவம் தாங்கிப் பெரிய அமர்க்களத்திடையே கோட்டைக்குள் நுழைந்தார் சத்ரபதி சிவாஜி! அங்கே அவர் கண்டது?



அழகின் அடிமை

கோவி. மணிசேகரன்

இடிமென்று கோட்டைக்குள் சலசலப்புக் கண்டது. அரண்டு மருண்டு எழுந்த யசோதரன் தேவி, செய்தியறிய வெளிப்பட்டாள்.

தளபதி யசோதரன் போர்க்களத்தில் வீழ்ந்துபட்டான். குற்றுயிரும் குலையுயிருமாக அவனைத் தூக்கிக் கொண்டு அரண்மனையை அடைந்திருந்தனர் போர்வீரர்கள். இதயத்தைப் பிளக்கவல்ல செய்தி கேட்டு மயங்கி வீழ்ந்தாள் தேவி. அவளுக்கு மூர்ச்சை தெளிய வெகு நேரம் பிடித்தது.

''தேவி......!''

''......................!''

''தேவி!''

கணவனின் குரல் கேட்டு மெல்ல எழுந்தாள் தேவி. கண்ணீர் மல்க அருகில் வந்து நின்றாள். தொட்ட இடம் கவடுபடும் கட்டுக் கோப்பு நிறைந்த அவனுடைய சந்தனத் திருமேனியையும், சண்பக மலர் போன்ற மென்மை நிறைந்த அழகையும், சந்ததிக்குப்

செஞ்சோற்றுக் கடனாற்றிய ஒரு வீரத் திருமகனை! அடடா! பாரதத்தின் ரத்தமே! உன் பரிசுத்தம்தான் என்னே! வியப்பின் விளிம்பில் வீரத்தின் கூர்மை கண்டார் மகாராஷ்டிர தூய வீரர் சிவாஜி!

ஒற்றை விளக்கின் வெளிச்சத்தினடியில் ஓயாத சிந்தனைத் தவமியற்றிக் கொண்டிருந்தார் சத்ரபதி சிவாஜி. யசோதரன் ஒரு சுத்த வீரன்; அவனுடைய தரும

பத்தினியோ கற்பு நிறை காக்கும் காவியத் திலகமாய் விளங்குகிறாள்! இந்தத் தமிழ் மண்ணின் மகத்துவம் தஞ்சமடைந்தவரையும் தன்வயப்படுத்திக் கொள்ளும் போலும்!

"பிரபோ !......"

தளபதி ரகுநாதன் வெகு நேரமாகக் கூடார வாசலில் நின்றான், சத்ரபதியின் கவனம் வேற்றுத் திசையில் பயணமாகிக் கொண்டிருந்ததை அறிந்து மேலும் காத்திருக்கவொண்ணாது குரல் விடுத்தான்.

சிந்தனைத் தவம் கலைந்த சத்ரபதி சிவாஜி, மெல்லத் திரும்பி நோக்கினார். தளபதி ரகுநாதன் நின்று கொண்டிருப்பதைக் கவனித்து, "வெகு நேரமாக நின்று கொண்டிருக்கிறீர்களா, தளபதி?" என்று மரியாதையுடன் வினவினார். அவர் அப்படி மரியாதையுடன் வினவக் காரணம் இருந்தது. ரகுநாதன் தளபதியே யொழிய, ஒரு செல்வச் சீமான்; பிரபு! விருப்பமிக்க அவன் சிவாஜியின் சைனியத்தில் உரிமை வேட்கையின் காரணமாகப் பணி புரிய வந்தான்.

"அரை நாழிகைப் போதாகிறது, பிரபோ ?"

"என்ன விசேஷம் ?"

"நாளையப் போர் பற்றிய விளக்கங்களைக் கூறுமலேயே கூடாரம் நோக்கி வந்து விட்டீர்களே !"

"நாளைக்குப் போர் இல்லை."

"என்ன? நாளைக்கு—"

"நாளைக்கு மட்டுமல்ல; இன்னும் பதினைந்து தினங்களுக்குப் போரில்லை."

"காரணம் ?"

"யசோதரன் மாண்டு விட்டார் !"

"மாண்டு விட்டாரா ?" — ரகுநாதன் குரலில் எக்களிப்பின் எதிரொலி கேட்டது. அதன் உண்மை அப்போதைக்குச் சத்ரபதிக்குத் தெரிய வேண்டுமே! அது ஒரு நீறுபூத்த நெருப்பின் கதை !

ரகுநாதன் பேச்சைத் தொடர்ந்தான் : "பிரபோ ! யசோதரன் மாண்ட இந்தச் சமயத்தில் மேலும் தாக்குதல்களைத் தொடுத்தால்தான் செஞ்சிக் கோட்டையை எளிதில் பிடித்துவிட முடியும். இதை விட்டு நாம் கால தாமதம் செய்தால் பிறகு, இஸ்லாமியப் படைகள் மேலும் குவியத் தொடங்கி விடுமே !"

"பாதகமில்லை. பீஜப்பூரில் இருந்தோ, — தில்லியிலிருந்தோ உடனடியாகப் படை வந்து சேர இயலாத காரியம். அப்படி வந்தாலும் இந்த வழியாகத்தான் வரவேண்டும்; நம்மைத் தாண்டித்தான் செல்ல வேண்டும் !"

"போரை ஏன் நிறுத்த வேண்டும் என்று தான் எனக்குப் புரியவில்லை."



''புரியும்படி சொல்லுகிறேன் கேள் : நீ ஓர் இந்துவாகப் பிறந்தும் அதன் தருமத்தை நினையாமல் பேசுகிறாய். கணவனை இழந்த நிலையில் இருக்கிறாள் யசோதரன் தேவி. அவனுடைய சமக் கடன் முடியும் வரையில் நாம் காத்திருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.''

தளபதி ரகுநாதனுக்கு உண்மை புரிந்து விட்டது. மகாராஷ்டிர அரசரின் மிகப் பெரிய அறத்தைத் தாங்கிய நல்ல உள்ளத்தை ரகுநாதன் எப்போதோ புரிந்து கொண்டிருந்தான். அறத்துக்காக உயிரையும் தியாகம் செய்யக் கூடியவர் ; அது விஷயத்தில் கடுமையானவர் என்பன அவன் அறிந்தவையே ! இந்தக் கட்டம் மேலும் அவனுடைய வாய்மை நெஞ்சில் உயர்வை எழுப்பியது. அவன் விடைபெற்று வெளியேறினான்.

பக்கத்தில் சற்றுத் தள்ளியிருந்த தன்னுடைய கூடாரத்தை அடைந்தது முதல் அமைதியற்ற நிலையில் காணப்பட்டான் ரகுநாதன். அவனுடைய சிந்தனையில் பலவிதமான போராட்டங்கள்!

பொழுதும் விடிந்தது. இன்னும் பதினைந்து தினங்களுக்குப் போரில்லை என்ற செய்தியை வீரர்களுக்கு அறிவித்துவிட்டுக் கூடாரத்துக்குத் திரும்பினான் தளபதி ரகுநாதன். அவனுள்ளத்தில் யசோதரன் தேவி நர்த்தனம் புரிந்தாள்.

சில ஆண்டுகளுக்கு முன்னம் ரகுநாதன் பீஜப்பூருக்குச் சென்று தங்க வேண்டி நேரிட்டது. அப்போது ஒரு கலையரங்கின் நிகழ்ச்சியின் போது யசோதரன் தேவியைச் சந்திக்க நேர்ந்தது. தேவியின் கட்டழகில் கருத்தைப் பறிகொடுத்த ரகுநாதன், தான் ஒரு பிரபுகுமாரன் என்ற செல்வாக்கில் தேவியைச் சிறையெடுக்க முயன்றான். அந்த முயற்சி அவனுக்குப் படுதோல்வியைத் தந்தது. முடிவாக ஒரு நாள் தேவியையும், யசோதரனையும் விருந்துக்கு அழைத்தான். அதையே வாய்ப்பாகக் கொண்டு தன் கருத்தைத் தனித்த முறையில் தேவியிடம் வெளியிட்டான். கிடைத்த பலன் ?

காறியுமிழ்ந்த எச்சில்தான் !

இன்று வரைக்கும் அந்த நிகழ்ச்சி நெஞ்சிலிருந்து அகல வேண்டுமே! மகாராஷ்டிர சிங்கம் சத்ரபதி சிவாஜி, தமிழகத்தை நோக்கிப் பயணமான போது, செஞ்சியில் யசோதரன் தேவியைச் சந்திக்க முடியும் என்பது ரகுநாதன் கிஞ்சித்தும் எதிர்பாராதது.

இடையில் நடந்த கதையே வேறு.

சத்ரபதி சிவாஜி தமிழகப் போர்ப் பயணத்தை மேற்கொண்டு விட்டார் என்ற செய்தி தில்லி பாதுஷா ஔரங்கசீப்புக்குத் தெரிந்துவிட்டது. அப்போது தமிழகத்தில் முகமதியர்களுடைய ஆட்சி நிலைவிரித்தாடிய நேரம். அந்தப் பொல்லாத நேரத்தை முறியடிக்கப் புறப்பட்டு விட்டார் சத்ரபதி சிவாஜி.

அச்சமயம் செஞ்சியில் பிரதிநிதியாக இருந்து ஆண்டவன் அம்பர்கான். அவனுக்குச் சிவாஜி என்றால் சிம்ம சொப்பனம். இந்த நிலையில் அம்பர்கான், சிவாஜியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள நேரிடும் என்று முன்கூட்டியே தெரிந்து கொண்ட பீஜப்பூர் சுல்தான், தில்லிக் கட்டளையை மேற்கொண்டு தன்னுடைய நண்பன் யசோதரனை அனுப்பி வைத்தான். பீஜப்பூர் சுல்தான் எண்ணியது வீண் போகவில்லை. அம்பர்கான் பயந்தோடி விட்டான்..... யசோதரனோ, செஞ்சோற்றுக் கடனையாற்றி வீர சொர்க்கம் புகுந்து விட்டான்.

கிழக்கு வானில் நான்கு முறை கதிரவன் உதயம் கண்டான். ஐந்தாம் நாள் —

கூடாரத்தில் அலைமோதிய நிலையுடன் அங்குமிங்குமாக அடிபட்ட புலிபோலத் துடிபட்டுக் காணப்பட்டான் ரகுநாதன். ஆமாம்; நேற்று அவன் ஓர் ஓலை எழுதி, யசோதரன் தேவிக்கு அனுப்பி வைத்திருந்தான். அதில், இப்போதும் முன்பு ஏற்பட்ட அதே ஆசை கொஞ்சமும் தணியவில்லையென்றும், மனம் வைத்தால் இதே செஞ்சியைக் கணவன் மனைவியாக நின்று சுயாட்சியில் ஆளலாம் என்றும், வீணில் கைம்மை நோன்பு நோற்பதோ அல்லது கைவிலங்குடன் மகாராஷ்டிர வீரர்கள் மத்தியில் நிற்பதோ தேவையற்றவை என்றும் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தான். ஆனால் கிடைத்த பதில்?

ஓலையை இரண்டு துண்டாகக் கிழித்துத் திருப்பியனுப்பியிருந்தாள் யசோதரன்தேவி. அந்த அவமானம்தான் ரகுநாதனை எரிமலையாக்கிக் கொண்டிருந்தது. வெகுவாகத் தன்னையடக்கிக் கொண்டு மறு நாள் மீண்டும் ஓர் ஓலை எழுதினான் :

> ''தேவி, உன்னுடைய துக்க நிலையை உத்தேசித்துத்தான் சமக் கடன் முடியும் வரை போர் தொடுக்காமல் பார்த்துக் கொண்டு வருகிறேன். இதிலிருந்து என்னுடைய பெருந்தன்மையை நீ உணர்ந்தால் போதும். அழகு மலர்களைக் கூந்தலில் செருகி அணி செய்வதுதான் புத்திசாலித்தனம். இன்னும் ஒன்பது தினங்கள் இருக்கின்றன. நன்கு சிந்தித்துப் பதில் எழுதலாம். உன் 'அழகின் அடிமை.
>
> — **ரகுநாதன்''**

ஓலைக்கான மறு மொழி மறு தினம் கிடைத்தது :

> 'அழகு மலர்களைக் கூந்தலில்தான் செருகி அணி செய்ய வேண்டும் என்பதில்லை. ஆண்டவனுக்கு அர்ச்சித்தும் வழிபடலாம் அல்லவா? என் பிணத்தைக் கூட உன்னிடம் ஒப்படைக்கச் சொல்ல மாட்டேன். உன்னால் அந்த உத்தம மாவீரரான சத்ரபதியும்கூட, என் உள்ளத்தில் சிறப்பிழந்து போய்விட்டார். காமுகனாக என்னைச் சந்திப்பதைவிட, கர்மவீரனாக என்னைக் களத்தில் சந்திக்க முயலுவாய் என்று எதிர்பார்க்கிறேன்.
>
> **யசோதரன் தேவி'**

தளபதி ரகுநாதனின் சிந்தனையும், உணர்வும் தணலில் அகப்பட்ட மூங்கில் புதர்போல் வெடிபட்டன.

எல்லையில்லாத் துன்பங்களை இதயத்தில் புதைத்து, சமக் கடன்களை முடித்தாள் யசோதரன் தேவி. அன்றையப் பொழுது சாய்ந்து மறு நாள் உதயம் கண்டால் போர் முகம் நோக்கி அவள் புறப்பட்டாக வேண்டும். கணவருடைய குறிக்கோளை, செஞ்சோற்றுக் கடனை நிறைவேற்றியாக வேண்டும்! அதற்கான முன்னேற்பாடுகளைக் கவனித்திருந்தாள். அன்று படைவீரர்களைப் பார்வையிட்டாள். முக்காலும் முகமறிய வீரர்களே அந்தப் படையில் காட்சி தந்தனர். அவர்களுக்கான கட்டளைகளை விடுத்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பினாள். அன்றிரவு முழுதும் கண்மணிகளுக்கு மேல் இமைத் திரைகள் தழுவ வேண்டுமே! எப்படித் தழுவ முடியும்? "தாயே, சக்தி வடிவே! போரில் வெற்றி காண்பது என்பது உன் அருளால்தான் முடியும்! ஆனால் தோல்வி காண்பேனேயானால் என்னையும் வீர சொர்க்கத்துக்கு அழைத்துவிடு! பகைவர் முன்னிலையில் — அதிலும் அந்தப் பாதகன் முன்னிலையில் என்னைக் கைவிலங்குடன், காட்சியளிக்கச் செய்யாதே!"

யசோதரன் தேவியின் வேண்டுகோள் அந்த இறைவியின் திருச்செவிகளில் நிச்சயம் கேட்டிருக்க வேண்டும்!

மறு நாள் —

இருமுனைச் சேனைகளும் ஒரு முனையில் சந்தித்தன. செஞ்சிப் படைகளுக்கு மஞ்சள் இழந்த கொஞ்சுமொழிப் பாவை யசோதரன் தேவி தலைமை தாங்கினாள். அவள் ஆரோகணித்திருந்த கருநீலக் குதிரை கனைப்புக் குரல் விடுத்து, கம்பீரமாகக் களத்தை வலம் வந்தது. அவள் கையில் ஏந்திய வீர வாள் குருதிக் காவியமியற்றியது.

அவளுடைய அந்த வீரத்தைத் தொலைவில் நின்று கவனித்த சத்ரபதி சிவாஜி மெய்ம்மறந்து போனார். மனத்தளவில் பாரதப் பெண்மணிகளின் வீரத்தைப் பாராட்டியவண்ணம் கூடாரம் நாடிக் குதிரையைச் செலுத்தினார். போரில் பங்கு கொள்ள அவர் விரும்பவில்லை. ஒரு பெண்மணிக்கு நேரே வாள் பிடித்துக் களம் நோக்க அவர் விரும்பவில்லையோ, என்னவோ?

ரகுநாதன்தான் போர்க்களத்தில் பேயாட்டமிட்டான். எப்படியும் செஞ்சிப் படையை முறியடித்து, யசோதரன்தேவியை உயிருடன் சிறைப் பிடிக்க வேண்டும் என்பது அவனுடைய ஆசை; ஆகவே, வீராவேசம் கொண்டு வாளைச் சுழற்றினான்.

அந்தி சாய்ந்ததும் அன்றையப் போர் முடிந்தது. பெரும்பாலும் செஞ்சிப் படைகளுக்கே சேதம் கண்டிருந்தது. மகாராஷ்டிர வீரர்கள் நாளைப் போர் முகத்தில் வெற்றி விழிகளைத் திறந்துவிடுவோம் என்ற திடமான நம்பிக்கையுடன் எக்காளமிட்டனர். அவர்களுடைய அந்த நம்பிக்கை நிறைந்த எக்காளம் வீண் போகவில்லை.

மறு நாள் போர்க்களத்தில் அந்தி சாய்வதற்குமுன், கோட்டையைப் பற்றிவிட்டனர் மகாராஷ்டிர வீரர்கள். கோட்டையைப் பறிகொடுத்த யசோதரன் தேவி, உடலில் ஏற்பட்ட காயங்களில் குருதி வடியச் சிறைப்பட்டாள். அவளைச் சிறைப்



"உங்க பாய், தலையணை வியாபாரம் எப்படி நடக்கிறது?"

"படுத்துப் போச்சு!"

"அப்படின்னு இப்ப என்ன செய்யறீங்க?"

"அலாரம் டைம்பீஸ் வியாபாரம் பண்றேன்."

பிடித்த தளபதி ரகுநாதன் இனவெறி கலந்த காமச் சிரிப்புடன், "அழகைச் சிறைப் பிடித்தாக வேண்டும் என்ற முயற்சியால்தான் இந்தப் போர் இரு தினங்களாக நடைபெற்றன. அது தேவையில்லை என்று எண்ணியிருப்பேனேயானால், நேற்றே செஞ்சியின் கதையை முடித்துக் கொண்டு இராயவேலூர் நோக்கிப் பயணப்பட்டிருப்போம். தேவி! இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. நீயாக வருவாய் என்று எதிர்பார்த்தேன்; நானாக வரவேற்றுக்கொண்டேன்" என்று கூறிப் பக்கத்திலிருந்த சிப்பாயிடம் ஏதோ இரகசியமாகச் சொன்னான். அந்தச் சிப்பாயும் துணைக்கு இரண்டு வீரர்களை அழைத்துக்கொண்டு யசோதரன் தேவியை இழுத்துச் சென்றான். அப்போது அந்த இரண்டு வீரர்களில் ஒரு வீரனுக்கு ஏற்பட்ட துடிப்பை என்னவென்று சொல்வது? அவன் தன்னை அடக்கிக் கொண்டவனாய் யசோதரன் தேவியை மலங்க மலங்க நோக்கினான்.

வானத்தில் வைரமணிகள் கண் சிமிட்டும் நள்ளிரவில் நிலவு தாண்டவமாடியது. கோட்டையுள் ஒரே பேராரவாரம்.

அரண்மனையுள் சத்ரபதி சிவாஜி ஆலோசனையுடன் கூடிய கவலை நிறைந்த நடைபழகினார். சுற்றிலும் அளவுக்கு மீறிய வெளிச்சம்? ஏன் இத்தனை விளக்குகள்?

சற்றைக்கெல்லாம் அவ்விடத்தை நாடி ரகுநாதன் வந்தான். அவனுக்கு விளங்கவில்லை.



''எனக்கு 'வத வத'ன்று குழந்தைகளைப் பெற்றிருப்பவர்களைக் கண்டால் கட்டோடு பிடிக்காது!''

வெற்றி கண்ட பிறகு நள்ளிரவு ஆலோசனை ஏன்? ஒருவேளை, தன்னிடம் தனியான நன்றி செலுத்தத் தலைவர் அழைத்து வரச் சொன்னாரோ?

''வணக்கம் பிரபோ!''

''வாருங்கள் ரகுநாதரே! இப்படி அமருங்கள். உங்கள் வெற்றியை நள்ளிரவில் பாராட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதனால்தான் அழைத்து வரச் சொன்னேன்.''

''மெத்த மகிழ்ச்சி பிரபோ!''

சிவாஜி பொருள் நிறைந்த சிரிப்பொன்றை உதிர்த்தார். ''ரகுநாதரே! அந்தப் பரிதாபத்துக்குரிய கைம்பெண் யசோதரன் தேவி என்னவானாள்?''

ஒரு கணம் ரகுநாதனுடைய முகத்தில் விறிப்பு விளையாடியது. ஆயினும் அதனை வெகுவாக மறைத்துக் கொண்டு, ''போர்க்களத்தில் மாண்டுவிட்டாள்போல் தெரிகிறது, பிரபோ!'' என்றான்.

''அப்படியா? நீங்கள் கவனிக்கவில்லை?''

''இல்லை.''

''அது குற்றமல்லவா?''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. எனக்குத் தோன்றியது வெற்றி ஒன்றுதான்!''

''இது உன்னால் கிடைத்தது என்று நினைக்கிறாயா? ஒரு சாதாரணச் சிப்பாய் கூட, சிவாஜியின் படைக்குத் தலைமை தாங்கும் தகுதி யுடையவன் என்பதை மறந்துதான் பேசுகிறாயா?''

ரகுநாதனுக்குப் பொறி கலங்கி விட்டது.

சிவாஜி மேலும் சொன்னார்: ''ரகுநாதா! தோல்வி கண்டு திரும்பும் ஒரு படையின் தளபதியைக் கூட நான் மன்னித்துவிடுவேன். ஒரு பெண்ணின் பாவத்தைச் சுமக்கு மளவுக்கு அறம் வழுவிய தளபதியை என்றும் மன்னிக்க முடியாது.''

விருட்டென்று எழுந்த சத்திரபதி சிவாஜி நேரே தனியறை யொன்றுள் நுழைந்தார். சற்றைக்கெல்லாம் யசோதரன் தேவியும், களத்திலே துயரத் துடிப்புக் கண்ட அந்த வீரனும் வெளிப்பட்டனர். அவர்களைக் கண்ட தளபதி ரகுநாதன் அரண்டு மருண்டு போனான். ''நீயா! நம்பியவனைக் காட்டிக் கொடுக்கலாமா?''

வீரன் விசித்திரமாகச் சிரித்தான்.

மேலும் அரண்டான் ரகுநாதன்.

''ரகுநாதா! நான் யாருக்குக் காட்டிக் கொடுத்தேன்? நீதான் உன்னை எனக்குக் காட்டிக் கொடுத்தாய்!'' என்று கூறிய வண்ணம் சிப்பாயின் புனைவடிவத்தைக் கலைத்து வெளிப்பட்டார் சத்ரபதி சிவாஜி!

அடுத்த கணமே ''பிழை பொறுத்தருள வேண்டும் பிரபோ! காமுகனாய் — கண்ணிழந்தவனாய் — கசடனாய் நடந்து கொண்டேன்!'' என்று கூறிய வண்ணம் அட்டாங்கமும் நெட்டாங்கமாய்த் தரையில் படவிழுந்து பணிந்து எழுந்தான் தளபதி ரகுநாதன்.

''அனைத்தும் அறிவேன், ரகுநாதா! அறிந்துதான் இந்த நாடகம் ஆடினேன். இந்துக்கள் தெய்வத்தை வணங்குவதாய்ச் சொல்லும்போது வேடதாரிகளாகி விடுகிறார்கள். உனக்கு இந்தத் தெய்வக் குற்றத்துக்கான தண்டனையை வழங்கப் போகிறேன்!''

''ஏற்கச் சித்தமாக இருக்கிறேன் பிரபோ!''

''நாளைமுதல் நீ எந்த அழகுக்கு அடிமையாக ஆசைப்பட்டாயோ, அந்த அழகுக்கே உண்மையான அடிமையாக்குகிறேன். யசோதரன் தேவியின் இந்தப் போர்க்காயங்கள் ஆறும்வரை நீ குற்றேவல் புரிந்து அடிமையாகப் பணி செய்து என் அழைப்புக்குப் பிறகு திரும்ப வேண்டும். இடையில் உன் காமுகச் செயல் தலைதூக்குமானால்—அப்படித் தூக்காமலிருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன் — ஒருவேளை நிகழுமானால்... செஞ்சிக் கோட்டையிலே உன்னுடைய தோலுரித்த உடல் தொங்கவிடப்படும்! நீ செய்த குற்றத்துக்கு இந்தக் கழுவாய் மிக எளிதானது!''

சிவாஜியின் கண்கள் யசோதரன் தேவியை நோக்கின. ''தாயே! செஞ்சியை உங்களிடமே ஒப்படைக்கிறேன். தில்லிக்கு அடிமையாகவல்ல; என் பார்வையின் கீழ் சுதந்திரமாக ஆள! நான் ராயவேலூர் விடுதலை நோக்கி நாளைக் காலை பயணமாகிறேன். விடை கொடு தாயே!''

''அண்ணா!'' என்றாள் யசோதரன் தேவி. இதயத்தின் அடித்தளத்தில் ஓர் இந்து மகளின் பாசம் சுரக்க. அவளுடைய கரங்கள் கூப்பி நின்றன. கண்ணிமைகளில் ஆனந்த நீர்த் திவலைகள்!

எதிரே—

கைகட்டி, வாய் புதைத்துத் தலை குனிந்து நின்றான் அழகின் அடிமை ரகுநாதன்.


YOUR FAVOURITE SOAP
IN ITS NEW SHAPE AND DESIGN.
ITS QUALITY, WEIGHT
AND PERFUME ARE UNCHANGED.
MYSORE
SANDAL SOAP
MADE IN INDIA
MYSORE Sandal SOAP
GOVERNMENT SOAP FACTORY, BANGALORE
MYSORE GOVERNMENT SOAP FACTORY BANGALORE-12.

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

SAS-GR 26 A

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda

'கிளாஸ் டு கிளரிக்கல்'

கே. எஸ். ஆனந்தன்

அவசரப்பட்டு ஓடி வந்த சாம்பமூர்த்தியைத் தடுத்து நிறுத்திய காமாட்சியம்மாள், ''என்னங்க, எதுக்காக இப்படி ஓடி வாறீங்க?'' என்று தினமும் பாடும் பல்லவியில் சில சுரங்களைச் சேர்த்து மாத்திரையைக் கூட்டி ஒலித்தாள்.

''ஏண்டி மனுசன் வருகிறதிலிருந்தே தெரியவில்லையா? வனஜாவைப் பெண் பார்க்க வாறாங்களாம். தரகர் இப்பத்தான் சொன்னாரு. மாப்பிளை கிளாஸ் டு கிளரிக்கலாம்.''

நல்ல செய்தியைக் கூறியதால் வழக்கத்தைவிடச் சற்றுத் துணிச்சலாகவே கணவன் என்ற உரிமையுடன் கூறினார் சாம்பமூர்த்தி.

''மாப்பிள்ளை கிளாஸ் டு கிளரிக்கலா?''


''ஆமாண்டி, ஆமா!''

மார்பைப் பார்த்துக் கொண்டார் சாம்பமூர்த்தி. ''என்ன இருந்தாலும் நீங்கள்....''

கணவனை அன்பு பொங்கப் பார்த்தாள் காமாட்சி.

கல்யாணமான புதிதில் காமாட்சி அப்படிப் பார்த்திருக்கிறாள். அதற்கப்புறம் இன்றுதான் அந்தப் பார்வையைக் கண்டார் சாம்பமூர்த்தி. உள்ளம் கிளுகிளுக்க, ''ஏன், காமாட்சி! சொல்ல வந்ததைப் பாதியிலேயே நிறுத்திட்டியே! இந்த நிலையிலே உன்னை நான் பார்த்து எத்தனை ஆண்டுகளாச்சு, தெரியுமா?'' என்றார்.

''போங்க. உங்க பெண் எங்கேயாவது மூலை முடுக்கில் ஒளிந்து நின்று கொண்டிருக்கப் போறா!'' என்று காமாட்சி கூறி முடிக்கவில்லை; வனஜா குதித்தோடி வந்தாள்.



பதினேழு வயது நிரம்பாத பருவம். அவள் உடல் வனப்பும், எழிலும் பார்ப்போரைக் கிறங்க வைக்கும் தன்மை பெற்று விளங்கின.

''போம்மா! தினசரி இப்படித்தான் யாராவது பெண் பார்க்க வராங்க. நான் என்ன காட்சிப் பொருளா?'' என்று சிணுங்கினாள் வனஜா.

மகளின் பேச்சைக் கேட்டுச் சிரித்தபடியே அவள் தலையை வருடிவிட்ட காமாட்சி அம்மாள், ''நீ அதிர்ஷ்டக்காரியடி, வனஜா. இன்று உன்னைப் பெண் பார்க்க வரப்போகிறவர் கிளாஸ் டு கிளரிக்கல்!'' என்றாள்.

வனஜாவுக்கு வானத்தில் பறப்பது போன்ற பிரமை.

கிளரிக்கல் உத்தியோகத்துக்கு அளிக்கப்படும் சம்பளமே பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இலங்கை அரசாங்கம் பாடசாலைகளை ஏற்றுக் கொண்டபின் எல்லாருமே அரசாங்க உத்தியோகஸ்தர்கள்தான். இருந்தாலும் கிளரிக்கலில்தான் பெண்களுக்கு ஒரு சபலம்! அதாவது உத்தியோகம் உயர்ந்தது என்று எண்ணம்.

''கிளாஸ் டு கிளரிக்கல்லுக்கு என்ன அம்மா சம்பளம் இருக்கும்?''

''முந்நூறுக்கு மேலே இருக்குமாம். சபாபதி பெண்டாட்டி சொன்னாள். அவளுடைய மருமகன் 'கிளாஸ் டு' சோதனை எடுத்தவராம். பெரியதாகப் பெருமையடித்துக் கொண்டாள். ஆனால் ஆளுக்குப் பென்ஷன் வாங்குகிற வயதாகுது!'' என்று சிரித்தாள் காமாட்சி அம்மாள்.

வனஜாவின் எண்ணங்கள் விரிந்து பரந்து கொழும்பிலும், தெஹிவளை கடற்கரையிலும், மற்றும் பல இடங்களிலும் கணவனுடன் சஞ்சாரம் செய்து விட்டுச் சில நிமிட நேரங்களில் மீண்டும் பழைய நிலைக்கு வந்த பொழுது மாப்பிள்ளை வீட்டார் வந்து விட்டதாகச் சாம்பமூர்த்தி கூறினார். வனஜாவின் உள்ளம் துள்ளிக் குதித்தது. தாய் மகளை அழைத்துச் சென்று வந்திருந்தவர்களுக்கு வணக்கம் கூறும்படி சொன்னாள். வணக்கம் கூறி நிமிர்ந்து பார்த்தால் வாட்டசாட்டமான உடலும், நல்ல நிறமும், அழகான முகமும், எளிமையான தோற்றமும்

பார்க்கப் பார்க்க மனம் பூரித்தது. அவனுக்குப் பக்கத்தில் கறுப்புக் கால் சட்டையும் டெரிலின் சட்டையும் அணிந்து வழுக்கைத் தலையுடன் இருந்தவர் குனிந்து அவன் காதுக்குள் ஏதோ கூறியதும் இலேசாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பில்தான் எத்தனை கொள்ளை அழகு! மாப்பிள்ளையின் நண்பராயிருக்கலாம் என எண்ணினாள் வனஜா.

மாப்பிள்ளை வீட்டார் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினர்.

''உங்க தங்கை மகன்தான் மகராஜன் மாதிரி என்கிறீர்களே. இந்தப் பையனைப் பார்த்தீர்களா, மூக்கும் முழியுமாய்?'' என்றாள் காமாட்சி அம்மாள்.

''யாரைச் சொல்லறே? டெரிலின் சட்டைக்காரனா மாப்பிள்ளைப் பையன்?'' என்றார் சாம்பமூர்த்தி.

''டெரிலினா மாப்பிள்ளை? முப்பத்தைந்து நாற்பது வயதிருக்கும் போலிருக்கே!''

''கிளாஸ் டு கிளரிக்கல் என்றால் என்ன பதினெட்டு வயதுப் பையன் என்று நினைச்சியள்? எட்டுப் பத்து வருடங்களுக்குப் பின்புதானே இந்தப் பதவிக்கே வர முடியும்? உங்களுக்கு மாப்பிள்ளையும் திறமாய், உத்தியோகமும் திறமாய்......''

''அப்பா! 'கிளாஸ் டு கிளரிக்கலை'க் காட்டிலும் அத்தானே தேவலாம்!'' என்றாள் வனஜா.

பெற்றவர் முகத்தில் புன்முறுவல் பூத்தது

குக்கர் எதற்கு? வைக்கோல் போதும்!

இன்று அமிதமாக விலையேறிப் போயிருக்கும் சமயத்தில் குக்கர் செய்யும் காரியத்தைச் சாதாரண வைக்கோல் செய்கிற தென்றால் அது ஆச்சரியந்தானே? சமைத்துப் பார்க்கலாம்!

சமையலுக்குச் செலவிடும் மண்ணெண்ணெயில் மிச்சம் பிடிக்க வேண்டுமா? விலையுயர்ந்த பிரஷர் குக்கர் இல்லையே என்று ஏங்குகிறீர்களா? குக்கர் தேவையில்லை! அடுப்பில் அல்லது ஸ்டௌவில் சாதம் கொதிக்கும் போது அடுத்த வீட்டுப் பெண்மணியோ, விருந்தாளியோ வந்துவிட்டால், சாதம் பதமாகிக் கஞ்சி வடிக்கும்வரை அவர்களுடன் நிம்மதியாகப் பேச முடியாதே என்று கவலைப் படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! இதோ, உங்கள் பிரச்னை தீர ஒரு வழி:

அரிசியைக் களைந்து உலைநீரில் போட்ட பின், ஒரு கொதி வந்தவுடனேயே அடுப்பை அல்லது ஸ்டௌவை அணைத்து விடுங்கள். ஒரு பருக்கையைக் கூடப் பதம் பார்க்க வேண்டாம். ஒரு பெரிய பாத்திரத்தின் - அது டின்னாகவும் இருக்கலாம். உட்புறம் சுற்றிலும் வைக்கோலைப் பரப்பி, - கண்ணாடிப் புட்டிகள் உடையாமல் இருக்கச் சுற்றிலும் வைக்கோல் போர்வை போர்த்துகிற மாதிரி — அடுப்பிலுள்ள சாதப் பாத்திரத்தை இறக்கி அதற்குள் வைத்துவிட்டு வாயை இறுக மூடி விடுங்கள். அரை மணி நேரத்துக்குப் பின் திறந்து பார்த்தால் சாதம் பொல பொலவென்று பக்குவமாக இருக்கும்! 'மாஜிக்' போல இருக்கிறதா? எல்லாம் இந்த வைக்கோல் செய்கிற வேலைதான்!

குக்கரில் சமைப்பதா யிருந்தால் கூட, சாதம் பக்குவமான பிறகுதான் அடுப்பை அணைக்க முடியும். இம்முறையில் சமைத்தால் அவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டாம். வைக்கோல் பரப்பிய பாத்திரத்தில் சாதம் சமைக்கும் பாத்திரத்தை இறக்கி வைத்து மூடிவிட்டு நீங்கள் மற்ற வேலைகளைக் கவனிக்கலாம். நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் வீதம் வாரத்துக்கு ஏழு மணி நேரம் ஸ்டௌ அல்லது அடுப்புக்குச் செலவாகும் எரிபொருள் மிச்சம். கஞ்சி வடிக்கவே தேவையில்லை. தண்ணீரை அளவாக வைத்தால் போதும். இம்முறையில் தயாராகும் சாதம், கஞ்சி வடிக்கப்பட்ட சாதத்தை விட உடம்புக்கும் நல்லது. நேரமும் மிச்சமாகும். ஏன், செலவும் மிச்சம்தானே? இம்முறையில் பருப்பும் வேக வைக்கலாம்; அரிசி உப்புமாவும் செய்யலாம் — சிக்கனமாக.

— ருக்மிணி பாலகிருஷ்ணன்




ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

ஸ்தாபிதம் : 6 - 1 - 1947

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : திருநெல்வேலி - 6 (போன் : 274)
மத்திய அலுவலகம் : 61B, உஸ்மான் ரோடு, தி. நகர், மதராஸ்-17
(போன் : 442916)

31 - 3 - 1967 அன்று அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 5,00,000
சீட்டில் சடுபடுத்திய தொகை : 2.30 கோடி
மொத்த ஆஸ்திகள் : 1.23 கோடி

கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க் அல்லாத நிதி கம்பெனிகள் டிபார்ட்மெண்ட், 29-10.66ல் வெளியிட்ட நோட்டிபிகேஷன் DNBC-I/ED (s), பாரா 2 (i) (f)ன் ஸப் க்ளாஸ் (x)ன்படி காரண்டீ செய்த லோன் வாங்கப்படுகின்றன.



1. நடப்புக்கால ஆஸ்திகள்	ரூ.	1,00,76,438-71
2. பாங்கிகளில் உள்ள ரொக்கம்	ரூ.	12,07,833-13
3. கடன்கள், அட்வான்ஸுகள்	ரூ.	8,28,343-62
4. ஸ்திர ஆஸ்திகள்	ரூ.	2,10,118-29
5. முதலீடுகள், பங்குகள் மற்றும் அரசாங்க செக்யூரிடிகள்	ரூ.	15,413-19
மொத்தம்	ரூ.	1,23,38,146-94

தவணை	வட்டி விகிதம் ரூ. 300-லிருந்து ரூ. 5,000 வரை	ரூ. 5,000க்கு மேல்
ஒரு வருடம்	**8½%**	**9%**
இரண்டு வருடம்	**9%**	**9½%**

தொழில் விபரம்

தினசரி, மாதம் மும்முறை, மாதம் ஒரு முறை உள்ள ஏலச் சீட்டுகள் நடத்துதல், ரூ. 10,000 வரை மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 26 ஆபீஸ்களில் நடத்தப்படுகின்றன.

கம்பெனி நிர்வாகம்

மானேஜிங் டைரக்டர் :
ஸ்ரீ AR. ராமஸ்வாமி

டைரக்டர்கள் :
ஸ்ரீ M. A. M. கோவிந்தன் செட்டியார்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி

மத்திய அலுவலக மானேஜர் :
ஸ்ரீ K. A. ராம், பி. ஏ., பி. எல்.

கடந்த மூன்று வருடங்களின் ஆதாயமும், டிவிடெண்டு விவரமும் :

வருடம்	வரி கொடுப்பதற்கு முன் லாபம்	வரி கொடுத்த பின் லாபம்	டிவிடெண்டு விகிதம்
1964 - 65	41825 - 20	14295 - 70	12%
1965 - 66	61908 - 72	25170 - 72	13%
1966 - 67	79686 - 41	27686 - 41	16%

பொறுப்புகள் : 31-3-1967

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	1,02,966
ரிசர்வ் நிதி	ரூ.	31,458
பிக்ஸட் டிபாஸிட்டுகள்	ரூ.	7,80,364
ஷேர் ஹோல்டர்ஸ் டிபாஸிட்டுகள் :	ரூ.	1,00,500
காரண்டீட் லோன்ஸ்	ரூ.	1,69,275
டெம்பொரரி லோன்ஸ்	ரூ.	70,156
சீட்டு, இதர பொறுப்பு வகைகள்		1,10,83,428
மொத்தம் :	ரூ.	1,23,38,147

ஒவ்வொரு மாதமும் M குரூப் சீட்டுகள் ரூ. 25,000 ஆரம்பிக்கப்படுகின்றன, மாதம் ரூ. 1,250 வீதம் 20 தவணைகள்.

ஏலங்கள் வழக்கம்போல் எங்கள் **திருச்சி** கிளையில் நடைபெறும்.

தணிக்கை செய்யப்பட்ட பாலன்ஸ் ஷீட்டுகள் விரும்புகிறவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அனுமதித்த தேதி : 27 - 12 - 1967 AR. ராமஸ்வாமி, மானேஜிங் டைரக்டர்

Paramount

ராமானந்த சாட்டர்ஜியின் ஜாகையைச் சேர்ந்த முன் வராந்தாவில், சாட்டர்ஜியும் பல்தேவ் சிங்கும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

சாட்டர்ஜி: மிஸ்டர் சிங்! நேற்று சாயங்காலம் பஸ்ஸிலே வந்து கொண்டிருந்தபோது உங்களை எஸ்பிளனேட் பக்கம் பார்த்தேன். கையிலே என்னவெல்லாமோ பாக்கெட்டுகளாக அடுக்கிக் கொண்டு நடந்தீரே..!

பல்தேவ்சிங்: ஆமாம், ஆமாம், சாட்டர்ஜி சார்! அந்தப் பக்கத்திலே சாமான்கள் கொஞ்சம் மலிவாகக் கிடைக்கிறது! ஹோல்சேலா வாங்கிப் போட்டா இந்தப் பெண் பிள்ளைகளுக்குக் கொஞ்சம் திருப்தியாக இருக்கும்...

(பேராசிரியர் நீலகண்டன் வேகமாகக் கையை வீசிக் கொண்டே வருகிறார்.)

நீலகண்டன்: ஏனையா சாட்டர்ஜி! அரசியல் சட்டத்திலே பொதுவாகப் பிரஜை என்றுதானே குறிப்பிடுறு? ஆண்களுக்கு ஒருவித சட்டம், பெண்களுக்கு ஒருவிதச் சலுகை என்று ஒன்றும் கிடையாதே?... உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?

சாட்டர்ஜி: வாங்கோ, வாங்கோ. நீலகண்டஜீ! ஏதாவது 'ரிட்-பெட்டிஷன்' போடறதாக உத்தேசமா?

நீலகண்டன்: எனக்கு எதிரா நானே ஒரு ரிட் மனு தாக்கல் பண்ணிக்கலாம்னு நினைக்கிறேன்!.... 'இந்த நீலகண்டன் இனிமேல் தன் வீட்டுப் பெண் பிள்ளைகள் சொல்படி ஆடக் கூடாது' என்று நானே ஒரு 'ரிட்' போடப் போகிறேன்.

பல்தேவ்சிங்: ஏன்? உங்களை இந்த வயசுக்கு மேலே பரதநாட்டியம் கற்றுக் கொள்ள உங்க வீட்டிலே 'கம்பெல்' பண்றுங்களா?

நீலகண்டன்: போதுமையா கிண்டல் சாட்டர்ஜீ! நீங்க என்ன சொல்றீங்க?

சாட்டர்ஜி: நான் ஜட்ஜாக வந்து உட்கார்ந்தால் உம்ம 'ரிட்டை' அட்மிட்டே பண்ண மாட்டேன்.

நீலகண்டன்: நல்லவேளை! நீர் இங்கேதான் உட்கார்ந்திருக்கிறீர்! நல்ல ஆளையா! நீர் இப்படிப் பயப்படக் கண்டுதான் உம்ம மாமியார் உம்மை ஓட ஓட விரட்டுகிறாள்.

பல்தேவ்சிங்: புரொபஸர் சார்! நீங்க இப்ப ஓடிக்கிட்டு இருக்கீங்களா? யார் துரத்துகிறார்கள்?

நீலகண்டன்: பேசப்படுமா? நான் உட்கார்ந்துவிட்டேன். (உட்காருகிறார்) விரட்டற வாளே ஓடிக் கொண்டு இருக்கட்டும்!

சாட்டர்ஜி: உங்களுடைய வேகத்துக்குக் காரணத்தைச் சொல்லவில்லையே?

நீலகண்டன்: அப்படிக் கேளும். நகை பண்ணுகிற பொற்கொல்லரிடம் என் மனைவியும் மகளும் வீட்டிலிருந்த பழைய தேய்ந்து போன பொட்டுப் பொடி நகைகளையெல்லாம் பொறுக்கிக் கொடுத்துட்டாங்க.

பல்தேவ்சிங்: பழைய துணி போட்டு வாங்கறப்போலே இதற்கும் எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்கிட்டாங்களா?

நீலகண்டன்: நல்ல கேள்வி கேட்டீர்!... இன்னும் கொஞ்ச நாள் போனால் அதைக் கூடச் செய்வாங்க! இப்போ அதைச் செய்யலே!... புது நகை பண்ணக் கொடுத்தாங்க.

சாட்டர்ஜி: இதிலே என்ன தவறு!

நீலகண்டன்: என்ன தவறா? கொடுத்ததுபோல வாங்கறதுக்குச் சாமர்த்தியம் இல்லேயே!... நான் போய் வாங்கணுமாமே!... அதனாலேதான் நான் அரசியல் சட்டத்தைப் பற்றிப் பேசறேன்! கொடுத்த சமர்த்தைப் போல வாங்கறதுதானே!...



பல்தேவ்சிங்: உங்களை 'ஹெல்ப்' பண்றதுக்குத்தானே கூப்பிடறுங்க?

நீலகண்டன்: நகை பண்ணற ஆசாரிகள் எல்லாம் கலைஞர்கள்! அவங்களுக்கு 'மூட்' வர்றபோதுதான் வேலை செய்வாங்க! அவங்களைப் போய்த் தொந்தரவு செய்யலாமோ?

சாட்டர்ஜி: நம்ப அவசரத்தை வற்புறுத்தினால்தானே அவங்களுக்கு 'மூட்' வரும்?

நீலகண்டன்: நகை பண்ணி வந்தவுடனே தானு ஐயா மாட்டிக் கொள்ளப் போறேன்! என்னைக் கேட்டா அவங்க பண்ணக் கொடுத்தாங்க?... இப்போ நான் போய்க் கேட்டு வாங்கணுமாம்!

பல்தேவ் சிங்: என்ன இருந்தாலும் நீங்க உங்க வீட்டுப் பெண்பிள்ளைகள் மீது இப்படி

ஆத்திரத்தைக் காண்பித்துக் கொள்ள வேண்டாம்.

நீலகண்டன்: அன்பையும் காண்பித்துத் தீர்த்தாயிற்று. நாலு தட்வை நானும் அந்தப் பொற் கொல்லருக்கு ஞபைகப்படுத்தியாச்சு. 'நாளைக்கு வாங்க'ங்கிற பதில்தான் மிச்சம். ஆனால் இதை நான் வீட்டிலே சொல்லலே! சாட்டர்ஜி! உமக்கு ஒரு கர்ணபரம்பரைக் கதை தெரியுமா?

சாட்டர்ஜி: சொல்லுங்கோ, கேட்கிறேன்.

நீலகண்டன்: ஓர் ஆச்சார்ய புருஷர். எல்லா சாஸ்திரங்கள், வித்தைகளையும் கற்றுக் கொண்டு விட்டார். இந்தப் பொற்கொல்லர் கலை மாத்திரம் பாக்கி. அதற்காக ஒரு கலைஞரைத் தம் ஆசிரமத்துக்கு வரச் சொல்லி அனுப்பினர்.

சாட்டர்ஜி: அப்புறம்?

நீலகண்டன்: கலைஞர் வந்தார். அவர் வந்தபோது குருதேவர் பூஜையிலிருந்தார். 'நாளைக்கு வா' என்று அனுப்பினர். மறு நாளைக்குப் பொற் கொல்லர் வந்தபோது, குருதேவர் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். 'நாளைக்கு வா' என்று அனுப்பினர். இப்படித் தொடர்ந்து ஐந்தாறு நாட்கள் நடந்தன. கடைசியில் ஒரு நாள் குருதேவர் அவகாசம் கிடைத்துப் பொற் கொல்லரைச் சந்தித்தார்.

பலதேவ்சிங்: உடனடியாக வகுப்பு ஆரம்ப மாயிற்று?

நீலகண்டன்: நோ! நோ! பொற்கொல்லர் அந்த மகான் காலில் விழுந்து எழுந்தார். 'சுவாமி! நீங்கள் எங்கள் கலையின் பிரதான பாகத்தைக் கற்றுக் கொண்டு விட்டீர்கள்' என்றார். குருதேவர் திகைத்தார். "நாளைக்கு வாருங்கள்" என்று சொல்லுவது எங்கள் கலைக்கு முக்கிய வலு. அதைத்தான் தாங்கள் கடந்த சில தினங்களாகச் சொல்லிக் கற்றுக் கொண்டு விட்டீர்கள்" என்



றாராம்!... இந்த ரீதியிலே நான் போய் அலையணும் என்று மன்றாடினால் நான் போவேனு?... போய் நடக்கட்டுமே...?

சாட்டர்ஜி: ஜட்கா வண்டிக் குதிரை என்றால் அதன் கடமை ஜட்கா இழுப்பது தானே?... ஜாக்பாட் குதிரைன்னு நினைத்துக்கொண்டு ரேஸிலே போய் ஓட முடியுமா?.. குடும்பஸ்தன் என்றால் குடும்பத்தைக் கட்டி இழுப்பவன். குடும்பத்தோடு குஸ்தி போடு பவன் இல்லையே!

நீலகண்டன்: மிஸ்டர் பலதேவ் சிங்கும் தலையை ஆட்டிவிட்டார் ஆமோதிக்கும் வகையில். கன்யாலாலைக் காணும்! அவர் இருந்தாலும் உங்க கட்சியிலேதான் அவர் சேருவார்!

பலதேவ்சிங்: கடைசியிலே நீங்களும், 'ஃப்ளோர் கிராஸ்' பண்ணி எங்க பக்கத்துக்கு வந்துடுவீங்க!

(கன்யாலால் வேகமாக வந்து நீலகண்டன் பக்கமாக நிற்கிறர்.)

கன்யாலால்: நீலகண்டன்ஜீ! ஒரு ரகசியம்! துணிகளுக்கு நல்லபடியாகச் சாயம் போட்டுக் கொடுப்பவன் யாராவது இருந்தால் சொல்லுங்களேன்! ரொம்ப அர்ஜண்ட்.

நீலகண்டன்: சலவைக்குத்தான் அர்ஜண்ட், ஆர்டினரி பிரிவுகள் உண்டு. சாயம் போடறதுக்கு அப்படி ஏதும் இருக்கிறதா தெரியலே! அப்புறம் இதற்கு ஏன் இவ்வளவு ரகசியமும் பதற்றமும்?... துணியிலே போகிறது என்பது பகிரங்கமாகத்தானே போகும்?

கன்யாலால்: இதிலே அர்ஜண்டும் இருக்கு, ரகசியமும் இருக்கு, புரொபஸர்ஜீ! என் சம்சாரம் ஒரு புடவை வாங்கிக்கொண்டு வந்தாள். புடவை பத்திரமாக இருக்கிறது. சாயம் மாத்திரம் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போய் விட்டது. இப்போ அந்தப் புடவையைக் கடையில் கொண்டு போய்த் திருப்பிக் கொடுத்து வேறு புடவை வாங்கி வரச் சொல்லி என்னை ஏவுகிறள். கடையில்

போய்க் கம்ப்ளெயிண்ட் பண்ண எனக்குத் தயக்கமாக இருக்கிறது. அதற்காகத்தான் இந்தச் சாய பிஸினஸ்!...

நீலகண்டன்: நல்ல ஆளையா, உம் சம்சாரம்தானே வாங்கி வந்தா? அவளே போய் எக்சேஞ்ச் பண்ணிக்கட்டுமே! நீர் ஏன் முழிக்கிறீர்?

கன்யாலால்: அப்படி இருந்துவிட முடியுமா புரொபஸர்ஜீ! குடும்பத்திலே நமக்கும் 'ரெஸ்பான்ஸிபிலிட்டி' இருக்கே! பணத்தை லாபம் பண்ண முடியலேன்னாலும் கூட அமைதியையாவது லாபம் பண்ணலாமே!

சாட்டர்ஜி: கேட்டுக்குங்கோ புரொபசர்ஜீ!

நீலகண்டன்: ஆமா ஆமா! உம்ம் க்ளாசிபிகேசன் பிரகாரம் இவரும் ஒரு குடும்பக் குதிரை!...

சாட்டர்ஜி: பல்தேவ்சிங்ஜி மாத்திரம் என்னவாம்? எஸ்பிளனேடிலே எல்லாம் மலிவாகக் கிடைக்கிறது என்று நேற்று வீட்டுக்காக எவ்வளவு அள்ளிக் கொண்டு வந்தார், தெரியுமா?

நீலகண்டன்: மிஸ்டர் சிங்! மார்க்கெட் விவகாரங்களை என்கிட்டேயும் சொல்லி வையுங்கோ!... புளி வாங்கிக் கொண்டு வந்தீரா? அதுதான் இப்போ மார்க்கெட்டிலே விலை இறங்கியிருக்கு! கிலோ ஐந்து ரூபாயிலிருந்து ஒண்ணே காலுக்கு வந்திருக்கு!...

பலதேவ்சிங்: புளி வாங்கலே புரொபசர்ஜீ! புள்ளி போட்ட தலையணை உறைகள், கைத்தறி உறைகள் மலிவாக இருந்தன. வாங்கி வந்தேன் ஒரு டஜன்!... ஹூம்!... ஆனால்...

நீலகண்டன்: என்ன பெருமூச்சு விடறீங்க? வீட்டிலே வந்து பார்த்தபோது புள்ளி இருந்த இடத்திலேயெல்லாம் ஓட்டையே இருந்ததா?

பல்தேவ் சிங்: அப்படி ஓட்டைகள் இருந்தால்தான் 'ஏர் கண்டிஷன் உறைகள்' என்று சொல்லிச் சமாளித்திருப்பேனே!...இல்லை!-- இல்லை!...நம்ப வீட்டுத் தலைகாணி ஒவ்வொன்றும் பாதிதான் அந்த உறைக்குள் போகிறது.

நீலகண்டன்: பலே! பலே!... சைஸ் பற்றிய ஐடியா இல்லாமல் அவசரப்பட்டு விட்டீர்!... பரவாயில்லே! இரண்டு பக்கமும் இரண்டு உறைகளை மாட்டிப் புது பாஷனை உண்டாக்கி விட்டுப் போம்!...

பல்தேவ் சிங்: இனிமேல் என்ன அலங்காரம் பண்ணிப் பிரயோசனம்? அசட்டுப் பட்டம் வாங்கியாச்சு!...

நீலகண்டன்: கேட்டீரா சாட்டர்ஜீ!... இந்த மாதிரி விவகாரங்களிலே நான் ரொம்ப ஜாக்கிரதையா யிருப்பேன். ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிப்பேன். இரண்டு தடவைக்கு மூன்று தடவை பேரம் பண்ணுவேன்! அதனால்தான் நான் வாங்கும் சாமான்கள் சோடை போகாது! மினிமம் விலை; மாக்ஸிமம் உபயோகம்!

(நீலா வேகமாக வருகிறாள்.)

நீலா (நீலகண்டனைப் பார்த்து): அப்பா! நேற்று ராத்திரி நீங்கள் வாங்கி வந்த பிளாஸ்டிக் கவரிலே....

நீலகண்டன்: பஸ்டுகிளாஸ் அரிசி வடாம்! கொள்ளை மலிவாக இருந்தது. விலையைத் தப்பிதமாகச் சொன்னானோ என்ற சந்தேகம். பேரம் பண்ணாமல் ரூபாயைக் கொடுத்து வாங்கி வந்தேன். நிறைய எண்ணெய் வைத்துப் பொரித்தால் மல்லிகைப் பூவாக மலர்ந்து பொரியும்... இன்றைக்கே உங்க அம்மாவைப் பொரிக்கச் சொல்...

நீலா: என்ன வடாம் என்று கேட்டீர்களா?

நீலகண்டன்: யாரை பார்க்க வெள்ளெழுத்தா? கோவில் வாசல் அப்பனக் கடையிலே தொங்க விட்டிருந்தான். வடாமாக இல்லாமல் மோட்டார் ஸ்பேர் பார்ட்ஸாகவா இருக்கும்? விலையைக் கொடுத்துத் தூக்கி வந்தேன்! மசாலா கலந்திருக்கானு?

நீலா: அப்பா!... அது புது மாதிரி சோப் சிப்ஸ்! துணிக்குப் போடற சோப்புத் தூள்! வடாம் மாதிரி தயாரிச்சிருக்கான். அம்மா அடுப்பிலே வைத்த அரை லிட்டர் தேங்காய் எண்ணெயும் கோவிந்தா! இப்போ வடாத்திற்குப் பதிலா அம்மாதான் பொரிந்து கொண்டிருக்கிறாள்!... (போகிறாள்)

(நீலகண்டனை மற்ற மூவரும் சிரித்துக் கொண்டே பார்க்கிறார்கள்.)

○✽○

''அட உங்க வீட்டிலே புதுசா டெலிபோன் வந்திருக்காப்போல இருக்கே!...அப்ப நான் வீட்டுக்குப் போய் உன் கூட டெலிபோன்லேயே பேசறேண்டி!''



○✽○

தவறாது உபயோகித்தால் போர்ஹான்ஸ் பற்பசை ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கிறது

சிறியோர், பெரியோர் யாவரிடமிருந்தும் தாமாகவே தேடி வந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும் தடுப்பதிலே போர்ஹான்ஸ் பற்பசையின் வியக்கத்தக்க வெற்றியைப் போற்றுகின்றன. இந்த நற்சாட்சிக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிட். கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.

"எங்கள் தயாரிப்பான போர்ஹான்ஸ் பற்பசையை நான் 18 ஆண்டுகளாக விடாது உபயோகித்து வருகிறேன். முன்பு...என் பற்களும் ஈறுகளும் மிக மோசமான நிலையிலிருந்தன. உதாரணமாக பயோரியாவும் பற்சிதைவும் சேர்ந்து எனக்கு வயிற்று வலியையும் சங்கடத்தையும் ஏற்படுத்தின... என் பற்களும் ஈறுகளும் கடந்த 18 ஆண்டுகளாக உன்னத நிலையில் இருந்து வருகின்றன—முற்றிலும் எல்லாம் போர்ஹான்ஸ பற்பசையின் செயலே".

—சங்கர் கே. கும்பார், பம்பாய்.

"கடந்த மூன்று மாதங்களாக எனக்குப் பல நோவு மற்றும் ஈறு வலியால் அவதி. உங்களுடைய போர்ஹான்ஸ் பற்பசையை நான் உபயோகிக்க ஆரம்பித்த பிறகு, என் பற்கள் அதி வெண்மையாக மின்னுகின்றன. பல்விலோ, ஈறிலோ வலியே இல்லை".

—என். சங்கர், ஆரணி.

போர்ஹான்ஸ்

பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

பற்களைத் தக்கமுறையில் பராமரிக்க இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் பற்பசையையும், போர்ஹான்ஸ் டபிள்–ஆக்ஷன் டூத் பிரஷையும் உபயோகியுங்கள்.... உங்கள் பல் வைத்தியரையும் தவறாது பார்த்து வாருங்கள்!



இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற வண்ணப் புத்தகம். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கிடைக்கும். இப்புத்தகத்தைப் பெற, (தபால் செலவுக்காக) 10 பைசா தபால் தலைகளை இக் கூப்பனுடன் அனுப்புங்கள்: மானேர்ஸ் டென்ட்டல் ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய் 1.

K. 6

பெயர் ____________________

விலாசம் ____________________

____

மொழி ____________ ____________

36 F-292 TAM

தொழில் தொழில் தொழில் தொழில்

மந்த நிலையை சமாளிக்க தொழில் நுட்பம் தேவைப்படுகிறது

எமது தொழிலிலும் மந்த நிலை கடுமையாகத்தான் இருக்கிறது. நாங்களும் மந்த நிலையை எப்படி சமாளித்து நிலைபெறச் செய்கிறது என்று கவலைப்படலாம். ஆனால் இண்டியன் ஆக்ஸிஜன் ஸ்தாபனத்தில் அப்படி ஓய்ந்துவிடுவது பழக்கமில்லை. தொழிலில் மந்த நிலை என்றாலே அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு விடுவோம். நாங்கள் இந்நிலையை சமாளிக்கும் முறைகள் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

உதாரணமாக எமது மார்கெடிங் பிரிவில் தென் கிழக்கு மற்றும் மேற்கு ஆசிய நாடுகளிலும் ஆப்ரிக்காவிலும் ஏற்றுமதி செய்வதை மேன்மேலும் அதிகரிக்க ஆராய்ச்சியை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

எமது என்ஜினியர்களும் விஞ்ஞானிகளும் விரிவான ஆராய்ச்சியின் மூலம் சிறப்பு மிக்க அநேக புதிய தயாரிப்புகளை உருவாக்கி அந்நிய செலாவணியை நிறைய சேமிக்க முயற்சித்து வருகிறார்கள். சென்ற ஆண்டில் மட்டுமே இறக்குமதி செய்யப்படவேண்டிய அநேக பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்து ரூ. 36 லட்சத்திற்கு அதிகமான அந்நிய செலாவணியை மிச்சமாக்கியிருக்கிறோம். தொழில் துறைகளுக்காக இந்நாட்டு மூலப் பொருள்களைக் கொண்டே இண்டியன் ஆக்ஸிஜன் முதன் முறையாகத் தயாரித்து வழங்கிய புத்தம் புதிய தயாரிப்பு வெல்டிங் வேலைக்காகவுள்ள இண்டார்க் ஈஎம்ஆர் 300 ஸெலேனியம் ரெக்டிஃபையர் செட், இண்டார்க் ஸப்மர்ஜ்ட் ஆர்க் வெல்டிங் வயர் மற்றும் ஃப்ளூஸர்க்/ஸிஓ2 ஆடோமாடிக் ஆர்க் வெல்டிங் வேலைக்கான தொடர்பான கவசமுள்ள எலக்ட்ரோடு முதலியவை.

இந்தியத் தொழில்களில் உற்பத்தியை அதிகரிக்கவும், தயாரிப்பு நுட்பங்களை அபிவிருத்தி செய்யவும் சிறப்பாக உதவும் வகையில் ஆக்ஸிஜன், நைட்ரொஜன் மற்றும் இதர வாயுக்களுக்கு புதிய உபயோக முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இன்னும் அநேக துறைகளில் புதிய சிருஷ்டிகள் தொழில் திறமையை விருத்தி செய்து, தொழில் மந்தத்தின் விளைவுகளை ஜயிக்க உதவுகின்றன.

இந்தியப் பொருளாதாரத்திற்கு சேவை புரிவதில் அநேக மார்க்கங்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இண்டியன் ஆக்ஸிஜன் தன்னுடைய எதிர்கால வளர்ச்சியில் மட்டுமின்றி நாட்டின் எதிர்கால மேன்மையிலும் நம்பிக்கை வைத்திருக்கின்றது.

IOL இண்டியன் ஆக்ஸிஜன் லிமிடெட்



தோல்வி

ருக்மிணி பார்த்தசாரதி

அப்பப்பா! என்ன ராட்சசக் குளிர்! கால் கைகள் பனிக் கட்டியால் உறைந்துவிட்டன. விரல்கள் சிவக்கச் சிவக்க வீங்கி விட்டன. தற்செயலாய்க் குழந்தை கைமேல் மோதினாலும் வலி தாங்க முடியவில்லை. இந்த ராஞ்சி நகரின் கஷ்டமே இதுதான். வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள் திடீர் திடீரென்று மழை பெய்யும். வெய்யில் கால மழை வரப்பிரசாதமாய்த் தோன்றும். ஆனால் குளிர்கால மழையோ இதயமற்ற எஜமானனைப்போல் வாட்டி எடுத்துவிடும்.

கடந்த இரண்டு நாட்களாய் விடாத மழை. ராஞ்சியில் அக்டோபரில் ஆரம்பிக்கும் குளிர் மார்ச் முடியும்போதுதான் அகல்கிறது. இதுவோ ஜனவரி மாதம்! நான் புடவைக்குமேல் ஸ்வெட்டர், அதற்கு மேல் சால்வை, கால்களில் மேஜோடு அணிந்திருந்தேன். இருந்தும் குளிரில் உடல் நடுங்கிற்று. சமைப்பது இந்தக் குளிரில் இதமான காரியம்தான். ஆனால் அடுப்பின் தகதகப்பினால் கூடப் பல்நடுக்கம் பூரணமாய் அகலவில்லை.

காலை எட்டு மணி.

குளியலறைப் பக்கம் பார்வையைப் பதித்தேன். மோனிகா பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தாள். காதுகளையும் கழுத்தையும் மூடியபடி ஒரு நூல் சவுக்கம். சாதாரண நூல் ரவிக்கைதான். ஜில்லிட்டிருந்த நீரைத் தெளித்து, கைகளை அழுத்தி அவள் பித்தளைப் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்தாள்.

மோனிகா இங்கே முன்பு எப்பொழுதோ குடியேறிவிட்ட ஆதிவாசிகளைச் சேர்ந்தவள். இரண்டு தலைமுறைகளாகின்றன, அவர்கள் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்து. இப்பொழுதெல்லாம் அவர்களை யாராவது தப்பித் தவறி ''ஆதிவாசிகள்'' என்று அழைத்துவிட்டால், கண்களில் சீற்றம் கொப்புளிக்க அவர்கள், ''எங்களை 'கிறிஸ்டியன்ஸ்' என்று கூப்பிடு!'' என்று வெடிக்கும் அளவுக்குக் கிறிஸ்துவ மதத்தில் ஊறிவிட்டார்கள்.

மோனிகாவுக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் இருபத்தைந்து வயது இருக்கலாம். ஆனால் பதினாறு வயதில் மணமாகி, நான்கு மக்களைப் பெற்று மூவரைச் சாகக் கொடுத்தவள் அவள். பார்க்க இன்னும் பதினாறு வயதுப் பெண்ணைப் போலத்தான் இருந்தாள். ஒற்றை நாடியான சரீரம், குழந்தை முகம். நான்கு மக்களைப் பெற்றவள் போலவோ இன்னும் ஆறு மாதங்களில் ஐந்தாவது குழந்தைக்குத் தாயாகப் போகிறவள் போலவோ இல்லை, அவளைப் பார்த்தால்....

அவள் பாத்திரம் தேய்த்து முடித்த போது சுடச்சுட ஒரு தம்ளர் தேநீரை அவளிடம் கொடுத்தேன்.

அதை அவள் ஆவலோடு வாங்கிக் கொண்டாள்..... சற்று மறைவாகப் போய் நின்று கொண்டு சொட்டுச் சொட்டாகப் பருகினாள். அவள் நின்றிருந்த இடத்தில் மழை பனிக்கட்டிகளை அர்ச்சனை செய்தது. இருந்தும் தேநீரின் சூட்டில் அவள் அதைப் பொருட்படுத்தாதவளாய் நின்றிருந்தாள்.

இங்கோ, ஸ்வெட்டர், சால்வை, மேஜோடு அணிந்து, அடுப்பின் முன் நின்று கொண்டு நான் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தேன்.

சட்டென்று என் மனத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. பெட்டியில் இரண்டு ஸ்வெட்டர்கள் இருக்கின்றன..... அவற்றில் ஒன்றை இவளுக்குக் கொடுக்கலாம்.... ஒரு நல்ல காரியம் செய்த நிறைவு மனத்தில் நிலைக்கும்.

''மோனிகா! நீ மத்தியானம் வரும்போது ஒரு ஸ்வெட்டர் தருகிறேன்!'' என்றேன். அவள் முகம் மலர்வதைக் காண வேண்டும் என்ற ஆசை எனக்கு. என் ஆசை வீண் போகவில்லை. அவள் முகம் ரோஜா மலராய் மலர்ந்து அழகு சிந்திற்று.

குழந்தைகள் பள்ளிக்குப் போய்விட்டார்கள். எனக்கும் உள் வேலை முடிந்துவிட்டது. மோனிகா மறுபடியும் மத்தியானம் இரண்டு மணிக்கு வருவாள். அதற்குள் ஸ்வெட்டரை எடுத்துத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

பெட்டியைத் திறந்து அந்த இரண்டு ஸ்வெட்டர்களையும் வெளியே எடுத்தேன். எதை அவளுக்குக் கொடுக்கலாம்?



''நான் ரமேஷைக் காதலிக்கிறேன் என்ற சங்கதியைத் தெரியாத்தனமா பூமா, லக்ஷ்மி பிரேமா, ஜெயஸ்ரீ, ஜானகி, பார்வதி, சாந்தா இத்தனை பேரிடத்திலேதான் சொன்னேன். எப்படியோ விஷயம் எங்க அப்பா காதுக்கு எட்டிக் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்யத் துணிஞ்சுட்டாரடி! இப்ப என்னடி செய்யறது?''

முதல் ஸ்வெட்டர் கையில் கொஞ்சம் கிழிந்திருந்தது. பரவாயில்லை. தைத்துவிடலாம்..... தையல் கொஞ்சம் வெளியே தெரியும். ஆனால் குளிருக்கு அடக்கமாய் இருக்குமே !

மற்றொன்றைப் பிரித்தேன். கருநீலத்தில் புது ஸ்வெட்டர் பின்னின கையோடு நான் அதைத் தண்ணீரில் போட்ட போது ''கப்'' பென்று சுருங்கிவிட்டது. மட்டரக ''உல்'' ஆனால் அதன் அளவு மோனிகாவைப் போன்ற ஒற்றை நாடிச் சரீரத்துக்குச் சரியாயிருக்கும்.

எதை அவளுக்குக் கொடுக்கலாம்?

கையில் கிழிந்த பழைய ஸ்வெட்டர் ஒன்று. வெளிர் நீலப் பொத்தான் பளபளக்கும் புது ஸ்வெட்டர் மற்றொன்று.

எதைக் கொடுக்கலாம் ?

புதிதையே பெறும் தகுதி மோனிகாவிடம் இருந்ததை நான் உணர்ந்தேன்.... கிறிஸ்துமஸின் முதல் நாளன்று லீவு வேண்டும் என்று கேட்டிருந்தவள், அன்று எங்கள் வீட்டுக்கு யாரோ சாப்பிட வருகிறார்கள் என்று அறிந்ததும், ''தனியாய் விருந்துச் சாப்பாடு தயார் செய்ய வேண்டுமே, நீங்கள் ! பாத்திரம் தேய்க்க உங்களுக்கு நேரம் இருக்காது. நான் லீவு எடுத்துக் கொள்ளவில்லை!'' என்று வேலைக்கு ஆஜரானாள். இந்த நல்ல மனத்துக்கு நான் எதைக் கொடுத்தாலும் ஈடாக முடியாது.

இரண்டு ஸ்வெட்டரையும் கையில் எடுத்துப் பார்த்தேன். அவற்றின் வெதுவெதுப்பை ஸ்பரிசித்தேன். வெது வெதுப்பு! பழையதானால் என்ன, புதிதானால் என்ன? வெதுவெதுப்பு இரண்டுக்குமே சொந்தம். இந்தக் குளிரில் அதுதானே முக்கியம் !

பழைய ஸ்வெட்டரைப் பிரித்துக் கிழிந்த இடத்தைத் தைத்தேன். இது போதும் மோனிகாவுக்கு. குளிருக்கு அடக்கமாக இருக்கும். புதிதைப் பிரித்தால் என் பிள்ளைக்கு ஒரு ''ஸ்லீவ்லெஸ்'' பின்னிவிடலாம். ''உல்'' விலைதான் இப்போதெல்லாம் நயமாயிருக்கிறதா? பௌண்ட் நாற்பது ரூபாய் !

மத்தியானம் வேலைக்கு வந்த மோனிகாவிடம் பழைய ஸ்வெட்டரைக் கொடுத்தேன். அவள் வாங்கிக்கொண்டு நமஸ்கரித்தாள்.

ஃ ஃ ஃ

இரண்டரை மணிக்கு வானம் வெளுத்து விட்டது. மூன்று மணிக்கெல்லாம் நல்ல வெய்யில் !

மூன்றேகால் மணிக்கு என் சிநேகிதை ஒருத்தியின் பெண் வித்யா என் மக்களோடு விளையாட வந்தாள். வெய்யில் காயும் தைரியத்தில் ஸ்வெட்டர் அணியாமல் வந்திருந்தாள்.

மாலை பொழுது மங்க, மங்க, காற்றில் மறுபடியும் குளிர்ச்சி !

வித்யா குளிரில் நடுங்குவதைப் பார்த்து விட்டு நான் அந்தப் புது ஸ்வெட்டரை எடுத்து வந்து அவளுக்கு அணிவித்தேன். அவள் சிவந்த நிறத்துக்குப் பொருத்தமாயிருந்தது. வெளிர் நீலப் பொத்தான் பளபளக்கும் கருநீல ஸ்வெட்டர் !

சுமார் ஏழு மணிக்கு வித்யாவின் அண்ணன் அவளை அழைத்துப் போக சைக்கிளில் வந்தான். அவள் இல்லம் செல்லக் கிளம்பினாள்.

''இதென்ன வித்யா ? மாமி வீட்டு ஸ்வெட்டரோடு ஜம்னு கிளம்பறியே !'' என்றான் அவன்.

''இருக்கட்டும். நாளைக் காலை கொடுத்தால் தீர்ந்தது..... இப்போது அவள் ஸ்வெட்டரைக் கழற்றினால் இந்தக் குளிரில் ஜலதோஷம் பிடிக்கும்!'' என்று சகோதரனையும் சகோதரியையும் அனுப்பி வைத்தேன்.

ஆனால் மறுநாள் காலை சுமார் ஒன்பது மணிக்கு வந்த வித்யா ஸ்வெட்டரோடு வரவில்லை, கண்ணீரோடு வந்தாள்.

விஷயம் இதுதான். சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து வந்து கொண்டிருந்தவள், அண்ணனோடு பேசும் சுவாரசியத்தில் கையிலிருந்த ஸ்வெட்டர் நழுவிக் கீழே விழுந்ததைக் கவனிக்கவில்லை. என் வீட்டுக்கருகே வந்த போதுதான் ஸ்வெட்டர் இல்லாததைக் கவனித்தாள். திரும்பிப் போய் வழியெல்லாம் தேடின போது அது கிடைக்கவில்லை. யார் கையில் கிடைத்ததோ ? இப்போது என்னிடம் விஷயத்தைச் சொல்லப் பயத்தோடு அவள் வந்திருந்தாள்.

''போனால் போகிறது? இதற்கா அழுகை? கண்ணைத் துடைத்துக் கொள்!'' என்று அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பினேன்.

மறு நாள் வேலைக்குவந்த மோனிகா, ''மேம்சாஹேப்! நீங்கள் எனக்கு ஸ்வெட்டர்

கொடுத்த வேளை, எனக்கு இன்னொரு ஸ்வெட்டர் கிடைத்திருக்கிறது!'' என்றான்.

என் மனத்தில் சட்டென்று ஏதோ விழிப்பு ஏற்பட்டது. ''ஸ்வெட்டரா? கிடைத்ததா ?'' என்றேன்.

''ஆமாம்...நேற்று நான் வீதியில் போன போது காலில் இடறிற்று. புத்தம் புதிய கருநீல ஸ்வெட்டர். பளபளக்கும் வெளிர் நீலப் பொத்தான்கள். யாருடையதோ ?''

நான் பதில் சொல்லவில்லை. இதயத்தில் ஏதேதோ உணர்ச்சிகள் ஏற்பட்டன.

''ஸ்வெட்டரைக் கையில் எடுத்த போது இதைத் தொலைத்துவிட்டு இந்தக் குளிரில் யார் அழுது கொண்டிருக்கிறார்களோ என்று தோன்றிற்று. அருகிலிருந்த வீடுகளிலெல்லாம் விசாரித்தேன். யாருமே தனதென்று சொல்லவில்லை. அதை எடுத்துக் கொண்டு நடந்தேன். ஏனோ அது கையில் கனத்தது ! கடைசியில் மாதா கோயிலுக்குப் போய், சிலுவைக்குமுன் அதை வைத்துவிட்டு, ஒரு காகிதத்தில் ''சரி'' என்றும், மற்றொன்றில், ''தப்பு'' என்றும் எழுதி, காகிதங்களைக் குலுக்கி ஒன்றை எடுத்தேன். ''சரி !'' என்று வந்தது. ''சரி'' என்று ஏசுநாதன் சொல்லி விட்டதால் அதை நான் வைத்துக் கொள்வதில் தவறில்லை என்று தெளிந்தேன்!''

தெய்வ சித்தமா அது?

ஆம். தெய்வசித்தம்தான். அவன் வணங்குவது ஏசுநாதனும் நான் வணங்குவது ஸ்ரீராம பிரானுமாக இருந்தாலென்ன ? தெய்வம் ஒன்றுதான். அதன் சித்தம் இதுதான்.

மோனிகாவின் நல்ல மனத்துக்கு இது ஏற்ற பரிசு. கிறிஸ்துமஸின் முதல் தினம் என் கஷ்டத்தைக் கண்டு, தன் கஷ்டம் பாராமல் அவன் பாத்திரம் தேய்க்க வந்தானே, அதற்கு இது தகுந்த வெகுமதி.... ஆயினும் என் மனத்தில் இன்பமில்லை. நானுக அதைக் கொடுத்திருக்கக் கூடாதா? கிழிந்த ஸ்வெட்டரைக் கொடுத்து விட்டு அவன் நன்றியைப் பெற்றுக் கொண்டேனே, அதற்குப் பதில் அந்தப் புதியதைத் நிறைந்த மனத்தோடு கொடுத்திருக்காகாதா ? நான் தோற்று விட்டேன் !

பெர்க்லி - கல்கி இலக்கியப் பரிசுத் திட்டம்

அமரர் கல்கி அவர்கள் சரித்திரக் கதைகள், சமூகக் கதைகள், நகைச்சுவைக் கதைகள் ஆகியவற்றை எழுதுவதற்கு இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கியவர். அன்னாரது நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அமெரிக்காவில் இயங்கும் பெர்க்லி தமிழ்ச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்தச் சிறுகதைப் போட்டியினை நடத்துகிறது கல்கி ஸ்தாபனம்.

சமூகச் சிறுகதைகள், சரித்திரச் சிறுகதைகள், ஹாஸ்யச் சிறுகதைகள் என மூன்று வகையான கதைகளை எழுத்தாள அன்பர்களிடமிருந்து வரவேற்கிறோம்.

சமூகச் சிறுகதைகளில் முதல் பரிசு ரூ. 1000; இரண்டாவது பரிசு ரூ. 500; மூன்றாவது பரிசு ரூ. 250.

இதேபோல் சரித்திரச் சிறுகதைகளுக்கும் ஹாஸ்யச் சிறுகதைகளுக்கும் முதல் இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் தனித் தனியே உண்டு. ஆக மொத்தம் ரூ. 5250 பரிசுத் தொகையாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

ஒருவர் எத்தனை சிறுகதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

கல்கியில் ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்குள் அடங்குகிற மாதிரி சிறுகதைகள் அமைந்திருப்பது நலம்.

பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவனவற்றுக்கு வழக்கமான சன்மானம் உண்டு.

சிறுகதைகளின் உரிமைகள் அனைத்தும் சிறுகதைகளின் ஆசிரியர்களுக்கே உரியன. முதன் முதலாகக் கல்கியில் வெளியிடும் உரிமை ஒன்று மட்டுமே கல்கி ஸ்தாபனத்துக்கு உரியது.

இலக்கியத் துறையில் பிரபலமானவர்கள் பஞ்சாயத்தார்களாக இருந்து பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்தப் போட்டி சம்பந்தமான எவ்விஷயத்திலும் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதுமான தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டும். இலங்கை எழுத்தாளர்கள் இண்டர் நேஷனல் போஸ்டல் கூப்பன் அனுப்ப வேண்டும்.

போட்டி சம்பந்தமாக எந்தவிதமான கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

மொழிபெயர்ப்போ தழுவலோ அல்ல என்பதைக் குறிப்பிட்டு ஆசிரியர், கல்கி காரியாலயம், சென்னை-10 என்ற விலாசத்துக்குக் கதைகளை 15-7-68க்குள் அனுப்ப வேண்டும்.

உறையின் மீது 'பெர்க்லி—கல்கி இலக்கியப் பரிசுத் திட்டம்' என்றும், ஹாஸ்யச் சிறுகதை, சமூகச் சிறுகதை, அல்லது சரித்திரச் சிறுகதை என்றும் குறிப்பிடுதல் அவசியம்.

எழுத்தாள அன்பர்களின் முழு ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

வட்டமேஜை

- மோஷே! மோஷே!
- எதிர்க் கட்சி எதற்கு?
- 'டு' விடுவோம்!
- 'அவள்' பிறந்த கதை!

மோஷே! மோஷே!—பார்த்தீர்களா, சம்பிரதாயத்தைக்கூட மறந்து நமஸ்காரம் சொல்லாமல், ''மோஷே'' சொல்லத் தோன்றி விட்டது! 'அனுபவம் புதுமை'யைப் படித்ததுமே அதன் அமைப்பும், விஷயத் தெளிவும் ஒரு வரியாவது எழுதத் தூண்டிவிட்டன. மிக நன்றாகத் தொடங்கியுள்ள தொடர் பயணம் சுவையும் நிறைந்த கட்டுரைகளாக மலருமென்று ஆவலோடு எதிர்பார்க்கலாம். அதற்குக் கட்டியம் கூறியாகி விட்டது.

ஸ்ரீரங்கம்
29-2-68 ஏ. எஸ். ராகவன்

''அனுபவம் புதுமை'' ஜெட் விமான வேகத்தில் செல்கிறது. தயவுசெய்து அதை நம் ஊர் மோட்டார் வண்டி வேகத்துக்கே கொண்டு வந்தால் படிக்க இன்னும் ருசியாக இருக்கும். என்ன அவசரம்?

சென்னை — 20
29-2-68 நாடோடி

சென்ற 25-2-68 இதழின் என்னசேதி பகுதியில் ஏன் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் ஆளுங்கட்சியுடன் சேர்ந்து பல சந்தர்ப்பங்களில் வாக்களிக்கிறார்கள் என்று அழகாகக் காரணம் காட்டியிருக்கிறீர்கள். ஆளுங்கட்சி தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டுவிடக் கூடாதே என்பதற்குத்தான் எதிர்க்கட்சியே தவிர ஆளுங்கட்சி கொண்டு வந்த எல்லா விஷயங்களையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் வேலை என்பதல்ல என்று விளக்கியது சுதந்திரக்கட்சியின் விவேகத்தைக் காட்டுகிறது.

மதுரை — 1
1-3-68 பார்வதிமணாளன்

மொரார்ஜி மாமாவுக்கு நாலு வருஷங்களுக்கு ஒரு தடவைதான் பொறந்த நாள் வருமாம். ஏன்னா அவர் பிப்ரவரி 29ந் தேதி பிறந்தார். அதிலே இன்னொரு விஷயம் கவனிச்சேளோ? பிப்ரவரி கடைசிலேதான் மத்திய சர்க்கார் பட்ஜெட் வெளிவர்றது. அதாவது அன்னிக்குத்தான் நிறையப் புது வரிகள் போடுவார். மொரார்ஜி மாமாதான் அதைப் பார்லிமெண்டிலே வெளியிட்டார். அவர் தன்னோட பொறந்த நாளன்னிக்குக் குழந்தைகளுக்கெல்லாம் என்ன பரிசு கொடுத்திருக்கார் தெரியுமோ? மிட்டாய் மேலேயும் சாக்லேட் மேலேயும் இன்னும் அதிக வரி போட்டிருக்கார்! அப்படின்னா என்ன அர்த்தம் தெரியுமோ? ஏற்கனவே மூக்காலே அழுதுண்டு மிட்டாய் வாங்கிண்டு வர அப்பா, இனிமே அது இருக்கிற பக்கம்கூடப் பார்க்கமாட்டார்ங்கிறதுதான்!

நாம எல்லாருமாச் சேர்ந்து மொரார்ஜி மாமாவோட 'டு' விட்டுட வேண்டியதுதான்!

சென்னை — 33 இப்படிக்கு,
4-3-68 'வாண்டு'

கசப்பானாலும் ஓர் உண்மையை எடுத்துக் காட்டுவது என் கடமையென்று இக்கடிதம் எழுதுகிறேன். 25—2—68 கல்கி இதழில் வெளியான ஸ்ரீமதி எம். எஸ். கமலாவின் 'அவள்' என்னும் கதை 'ஆந்திரப்பிரபா'வின் 29—11—67 இதழில் ஸ்ரீ முடிகொண்ட சிவப்பிரசாத் எழுதிய 'சைலஜா' என்னும் தெலுங்குக் கதையின் அப்பட்டமான பிரதிபலிப்பாகும். மூலக் கதையையும் ஆசிரியரையும் மறைத்து ஆசிரியை இக்கதையைச் சொந்தம் பாராட்டித் தம்முடையதாக்கிக் கொண்டிருப்பது விரும்பத்தக்கதல்ல.

சென்னை—5
27—2—68 எம். வேங்கடகிருஷ்ணன்

விளக்கம் கேட்டு எழுதியதற்கு ஸ்ரீமதி எம். எஸ். கமலா அளித்துள்ள பதில் வருமாறு:

இரண்டு மாதங்களுக்குமுன் விசாகப்பட்டினம் சென்று கொண்டிருந்த போது ரயிலில் முந்திரிப்பருப்பு வாங்கிய காகிதத்தில் சுவையான கதைப் பகுதி கிடைத்தது. கதையின் தலைப்புப் பெயரோ, கதாசிரியரின் பெயரோ கிடைக்கவில்லை. கதை மனத்தில் சுழன்றது.

''அவளை''த் தீட்டினேன். இதுதான் ''அவளி''ன் படைப்பு. ஸ்ரீ முடிகொண்ட சிவப்பிரசாதின் 'சைலஜா' என்று தெரிந்திருந்தால் பெருமையுடன் மொழிபெயர்ப்பில் கூறியிருப்பேன்.

சென்னை — 4
7—3—68 எம். எஸ். கமலா

உண்மையை விளக்க வைத்தமைக்கு ஸ்ரீ வேங்கடகிருஷ்ணனுக்கும், தமிழுக்கு ஒரு தெலுங்குக் கதையை வழங்கிய முந்திரிப்பருப்புக் காகிதத்துக்கும் நன்றி. - ஆசிரியர்.

தங்கள் 10-3-68 கல்கி இதழில் வெளியான இவர்கள் இன்னமும் படிக்கிறார்கள் என்ற கட்டுரை வேலை பார்த்துக் கொண்டே டி. காம் (D. Com) தேர்வுக்கு முயன்று கொண்டிருக்கும் எனக்குப் புத்துணர்ச்சியையும், புதிய உற்சாகத்தையும் அளித்துள்ளது.

மதுரை
9—3—68 கு. நல்லபெருமாள்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

புத்தம் புதிது!



போஷாக்கு நிறைந்தது...

நயமான சுவைதந்து திருப்தியளிக்கிறது





வாழ்க்கையை இனிமையாக்குவது காட்பரிஸ்!


REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon


இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி


முதன்மையில் நிலைப்பீர் மாஸி-பர்கூஸனுடன்

















இந்தியாவிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் மற்றெந்த டிராக்டரைக் காட்டிலும் மாஸி-பர்கூஸன் 1035 டிராக்டரைப் பெரிதும் விரும்புகிறார்கள். ஏனெனில் இது மிகுந்த சக்தி கொண்டது. சிக்கனம் வாய்ந்தது. பல வகையில் பயன் அளிப்பது. உலகப் புகழ் பெற்ற பர்கூஸன் முறையைக் கொண்ட டிராக்டர் இது ஒன்றே.

மாஸி-பர்கூஸன் 1035 டிராக்டரும், கருவிகளும், விற்பனைக்குப் பின் விரிவான சேவை அளிக்கும் சீரிய ஏற்பாடுகள் கொண்ட, நாடு முழுதும் பரவியுள்ள விற்பனையாளர் அமைப்பின் ஆதரவைக் கொண்டுள்ளன.

TAFE

டிராக்டர்ஸ் அண்டு ஃபார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட், மதறாஸ்

T24A